www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

நவ.24–30,1996

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 180

## அதிரடி முற்றுகை

### மாறிவரும் உத்திகள்






படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## "வீடு கொடாதீர்"

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வடக்கு-கிழக்கு மக்களை
அந்தப் பகுதிகளுக்கு
வெளியே நடமாட விடுவதே
ஆபத்து என்பது போலவே
பாதுகாப்பு விதிகள்
போடப்பட்டு வருகின்றன!

தலைநகரில் தமிழ் மக்களுக்கு
வீடுகள் கொடுக்கப்படுவது
தேசத்துரோகம் என்று
கருதப்படுமளவுக்கு
தேசிய தொலைக்காட்சியில்
ஒரு நிகழ்ச்சி காண்பிக்கப்பட்டது!

பணத்திற்காக ஆசைப்பட்டு
பயங்கரவாதிகளுக்கு
வீடு கொடுக்காதீர்கள்
என்பதுதான் பிரசாரம்!

"சாதாரண தமிழ் மக்களுக்கு
வீடு கொடுக்க வேண்டாம்
என்று சொல்லவில்லையே?"
என வாதம் செய்யலாம்!
உண்மை அதுவல்ல!

குறிப்பிட்ட பிரசாரங்களை
அவதானிக்கும் எவரும்
தமிழர்களுக்கு வீடுகொடுக்கத்
தயங்கவே செய்வர்.

கொழும்பில் புலிகள் தங்கியிருந்த
வீடுகளைக் காண்பிக்கிறார்கள்.
குறைந்த வசதியுள்ள வீடுகளுக்கு
நிறைந்த வாடகை கொடுத்தார்களாம்!

இடம்பெயர்ந்து வந்து
கொழும்பில் குடியிருக்கும்
சாதாரண தமிழ மக்களில்
தாம் குடியிருக்கும் வீடுகளின்
தரத்திற்கு ஏற்ப வாடகை கொடுப்போர்
எவரும் இருப்பதாகத் தெரியவில்லை!
அறா வாடகைதான் அறவிடப்படுகிறது!

அப்படிக் குடியிருக்கும்
தமிழர்கள் யாவரும்
புலிகள் என்றா அர்த்தம்?

தேசிய தொலைக்காட்சிக்கு
போதுமான உண்மைத் தகவல்கள்
கிடைப்பது அரிதாகிவிட்டதோ
என்று சந்தேகமாக இருக்கிறது!

கொழும்பில் தங்கியிருந்த புலிகள்
எவருமே தம்மை
அடையாளம் காட்டி
வீடுகளில் குடியேறவில்லை!
பிரச்சனை வருமென்று தெரிந்து
யாரும் தமது வீட்டை
வாடகைக்கு விடமாட்டார்கள்!

வீட்டு உரிமையாளர்கள்
என்ன புலனாய்வுத் துறையினரா-
புலிகளா இல்லையா
என்று கண்டுபிடிப்பதற்கு?

'பயங்கரவாதிகளுக்கு
வீடு கொடாதீர்' என்று
அவர்களிடம் சொன்னால்
அதன் அர்த்தம் என்ன?
அவர்கள் எப்படிக் கண்டுபிடிப்பார்கள்?

ஒரே ஒரு வழிதான் உண்டு:
தமிழர்களுக்கு வீடு கொடுக்காமல்
இருப்பதுதான் அந்த வழி!

அதனைத்தான் பிரசாரங்களில்
நேரடியாகச் சொல்லாமல்
சுற்றிவளைத்துச் சொல்கிறார்கள்!

கொழும்பில் வாழும்
வெளிமாகாணத் தமிழர்கள்
பொலிசில் பதிவு செய்துதான்
வீடுகளில் குடியிருக்கிறார்கள்!

புலிகள் அல்ல என்று
உறுதிப்படுத்திக் கொண்டுதானே
பொலிசார் பதிவு செய்கிறார்கள்!

பதிவு செய்தபின்
சந்தேகம் ஏற்பட்டால்கூட
பின்னர் விசாரணை செய்யவும்
பொலிசாரிடம் விபரம் இருக்கிறதே!

பொலிஸ் நிலைய
படிக்கட்டைக் கடக்காமல்
வெளிமாகாணத் தமிழர்கள்
கொழும்பிலுள்ள வீடுகளுக்குள்
குடிபுக முடியாது!

குடிபுக வருவது
புலிகளா இல்லையா
என்பதை பொலிசார்
கண்டறிந்து கொள்ளட்டும்!
அந்தப் பொறுப்பை
வீட்டு உரிமையாளர்களுக்கு
வழங்குவது முறையாகாது!

அப்படி வழங்கப்படுவதும்
வீட்டு உரிமையாளர்களை எச்சரிப்பதும்
'தமிழர்களுக்கு வீடு இல்லை' என்று
விளம்பரப்பலகை
போடச் சொல்வதற்குச் சமன்!

இவ்வாறான நிலை தொடர்வது
'இன ஒற்றுமை', 'ஐக்கியம்',
'எல்லோரும் இந்நாட்டு குடிமக்கள்'
என்ற பேச்சுக்களை
அர்த்தமில்லாமல் செய்துவிடும்!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## தெய்வ பயம்

கர்த்தருக்குப் பயந்திருப்போம்: ஏனெனில் இளைப்பாறுதலுக்கு ஏதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க, நம்மில் எவனும் பின்வாங்கிப் போனவனாகக் காணப்பட்டால் (எபி 4:1) நாம் பரிதபிக்கப்பட வேண்டியவர்களே. தேவன், பயங்கரமானவர், எரிச்சலுள்ளவர், என்பதனால் அவருக்குப் பயப்படுவதல்ல தெய்வ பயம். அவர் நம்மை நேசிப்பதால், வருஷம் முழுவதும் எம்மேல் தம் கண்களை வைத்து வழி நடத்துவதால், திரும்பத் திரும்ப நம்மை கிருபை பாராட்டி நம்மை அணைப்பதால் நாம் அவருக்குப் பயப்பட வேண்டும். கர்த்தர் நல்லவர்.

"நீ உன் தேவனாகிய கர்த்தரை விடுகிறதும் என்னைப் பற்றும் பயம் உன்னிடத்தில் இல்லாமலிருக்கிறதும் எத்தனை பொல்லாப்பும், கசப்புமான காரியம் என்று உணர்ந்து கொள்" என்கிறார் கர்த்தர்.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு திட நம்பிக்கையுண்டு. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு தாம் தெரிந்து கொள்ளும் வழியை அவர் போதிப்பார். எனவே மாம்சிக பயத்தை அகற்றி தெய்வ பயத்துடன் அவர் கிருபையை நினைந்து அவரைக் கிட்டிச் சேரக் கடவோம்.

தி.பெ. தேவபாலன், மட்டக்களப்பு.

## பிறருக்கு உதவி செய்!

உபகார சிந்தனையோடு மனிதன் ஆற்றும் சிறு சிறு காரியங்களும் அவனுடைய ஈமானைப் பலப்படுத்தும் உயர் காரியத்தைச் செய்கின்றது. ஒரு பக்கம் பிறருக்கு உபகாரம் செய்வதால் மனதுக்கு இன்பம்; இன்னொரு பக்கம் நம்முடைய ஈமான் வலுப் பெறுகின்றது.

மனம் இறுக்கமடையும்போது (Tention)அது இளகுவதற்கு உரிய சிறந்த வழி. பிறருக்குப் பயன்படும் வண்ணம் நம் நடத்தைகளை அமைத்துக் கொள்வதே!

மிகப் பெரும் உதவிகளைத் தான் செய்ய வேண்டுமென்பதில்லை. நடமாட்டம் உள்ள பாதையில் கிடக்கும் ஒரு சிறு முட்செடியைப் பிடுங்கி எறிவது கூட மனதுக்குச் சாந்தியளிக்கும் காரியம்தான்.

இறை நம்பிக்கை, இறை விசுவாசம் என்பதற்கு வழிபாடுகள் மட்டும் தான் சொந்தம் என்பதில்லை. அதன் கிளைகளும் பிரிவுகளும் அதிகமதிகம். தவறான, மானக்கேடான, அசிங்கமான காரியங்கள் செய்யாது வெட்கமுற்று ஒதுங்கியிருப்பது கூட இறை விசுவாசத்தின் ஒரு பகுதியே! பெருமானார் (ஸல்) குறிப்பிடுகிறார்கள்:

இறை விசுவாசத்துக்கு எழுபது சொச்சம் கிளைகள் உள்ளன. அதில் மிகச் சிறந்தது "இறைவன் ஒருவனே" என்று விசுவாசம் கொள்வது. மிகக் குறைந்தது பாதையில் கிடந்து இடைஞ்சல் கொடுக்கும் பொருளை அப்புறப்படுத்துவது. வெட்கமுறுதலும் கூட இறை விசுவாசத்தின் ஒரு கிளையே! (நூல்-புகாரி)

கும்புக்கந்துறை, மௌலவி அனீஸ் எம். ஷாகிர்.

## கவிதைப் போட்டி இல.177

### பரிசுக்குரிய கவிதை

### கருணைக்குச் சான்று

பூ பிஞ்சு காய் என்று
போர் மென்று துப்பியதால்
வாழ்விக்க வாதாடும்
வைத்தியத்தின் கருணைக்கு
வையத்தில் சான்றிதுவோ?

தர்ஷிக்கா கனகசிங்கம்,
கல்லடி, மட்டக்களப்பு.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



**இனி....**

ஆராரோ யார்நீரோ?
அனாதையாய்
ஆனவரோ?
அகதியாய்
போனவரோ?
'பந்தாட' போறீரோ!

சுபா வரன்-கண்டி.

**தொடரும் துயர்**

இரக்கமற்ற இதயங்கள்
இவ்வுலகில் இருக்கும்வரை,
அரக்கத்தனம் அரசோச்சும்!
அனர்த்தங்கள் பல விளையும்!
தொட்டில் குழந்தையும்
துயருக்கு ஆளாகி
கட்டுக் காயமுடன்
கண் விழிக்க வேண்டிவரும்!

திருமதி யோகாம்பாள் தம்பித்துரை-
பதுளை.

**முன்னேற்றம்**

என்ன..!
கருவறையிலும்
கலவரமா..?

எஸ்.பிரபா-கொக்காகல.

**இ(செ)யற்கை சுவாசம்**

இயற்கைச் சுவாசம்
இரத்த வாடை வீசுது!
செயற்கைச் சுவாசமே
என் மூச்சுக் கேட்குது!!

செல்வி ப்ரியநேசி-களுத்துறை (தெற்கு)

**கொடிது கொடிது**

ஆரத் தழுவி
அமுதூட்டி வளர்த்தபிள்ளை
கோரயுத்தத்தால்
குற்றுயிராகக்கிடக்கிறதே!

ஜி.அருளேந்திரன்-
திருகோணமலை.

**எனக்கும்**

கையிரண்டில் மருத்துவத்தின் கவசம்
இதயத்திலோ சுயசுவாசச் சலனம்
விழிகளுக்கோ என்றுமிலை உறக்கம்
ஏனம்மா இந் நிலமை எனக்கும்?

ஏ.எஸ்.லோறன்ஸ்- பூந்தோட்டம், வவுனியா

**கெஞ்சல்**

பஞ்சணையில்,
பிஞ்சு இவன்
கெஞ்சுவது,
அவன் உயிரோ.....?

செல்வி எஸ்.வதனி-
டயா வீதி, வெள்ளவத்தை.

**உறங்காத விழிகள்!**

உறவுகளின் அஸ்தமனத்தில்...
உயிரொன்று உதயமானதோ?
உறவிழந்த ஏக்கமதில்...
உயிருமிங்கு ஊசலாடுதோ?
உறங்க மறுக்கும் உன் விழிதான்...
உரைத்திடும் சேதி என்னவோ?

தெ.றஞ்ஜனா, சின்னப்புதுக்குளம், வவுனியா.

## கவிதைப் போட்டி இல-180



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 30.11.1996

முகவரி: கவிதைப் போட்டி இல.180
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

## வாசக(ர்) சாலை

சமீப காலமாக "குறுக்கெழுத்துப் போட்டி" வராதது மனதுக்கு கவலையே. ரசிகன் தரும் இலக்கிய நயமும், தேன் கிண்ணம் பகுதியும் என்னை வெகுவாக கவர்ந்தவை. இதற்காக முரசுக்கு எனது நன்றிகளை தெரிவிப்பதுடன் "லேடீஸ் ஸ்பெஷலில்" கற்பு என்பதற்கு சரியான விளக்கம் எழுதிய "பவானி சங்கர்"க்கு எனது வாழ்த்துக்களை தெரிவிக்கவும். பவானி சங்கரின் கருத்தை அடக்கத்துடன் ஏற்றுக்கொண்ட ஆசிரியருக்கும் எனது வாழ்த்துக்கள்.

உமா சிவபாலசுந்தரம், மஸ்கெலிய.

❑○

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:**

* ஏ.ஜே.எம். ஜஃபர், கொழும்பு-15.
* மகேஸ்வரி ராமதாஸ், வத்தளை.
* தி. லதன், கொழும்பு-05.
* ஜெ.யூட் கிலேரியன், மட்டக்களப்பு.
* கபிலன், வவுனியா.
* ஏ.எம். சித்திக், நிந்தவூர்.
* வசந்தி பத்மநாதன், கொழும்பு-15.
* இரா. சாந்தராஜா, இரத்தினபுரி.
* பி. மூர்த்தி, ஜெயா, கினிகத்தேன.
* திருமதி ராதா சிவபெருமாள், வெளிமடை.
* ச. காங்கேசன், ஈச்சிலம்பற்று.
* வே. ரவிராஜ், இத்தாலி.
* ரி. ஜனகன், துறைநீலாவணை-06.
* ஆர். செல்வராஜ், ஃபிரான்ஸ்.
* ஜெயராஜா தேவனி, மட்/ஞானசூரியம் சதுக்கம்.
* வீ. சோபியா, மூதூர்.
* கே. அழகேசன், மஸ்கெலியா.
* திருமதி தாஜ்மஹால் சுபைடீன், சிலாபம்.
* சி. நிஷாந்தி, தெஹியோவிற்ற.
* எம். ஸாலிஹ் அஸீம், புத்தளம்.
* மா. ராமநாதன், கண்டி.

அன்பின் முரசுக்கு! உள்ளதை உரைத்திடும் அரசியல் விமர்சனங்கள் காத்திரமாக உள்ளன. போர் ஒன்றே முடிந்த முடிவென்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகி விட்டது. 'யாரை நொந்து என்ன பயன்? நம் தலைவிதி' என்றுதான் மக்கள் அங்கலாய்க்கிறார்கள். அரசியல்வாதிகளிடம் உண்மை, நேர்மை என்பவை அருகிவருகின்றன. வெறும் பத்திரிகை முழக்கங்களில் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

❑○ மா. தேவேந்திரன், பேராதனை.

'தூக்குமேடைக்குறிப்பு' முதல் வாரமே முத்திரை பதித்துவிட்டது. காலத்துக்கு ஏற்ற தொடர்கள் முரசின் தனித்துவம். நாலாவது மாடி அங்கும் இருக்கிறதா? நம் நாட்டிலும் விசாரணை என்றதும் ஞாபகம் வருவது நாலாவது மாடிதானே! அபூர்வ ஒற்றுமை.

சி. நரேஷ், மன்னார்.

❑○

பட்டுக்கோட்டைப் பிரபாகரின் 'தா, மறுபடி தா' இரண்டுமே பிரமாதப்படுத்தி விட்டன. தொடர் முடிகிறது என்றதும் 'மீண்டும் தா' எனக் கேட்க முன்னரே சுஜாதாவின் தொடர் அறிவிப்புத் தந்துவிட்டீர்கள். சுஜாதாவின் நாவலை முரசில் காண்பதில் மகிழ்ச்சிதான்.

❑○ எம். அமீன், கல்கிசை.

காதிலை பூ கந்தசாமி, இவர்களின் தீபாவளி எனக்குறிப்பிட்டவை பல நடந்துவிட்டனவே. டெண்டுல்கருக்கு 'கப்' கிடைத்துவிட்டது. கிளிண்டன் ஜெயித்துவிட்டார். யெல்ட்சின் பிழைத்துவிட்டார். முரசு கணிப்புச் சொல்வது மட்டுமல்ல, காதில் பூ என்று கற்பனையில் சொல்வதும் பலிக்கிறதே! மிஸ்டர் கந்தசாமி ஜாக்கிரதை!

❑○ செ. செல்வராணி, கந்தப்பளை.

### "பூக்களை மிதிக்காதீர்கள் முட்களாகி விடலாம்"

பூலான்தேவியின் தொடர் வாராவாரம் மெருகேறிவருகிறது. பூலானை கொள்ளைக்காரி, கொடுமைக்காரி என்றுதான் இதுவரை நானும் நினைத்திருந்தேன். பூலானின் தரப்பு நியாயத்தை முரசின் தொடர்மூலம் தான் அறியக்கூடியதாக உள்ளது. பூக்களை மிதிக்காதீர்கள்; முட்களாக மாறிவிடலாம். பூலானின் கதையும் அதுதான்.

செல்வி த.நிர்மலாதேவி, மட்டக்களப்பு.

❑○

சுஜாதாவின் புதிய தொடர் கலக்கல் விழா நடத்தட்டும். முரசில் அறிவித்தல் கண்டதுமே இன்ப அதிர்ச்சிதான்.

கு. ஜேசுதாசன், வவுனியா.

என் ஆருயிர் முரசே!

முத்து முத்தாய் நீ சுமந்து வரும் ஒவ்வொரு தகவல்களும் என் உள்ளத்தை மகிழ்விக்கின்றன. அதிலும் பாப்பா முரசு அருமையிலும் அருமை!

கு.டே.சற்குணசீலன், விநாயகபுரம்.

❑○

முரசு தரும் தொடர்கள் தேர்ந்தெடுத்த முத்துக்களாகவே இருக்கும் என்பதைச் சொல்லவா வேண்டும்! பல நாடுகளில் 'தூக்குமேடைக் குறிப்பு' தடை செய்யப் பட்டதாக முன்னர் கேள்விப்பட்டுள்ளேன். முரசு தடங்கல் இல்லாமல் வழங்க வேண்டும் என்பது என் அவா!

ஏ. தர்மராஜன், நுவரெலியா.

❑○



இனிய தேன் முரசே! நீ சுமந்துவரும் அரசியல் தொடர், கொள்ளை ராணி பூலான் போன்றவை பிரமாதம், மற்றும் இராமாயணம் மாணவர்களுக்கு பயன் உள்ளதாக அமைகிறது.

பி. ஆர். அசோக்குமார்,
டிக்கோயா.

❑○

ரசிகன் நம் இதயம் இனிக்கத் தரும் ('கவி+வசனம்' கலந்த...) 'இலக்கிய நயம்' பிரமாதம்! அன்பு ரசிகனு'க்கு நம் நெஞ்சு நிறைந்த பாராட்டு!

இன்னும், காதிலை பூ கந்தசாமி (யார்) விருப்போடு வழங்கும் வித்தியாசமான 'நகைச்சுவை விருந்து' வாராவாரம் வாசகர் நம்மை வசீகரிக்கின்றது.... கந்தசாமியாருக்கும் நம் பாராட்டு சேரட்டும்!

கோட்டைமுனை-முத்துமணி.



படிப்பகம்

www.padippakam.com

# குடாநாட்டில் படையினர் தேடுதல் வேட்டை

# புலிகள் ஒன்றுதிரள்வதைத் தடுக்கும் முயற்சி!

**மாவீரர்தினத்தை முன்னிட்டு புலிகள் இயக்க கெரில்லாக்கள் யாழ் குடாநாட்டில் ஒன்றுதிரள்வதை தடுக்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர். அதன் ஒரு கட்டமாக யாழ் குடாநாட்டில் தாம் நிலைகொள்ளாத பகுதிகளில் பாரிய தேடுதல் நடவடிக்கைகள், பதுங்கியிருந்து தாக்கும் நடவடிக்கைகள் என்பவற்றில் ஈடுபட்டுள்ளனர்.**

யாழ் குடாநாட்டில் படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் மாவீரர் தினத்தைக் கொண்டாடவும், மாவீரர் தினத்தை முன்னிட்டு தாக்குதல்களில் ஈடுபடவும் புலிகள் அமைப்பினர் திட்டமிட்டுள்ளனர்.

புலிகள் அமைப்பினரின் திட்டத்தை முறியடிக்க, அவர்கள் தயாராவதற்கிடையில் தாம் முந்திக்கொள்ளும் வகையில் படையினரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

யாழ் குடாநாட்டில் தாம் நிலைகொள்ளாத பகுதிகளை நோக்கி படையினர் ரோந்து சென்று தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குடியிருப்பாளர்கள் இல்லாத வீடுகளிலும் தீவிர சோதனை நடைபெறுகிறது. அந்த வீடுகளை புலிகள் தமது மறைவிடமாகவும், ஆயுதங்களை புதைத்துவைக்கவும் பயன்படுத்தலாம் என்று கருதியே சோதனைகள் நடைபெறுகின்றன.

தாம் நிலைகொள்ளாத பகுதிகளில் உள்ள பொதுமக்களிடமிருந்து புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டங்கள், தங்குமிடங்கள் பற்றிய விபரங்களை படையினரின் உளவுத்துறையினர் திரட்டிவருகின்றனர்.

இதனையடுத்து யாழ் குடாநாட்டில் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் படையினருடன் நெருங்கிப் பழகுவோர் தொடர்பான தகவல்களை புலிகள் இயக்க உளவுத்துறையினர் திரட்டி வருகின்றனர்.

**ஒதுங்கும் மக்கள்**

'இருதரப்பினருடனுமே பழகுவது ஆபத்தானது' என்று அஞ்சும் மக்கள் இரு தரப்பினரிடமும் இருந்து ஒதுங்கிச் செல்கின்றனர்.

படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் நடமாடும் புலிகள் இயக்கத்தினருடன் இனம் காணப்படுவோர் பற்றிய தகவல் படையினருக்கு போய்விடுகிறது. அதனால் தேடுதல் நடவடிக்கைகளில் புலிகள் இயக்கத்தினருடன் பழக்கமானவர்களும் கைது செய்யப்பட்டு விடுகிறார்கள்.

தனிப்பட்ட கோபதாபங்கள் காரணமாகவும் சிலர் படையினருக்கு தகவல் கொடுத்து விடுகின்றனர்.

இதேபோலவே படையினருடன் நெருக்கமாகப் பழகுவதாக கருதப்படும் சிலரை இரவோடு இரவாகச் சென்று புலிகள் இயக்கத்தினரும் முதல் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

15.11.96 அன்று யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் வீதியால் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர்மீது அங்கு ஊடுருவிக் காத்திருந்த புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். இருளானபின் மாலை 7 மணியளவிலேயே இத் தாக்குதல் இடம் பெற்றது. இராணுவ தரப்பில் ஒருவர் பலியானதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணம்-திருநெல்வேலியிலும் வீதித்தடையொன்றில் நின்ற இராணுவத்தினர்மீது புலிகள் இயக்க கெரில்லாக்கள் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

யாழ் குடாநாட்டில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரும், புலிகள் இயக்கத்தினர் மறைத்துவைத்திருந்த கைக்குண்டுகள், ஆயுதங்கள் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர். இரகசிய தகவல்கள் மூலமே குறிப்பிட்ட மறைவிடங்கள் கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரிகிறது.

## கடற்படை தளம்மீது தாக்கும் திட்டம்

## இலக்கை எட்டமுன்னர் இடைநடுவே மோதல்!

யாழ்ப்பாணத்தில் காரைநகர் கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையே பாரிய கடற்சண்டை ஒன்று நடைபெற்றது.

கடற்படையினரின் வடபகுதி கட்டளைத் தலைமையகம் அமைந்துள்ள காரைநகர் கடற்படைத்தளப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குவதற்காகவே கடற்புலிகளும், கடற் கரும்புலிப் படகுகளும் சென்றதாகத் தெரிய வருகிறது.

முல்லைத்தீவில் உள்ள கடற்புலிகளின் தளத்தில் இருந்து காரைநகர் நோக்கி கடற்புலிகளின் படகுகளும், கடற் கரும்புலிப் படகுகளும் சென்று கொண்டிருந்தன.

அதிகாலை 12.05 மணியளவில் காரைநகர் கடற்பரப்புக்குள் கடற்புலிகளின் அணிகள் பிரவேசித்தபோது, அங்கு கடற் படையினர் அதிவேக டோறாப் படகில் ரோந்து செய்துகொண்டிருந்தனர். அவர்கள் கடற்புலிகள் அணியினரைக் கண்டுவிட்டனர். உடனடியாக தமது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டனர். மற்றுமொரு கடற்படை ரோந்துப் படகும் உதவிக்கு விரைந்தது.

கடற்புலிகளின் அணிகள்மீது கடற் படைப் படகுகளில் இருந்து தாக்குதல் தொடுக்கப் பட்டது. கடற்புலிகளும் திருப்பித் தாக்கினார்கள்.

கடற்சண்டை ஆரம்பித்தவுடன் கடற்கரும்புலிப் படகொன்று டோறாவை குறிவைத்து பாய்ந்து சென்றது. தம்மை நோக்கி வந்த படகை கடற்படையினர் கண்டுவிட்டனர். அப்படகை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தினார்கள். அதனால் டோறாவை நெருங்க முன்னரே கடற்கரும்புலிப் படகு வெடித்துச் சிதறியது.

டோறாவுக்கு சமீபமாக கடற்கரும்புலிப் படகு வெடித்துச் சிதறியதால் டோறாவுக்கு சேதம் ஏற்பட்டது.

கடற்படையினரின் பலம் மேலோங்கிய நிலையில் கடற்புலிகளின் படகுகள் முல்லைத்தீவை நோக்கி திரும்பிச் சென்றன. அவ்வாறு திரும்பிச் சென்றபோது நயினாதீவு, அனலைதீவு கடற்பரப்பில் டோறா அதிவேகப் படகுகளில் வந்த கடற்படையினர் வழிமறித்து தாக்கினார்கள். இக் கடற்சண்டையில் டோறாப் படகொன்று சிறு சேதத்துக்கு உள்ளாகியது.

கடற்படையினரின் முற்றுகையை உடைத்துக்கொண்டு கடற்புலிகள் அணியினர் தப்பிச் சென்றுவிட்டனர்.

கடற்புலிகள் தரப்பில் இரண்டு கடற் கரும்புலிகள் பலியாகினர். இருவரும் பெண் கடற்கரும்புலிகளாவர். மேஜர் பாரதி (வீரகத்தி கமலராணி- விசுவமடு), கப்டன் இன்னிசை (ராசதுரை புஸ்பலதா- வெற்றிலைக்கேணி) ஆகியோரே பலியான கடற்கரும்புலிகளாவர்.

கடற்படையினருடன் நடைபெற்ற கடற் சண்டையில் தமக்கு ஏற்பட்ட இழப்புக்காக மற்றொரு கடற்தாக்குதலில் கடற் புலிகள் ஈடுபடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### உறவின் பின்னணி என்ன?

புலிகள் இயக்கத்தினருடன் ஈ.என்.டி.எல்.எஃப் என்னும் இயக்கத்தினர் வன்னிக்கு சென்று பேச்சு நடத்தியதாக வெளியான செய்திகளில் பெரும்பாலும் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை.

ஆயினும் பரந்தன் ராஜன் தலைமையிலான இலண்டன் பிரதிநிதி ராமராஜ் என்பவர் லண்டனில் புலிகள் இயக்கத்தினருடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார். ராமராஜ் பிரபல போதைக்கடத்தல் வியாபாரி என்று சந்தேகிக்கப்படுபவர். இவர் ஏன் புலிகளின் ஆதரவாளராக காட்டிக் கொள்கிறார் என்பது சந்தேகத்துக்கு உள்ளாகியுள்ளது. முழு விபரங்களும் கிடைத்த பின்னர் இதன் பின்னணி விபரங்கள் தரப்படும்.

இந்தியப் படை காலத்தில் புலிகள் இயக்கத்தினருக்கு எதிராகச் செயற்பட்டது ஈ.என்.டி.எல்.எஃப்.

## "அதிகாரப் பகிர்வு மூலமே சமாதானம் ஏற்படும்"

## "ஒரு கையால் கொடுத்து மறுகையால் எடுக்கிறார்கள்"

"அதிகாரப் பகிர்வு மூலமாகவே நாட்டில் உண்மையான சமாதானம் தோன்ற முடியும்" என்று முன்னாள் ஆளுநர் லயனல் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை- 17.11.96 அன்று திருக்கோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. வடக்கு-கிழக்கு மாகாண தலைமைச் செயலர் ஜி.கிருஷ்ணமூர்த்தி தலைமைதாங்கினார்.

அக்கருத்தரங்கில் உரையாற்றிய முன்னாள் ஆளுநர் லயனல் பெர்ணான்டோ கருத்துத் தெரிவிக்கும்போது, "அதிகாரப் பகிர்வு என்பதும், அதிகாரப் பரவலாக்கல் என்பதும் வேறு வேறானவை. அதிகாரப் பகிர்வு மூலமே உண்மையான சமாதானம் ஏற்பட முடியும்.

(திருமலை நிருபர்)

பொலிஸ் அதிகாரத்தை பகிர்ந்து கொடுக்க தயக்கம் காட்டப்படுகிறது. தமது அன்புக்குரியவர்களை பிரிந்திருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களால் கடமையில் முழு மனதோடு ஈடுபாடு காட்ட முடியாது. அதிகாரப் பகிர்வு ஏற்பட்டால் தமது சொந்த மாவட்டங்களிலேயே பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்ற முடியும்" என்று தெரிவித்தார்.

இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனத் தலைவர் டி.ஈ.டபிள்யூ. குணசேகரா உரையாற்றுகையில், "பல்வேறு இனங்கள் வாழுகின்ற நைஜீரியாவிலும், இந்தியாவிலும் இன ஒற்றுமை நிலவுகிறது. மூன்று இனங்கள் மட்டுமே வாழுகின்ற இலங்கையில் மட்டும் ஏன் ஒற்றுமை நிலவமுடியாது? வன்முறைகள் என்பது பிரச்சனையல்ல. இனப்பிரச்சனையின் வெளிப்பாடுகளாகவே அவற்றை நோக்கவேண்டும்.

அரசியல், பொருளாதார, இன சுயமரியாதை என்பற்றில் காணப்படும் சமத்துவமின்மையே பிரச்சனைகளுக்கு காரணமாகும்.

13 வது திருத்தச் சட்டம் போன்றவை ஒரு கையால் கொடுத்து மறுகையால் எடுக்கும் வகையில் அமைந்துள்ளன. இவ்வாறான முறைகள் உரிய தீர்வாக அமையப்போவதில்லை" என்று கூறினார் டி.ஈ.டபிள்யூ குணசேகரா.

திருமலை நகரசபைத் தலைவர் பெ.சூரியமூர்த்தி, ஈழத்துநாதன், கிண்ணியா பிரதேச சபை உறுப்பினர் கரீம், கிண்ணியா பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவர் எம்.ஏ. மகரூப் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## பொத்துவில் கடலில் 'டோறா'வின் பாகங்கள்!

## அதிகாரியின் அடையாள அட்டையும் மீட்பு!

கடற் கரும் புலிகளால் கடந்த ஒக்டோபர் 26ம் திகதி திருகோணமலைக் கடலில் வைத்து கடற்படையினருக்குச் சொந்தமான P 457 இலக்கமுடைய டோறா-பீரங்கிப்படகு மூழ்கடிக்கப்பட்டது தெரிந்ததே. இதில் பயணம் செய்த கடற்படையைச் சேர்ந்த இரு அதிகாரிகளுட்பட 12 கடற்படையினர் கடலில் மூழ்கியதாகக் கூறப்பட்டது.

டோறா படகு மூழ்கியதாகக் கூறப்பட்ட இடம் சுமார் 500 மீட்டருக்கும் அதிகமான ஆழ்கடலாகும். இந்தப் பிரதேசத்தில் சுழியோடி, மரணமானவர்களின் சடலங்களையாவது கைப்பற்ற எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை.

ஆனால் இப்படகின் சிதறிய சில பாகங்களும், இதில் பயணம் செய்ததாகக் கூறப்படும் லெப்டினன்ட் எம்.ஏ.எஸ்.அமரசேகரவின் அடையாள அட்டையும் திருகோணமலையிலிருந்து சுமார் 120 கிலோ மீட்டர் தெற்கேயுள்ள பொத்துவில் கடல் பிரதேசத்தில் மீனவர்களால் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

இதற்கான காரணம் என்ன என்று தெரியாமல் கடற்படை அதிகாரிகள் திணறுகின்றனர்.

## பூவரசங்குளத்தில் புலிகள் தாக்குதல்!

வவுனியா- பூவரசங்குளத்தில் 16.11.96 அன்று புலிகள் இயக்கத்தினரால் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

இது தொடர்பாக புலிகள் இயகத்தினர் விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

வவுனியா பூவரசங்குளத்தில் 15 க்கும் மேற்பட்ட இராணுவக் காவலரண்கள் ஒரே நேரத்தில் தாக்கியழிக்கப்பட்டன. அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்ற இத் தாக்குதலில் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. படையினர் தரப்பில் நான்கு பேர் பலியானார்கள். புலிகள் தரப்பிலும் நான்கு பேர் பலியானார்கள்.

2ம் லெப்டினன்ட் மறவன் (சுப்பிரமணியம் மதியழகன்- விசுவமடு), 2ம் லெப்டினன்ட் கார்வண்ணன் (செபமாலை சுரேஸ் கண்ணன்- திருமலை) நல்லதம்பி, (முருகவேல் ராசேந்திரகுமார்- கிளிநொச்சி), சேனன் (நமச்சிவாயம் சுதாகர்- கொடிகாமம்) ஆகியோரே பலியானவர்கள்.

11.11.96 அன்றும் வவுனியா- கொக்குவெளியில் புலிகள் இயக்கத்தினரால் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. (உள்ளே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் அது தொடர்பான விபரங்கள் உள்ளன. கொக்குவெளி என்பது உப்புவெளி என்று தவறாக அச்சாகியுள்ளது.)

7.11.96 அன்று வவுனியா கணேசபுரத்தில் தம்மால் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து, வவுனியாவில் நடத்தப்பட்ட பாரிய தாக்குதல் என்று பூவரசங்குளத் தாக்குதலை புலிகள் விபரித்துள்ளனர்.

### கொக்குவெளித் தாக்குதல்

வவுனியா- கொக்குவெளிப் பகுதியில் 11.11.96 அன்று அதிகாலை நடைபெற்ற தாக்குதலில் தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் இயக்கத்தினர் வெளியிட்டுள்ள பட்டியல் இது:

ஏ.கே.எல்.எம்.ஜி-01, றம் மகசீன்-05, ரி.81 துப்பாக்கி-01, எம்.75 ரக குண்டு-02, ஆர்.பி.ஜி. செல்-07, ரி.56-2 ரக துப்பாக்கி-01, மழைக் கோட்-03, ஐ.எம்.ரவைகள்-1360, புல்லட்புறூஃப் ஜாக்கட்-01 ஆகியன தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

## அதிரடிப்படையோடு திடீர் மோதல்

அம்பாறை மாவட்டத்தில் 'சென்றல் கேம்ப்' பொலிஸ் நிலையம் 02.11.96 அன்று புலிகள் இயக்கத்தினரால் தாக்கப்பட்டது. மூன்று பொலிசார் பலியானார்கள்.

இத் தாக்குதலை நடத்திவிட்டு தளம் திரும்பிக்கொண்டிருந்தனர் புலிகள் இயக்கத்தினர். அவ்வாறு திரும்பிச் செல்லும்போது காக்காச்சிவட்டை என்ற இடத்தில் விசேஷ அதிரடிப்படையினர் புலிகள் இயக்க அணிகளை வழிமறித்தனர்.

இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் புலிகள் தரப்பில் நான்குபேர் பலியானார்கள்.

குருவீரன் (சிவஞானம் கணேசமூர்த்தி- 40ம் கிராமம், திக்கோடை), சாந்தமுரளி (ஆனந்தன் புவனேந்திரன்- ஈச்சந்தீவு, நாவற்காடு), சிவரஞ்சன் (முத்தையா யோகராசா, களுவாஞ்சிக்குடி), பத்மசீலன் (சிதம்பரப்பிள்ளை புவேந்திரன்- முனைக்காடு) ஜனகன் (பெரியதம்பி தவேந்திரன்- மட்டக்களப்பு) ஆகியோரே பலியானவர்களாவர்.

9.11.96 அன்று காலை 8 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் திமுல்த்தமுனை என்னுமிடத்தில் பொலிஸ் அணியொன்று புலிகளின் கெரில்லாக்களால் திடீர் தாக்குதலுக்கு உள்ளானது. இது தொடர்பாக புலிகள் இயக்கத்தினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், தமது தரப்பில் ஒருவர் பலியானதாகவும், பொலிசார் தரப்பில் 10 பேர் பலியானதாகவும் தெரிவித்துள்ளனர்.

கப்டன் இசையரசன் (சுந்தரம்பிள்ளை அச்சுதன்- திக்கோடை, மட்டக்களப்பு) என்பவரே புலிகள் தரப்பில் பலியானவராவார்.

40-எம்.எம் ரக பிஸ்ரல்-01, ரி.56 ரக துப்பாக்கிகள்-05, அதற்கான மகசீன்-13, 303 துப்பாக்கிகள்-03, ஐ.எம்.ரவைகள்-130, வோக்கி-01 ஆகியன தம்மால் கைப்பற்றப் பட்டதாக புலிகள் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## முஸ்லிம் மக்களுக்கு அறைகூவல்!

## ஏட்டிக்குப் போட்டியான பிரசுரங்கள்!

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் நல்லுறவுக்கு உதவுமாறு புலிகள் இயக்கத்தினர் கோரியிருந்தனர். பள்ளிவாசல் சம்மேளனங்களுக்கும் புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் துரையினால் ஒரு கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

"மருதமுனையில் நிகழ்ந்த சம்பவங்கள் பாரதூரமும், துயரமும் நிறைந்தவை. அரச படைகளில் இணைந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படும் எவரும் இன, மத, பால், பிரதேச வேறுபாடின்றி தண்டிக்கப்படுவது புதிய விடயமல்ல.

மருதமுனையைச் சேர்ந்த ஊர்காவற் படையினரை, நாம் தண்டித்தபோது அரசாங்கமும், அதன் பக்கம் இருப்போரும் இனத்துவேசத்தைக் கக்கினர். வன்செயலில் இறங்கினர். பதிலுக்கு கிளர்ந்தெழுந்த தமிழ் வாலிபர்களுடன் நாம் பேசி அவர்களை அமைதிப்படுத்தினோம்.

கடந்துபோன காலங்களிலும் இதே போன்ற நிலைகளை சிறி லங்கா அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது. இன்றைய நிலையில் யுத்த அனுபவங்கள் இரு சமூகங்களையும் தெளிவாகச் சிந்திக்கத் தூண்டியுள்ளன.

மேலும் வளர்ச்சியுறும் எமது போராட்டமானது சதிகளை முற்கூட்டியே அறிந்து அவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்கிறது. இனிமேலும் போராட்டத்தை நலிவுறச் செய்யும் சம்பவங்களை சகிக்கவோ அனுமதிக்கவோ முடியாதென்பதால் இரு தரப்பினரும் சந்தேகங்களை நேரடியாகப் பேசித்தீர்ப்பதுதான் ஆக்க பூர்வமான முடிவுகளுக்கு வழிவகுக்கும்."

இவ்வாறு தொடர்கிறது புலிகள் இயக்கத்தினரின் கடிதம்.

இதேவேளை, ஐக்கிய முஸ்லிம் நிறுவனம் என்னும் பெயரில் ஒரு துண்டுப்பிரசுரமும் கிழக்கில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"புலிகள் இயக்கத்தினரும், முஸ்லிம் மக்களும் கடந்த சிலகால எல்லைக்குள் ஓர் இரகசிய உடன்படிக்கை செய்துள்ளனர். அங்கு புலிகள் இயக்கத்தினரால் முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் தொடர்பு இலக்கணங்களைக் காட்டி சிங்கள மக்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உடன்பாடு காணப்பட்டுள்ளது.

ஆயினும் முஸ்லிம் சகோதரர்களே! இதற்கு எவ்வகையிலும் எங்களால் இடம் கொடுக்க முடியாது.

எப்போதாவது ஒருநாளில் ஈழம் வென்றெடுத்தால், யாழ்ப்பாண முஸ்லிம்களை விரட்டி அடித்தது போன்று எங்களையும் விரட்டி அடிப்பார்கள். அதுவரைக்கும் காத்திருக்க முடியாது. இப்போதே நடவடிக்கை மேற்கொள்வோம். எல்.ரி.ரி.யின் பேச்சுகளுக்கு ஏமாறாமல் இருப்போம்" என்று அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரசுரம் கிழக்கில் அடையாளம் காணப்படாதோரால் விநியோகிக்கப்பட்டுள்ளது.

## எதிர்வரும் ஆண்டில் மற்றுமொரு மின்வெட்டு?

## மின்சாரசபை பொறியியலாளர் எச்சரிக்கை

அடுத்த ஆண்டில் மற்றுமொரு மின்வெட்டை இலங்கை எதிர்நோக்க வேண்டிவரும் என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர் ஒன்றியம், மின்சார சபையை எச்சரித்திருக்கிறது.

நாட்டின் மின்நெருக்கடியைச் சமாளிப்பதற்காக புதிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான கோரிக்கைகள் உள்நாட்டு பத்திரிகைகளில் விளம்பரங்களாகப் பிரசுரிக்கப்பட்டன. இவற்றில் இந் நாட்டுக்குத்தேவையான மின்சார விநியோகக் கருவிகள் எத்தகையனவாக இருக்கவேண்டும் என்றோ, இவை எங்கே நிர்மாணிக்கப்பட வேண்டும் என்றோ- போதிய விபரங்கள் குறிப்பிடப்படவில்லை, என்றும் குறைசொல்லப்படுகிறது.

இதேவேளையில் மின்சார சபைக்கு சற்றும் பொருத்தமில்லாத-ஓய்வு பெற்ற அரச அலுவலர் ஒருவரும் முன்னாள் இராணுவ அதிகாரியும் மிக உயர்ந்த சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருப்பதையும் பொறியியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அண்மையில் மூன்று நாட்கள் தொடர்ந்து மின்விநியோகம் தடைப்படுவதற்கு காரண கர்த்தாக்களில் ஒருவர் என்று அடையாளங் காட்டப்பட்டவருக்கும் உயர் பதவி அளிக்கப் பட்டிருப்பதையும் இவர்கள் ஆட்சேபித்துள்ளனர் என்று தெரிகிறது.

## போருக்கு ஆள் திரட்டும் கருத்தரங்குகள்!

## மாணவர்களுக்கு பெண் புலிகள் விளக்கம்

சமீப காலமாக கிழக்குப் பகுதியில் போருக்கு ஆள் திரட்டும் நடவடிக்கைகளைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

பாடசாலைகள் தோறும் மாணவர்களிடத்தில் கருத்தரங்குகளை விரிவுபடுத்தியிருப்பது போருக்கு ஆள் திரட்டும் பணியை விரிவுபடுத்துவதற்கேயாகும்.

பாடசாலைகளிலுள்ள மாணவர்களை மாத்திரம் அழைப்பித்து புலிகளின் ஆண் பெண் போராளிகள் கருத்தரங்குகளில் விளக்கமளிக்கிறார்கள். தாம் மாணவர்களை அழைத்துச் செல்லுமிடத்திற்கு ஆசிரியர்கள் வர புலிகள் அனுமதிக்கவில்லை. ஆண் மாணவர்களுக்கு அளிக்கப்படும் விளக்க உரைகளில் புலிகள் இயக்கத்தின் பெண் போராளிகளே முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

கருத்தரங்கிற்கு முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த ஒரு பாடசாலையில் 650 பேராக இருந்த மாணவ வரவு இவ்விளக்கக் கருத்தரங்கிற்குப் பின்னர் 150ஆகக் குறைந்திருப்பதைக் கவனிக்க முடிகிறதென்று கூறப்படுகிறது.

இதே பாடசாலையிலுள்ள அநேகமான உயர் வகுப்பு மாணவர்கள் விளக்கக் கருத்தரங்கிற்குப் பின் வகுப்புக்குச் சமூகமளிக்காததால் பாடங்களை நடாத்த மாணவர்கள் இல்லாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே முன்னர் கிழக்கில் இருந்த புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள் அனைவரும் மீண்டும் கிழக்குப்பகுதிக்கு திரும்பியுள்ளனர். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் ஏராளமான புலிகள் இயக்க உறுப்பினர்கள் காணப்படுவதாகவும் அறிய வருகின்றது.

மாவீரர் தினத்தையும் பிரபாகரனின் பிறந்ததினத்தையும் பெரியளவில் அனுஷ்டிப்பதும் கிழக்குப் பகுதியில் படையினரின் பிடியைத் தளர வைப்பதும் இதன் நோக்கங்களாகுமென்று கருதப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

## தேனகப் புதினம்

# காதோடு காது

உதாரா



**மட்டுநகர் சிறை:**

திருமலை சிறைஉடைப்பு- தப்பி ஓட்ட சம்பவத்தின்பின் மட்டுநகர் சிறையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. உயர்ந்த மதிலாக இருந்தாலும், உயரம் போதாதென்ற தோரணையில்-சுவர் அரண் கட்டுமானம் பெறுகிறது. மட்டுநகர் சிறைச்சாலைக்கு பல பெருமைகள் உண்டு. ஒன்று- சிங்கள ஸ்ரீ போராட்டத்தின்போது தந்தை செல்வா சிறைவாசம் அனுபவித்தது. இரண்டு தடவைகள் 'பொடியங்கள்' தப்பியோடியது மற்றும் பல அரசியல் பிரமுகர்களை கைதிகளாக உள்வாங்கியது.

**வீதி வளைவுகள்:**

மட்டக்களப்பு- திருமலை வீதியில் மயிலம்பாவெளி, சின்னக்கிளாவி, கும்புறுமூலை, மட்டக்களப்பு- கல்முனை வீதியில் புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் வீதி வளைவுகள் பலப் படுத்தப்பட்டுள்ளன.

**புலிகள் நிர்வாகம்:**

பட்டிப்பளை- செயலகப் பிரதேசத் திற்குட்பட்ட பகுதிகளில் புலிகள் தமது சிவில் நிர்வாகச் செயல்பாட்டைத் துவக்கியுள்ளனர். அரசடித்தீவில்- மட்டக்களப்பு- அம்பாறைப் பிரதேச- பொலிஸ் பிரதம பணியகம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. காவல் துறையினக்கு நீல நிறத்திலான சீருடை- நீலத்தில் சிவப்புக் குறியீடுகளும் பார்ப்பதற்கு நேர்த்தியாகவிருக்கிறது. நீதிமன்றம், வழக்கு சமன்ஸ் என்று எல்லோருமே சுறு சுறுப்பாக இயங்குகிறார்கள்.

**பாதுகாப்பு:**

திருமலைக் கடலில் டோறா படகு நிர்மூலமாக்கப்பட்டபின் மட்டக்களப்பு கடலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆழ்கடலில் மீன்பிடிக்கப்போகும் மீனவர்கள் நிர்ணயிக்கப்பட்ட கடல் எல்லைக்கு அப்பால் செல்ல வேண்டாமென பாதுகாப்புப் படையினரால் வலியுறுத்தப் பட்டுள்ளனர்.

**கசிப்பு வடிக்கத்தடை:**

மண்டூர் பிரதேச அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் ஊர் மக்களைக் கூட்டி கசிப்பு வடிக்கும் தொழிலை நிறுத்தும்படியும், குடிப்பழக்கத்தை விடும்படியும் கோரியுள்ளனர். கட்டளையை மீறி வீதிக்கு குடி போதையில் வருபவர்கள் பலத்த தண்டனைக்கு உள்ளாவார்களென எச்சரிக்கப் பட்டுள்ளனர்.

**வாவி ரோந்து:**

மட்டக்களப்பு வாவியில் பாதுகாப்புப்படையினரின் இரவு ரோந்து நடவடிக்கைகள் மேலதிகமாக்கப்பட்டுள்ளன. இயந்திரப் படகுகளின் இரைச்சல் இரவில் ஒரு தனிரகம்.

## மன்னார் பயணிகளின் போக்குவரத்து அவலங்கள்

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள சமநிலையற்ற சூழ்நிலையின் காரணமாக வடகிழக்கு மக்கள் அனுபவித்து வருகின்ற துன்பங்கள் துயரங்கள் பொறுக்கமுடியாதவை என்பதை எல்லோரும் அறிவர். குறிப்பாக மன்னார் தீவுக்கான பிரதான போக்குவரத்து ஊடகமாக கல்பிட்டி- மன்னார் கடற்பயணம் கடந்த ஆறு வருடங்களாக இன்னோரன்ன இன்னல்களுடன் நடைபெற்றுவருவது எல்லோரும் அறிந்ததே.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான இரண்டு படகுகள் வாரத்தில் மூன்று தடவைகள் பயணிகளை மன்னாருக்கும் கல்பிட்டிக்கும் ஏற்றியிறக்குகின்றன. இப் படகுகள் பயணிகளின் பாதுகாப்புக்கு எவ்விதத்திலும் ஒவ்வாதவையாக இருந்தும் ஒரு பயணிக்கு ரூபா. 200/= வீதம் கட்டணம் அறவிடப்படுகின்றது. அத்தோடு ஒரு தடவை 150 பயணிகளுக்கு குறைவான எண்ணிக்கையில் பயணிகள் இருந்தால் படகுச்சேவையானது திடீரென ரத்துச் செய்யப்படுகின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இதனால் கல்பிட்டியில் பயணிகள் நான்கு ஐந்து தினங்களுக்கு காத்திருக்க வேண்டிய இக் கட்டான சூழ்நிலை அடிக்கடி ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலருக்கு செலவுக்கான பணமும் முடிந்த நிலையில் பலவித இன்னல்களில் சிக்கித் தவிக்கின்றனர். பயணிகளின் பிரயாணத்திற்கு வேறு படகுகளோ, கப்பல் சேவையோ இல்லாமையே இந் நிலைக்குக் காரணமாகும். மேலும் இவ்வாறான ஒழுங்கற்ற பிரயாண ஊடகத்தினால் அரச, அரசசார்பற்ற அலுவலர்கள் தங்கள் பணிகளை உரிய வேளையில் நிறைவேற்ற முடியாதுள்ளமையும் கண்கூடு.

இன்றைய நவீன உலகில் ஒரு நாட்டின் அபிவிருத்தியில் போக்குவரத்துச் சாதனங்களின் அபரிமிதமான முன்னேற்றம் முக்கிய பங்கு வகிக்கின்ற இக் காலகட்டத்தில் எமது இச் சின்னஞ்சிறிய தீவில் ஒரு இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு பயணம் செய்வதற்கு பல நாட்கள் தேவைப்படுகின்றன.

சிறந்ததொரு கப்பல் சேவையை மன்னாருக்கும், கல்பிட்டிக்கும் இடையில் நடாத்துவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசும் மேற்கொள்ள வேண்டும் என்பதே இந் நாட்டுப் பிரஜைகளான மன்னார் மக்களின் ஏக்கம் மிகுந்த எதிர்பார்ப்பாகும்.

ரீ.என்.ஹரன், மன்னார்.

## பிரதேசசபைத் தவிசாளர் தலைமறைவு

(ஏறாவூர் நிருபர்)

கடந்த பல மாதகாலமாக ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச சபையின் நடவடிக்கைகள் பிரதேச சபை உறுப்பினர்கள் பிரசன்னமாகாததால் முடங்கிப்போயிருப்பதாகக் கூறப்படுகிறது.

தவிசாளரான க. செல்லத்துரை சமீபகாலமாக எங்கிருக்கிறார் என்பது தெரியாமலுள்ளது. பிரதித்தவிசாளர் கே. நடராஜபதி வாழைச்சேனை இ.போ.ச. டிப்போவில் கடமையாற்றி வந்தார். இந்த டிப்போவில் கிடந்த பாவனைக்குதவாத கட்டையேற்றிய பஸ்களைச் சேவையிலீடுபடுவதாகக் காட்டி, பஸ்களுக்கு எரிபொருள் வழங்கியமைக்காக இலட்ச ரூபாய்க்கு மேல் களவாகக் கணக்குக் காட்டியது கண்டு பிடிக்கப்பட்டு இவருக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டது. இந்நிலையில் இவர் வெளிநாடொன்றுக்குத் தப்பியோடிவிட்டார் என்பது தெரிய வருகிறது.

ரெலோ இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளரும், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபையின் தலைவருமான "வேட்டோ" ஒருவருடத்திற்கு முன்னர் செங்கலடி பொலிஸ் முன்னால் 10 யார் தூரத்திலுள்ள பிரதேச சபைக் காரியாலயத்திலிருக்கும்போது புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இப்பிரதேச சபையின் நடவடிக்கைகள் முடங்கிப் போயிருப்பதாக ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர், ஆணையாளருக்கு அறிவித்துள்ளார். பிரதேச சபையின் கூட்டம் இறுதியாக எப்போது நடந்ததென்பதை அறிவிக்குமாறு அவர் பிரதேசசபையின் செயலாளரைக் கேட்டுள்ளார்.

## கடலில் இறங்கத் தடை!

திருக்கோணமலையில் மறு அறிவித்தல் வரும் வரையில் கடற்பகுதியில் யாரும் மீன் பிடிக்கச் செல்லக்கூடாது என்று பொலிசார் அறிவித்துள்ளனர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு திருமலை துறைமுகப்பகுதியில் கடற்புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று கருதியே அவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

திருமலை துறைமுகப் பகுதியிலும் கடும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## அதிபர் காட்டிய வழி

சம்மாந்துறை கல்விக் கோட்டத்தில் உள்ள கலவன் பாடசாலை ஒன்றின் அதிபரும் தொண்டர் ஆசிரியர் ஒருவரும் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு அடித்து விட்டு, "இப்படி இருப்பதைவிட புலியில் போய்ச் சேருங்கள்," என்று கூறியுள்ளனர். இதனால் அவமானமடைந்த பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் புலிகள் இயக்கத்தில் சேர்ந்துள்ளனர்.

இதைக் கேள்விப்பட்ட பெற்றோர்கள் புலிகள் இயக்க முகாமில் சென்று தமது பிள்ளைகள் சிலரை அழைத்து வந்து விட்டார்கள். இன்னும் சிலர் முகாமில் இருக்கின்றனர். இவர்களைத் தம்மிடம் அழைத்து வந்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிபர், ஆசிரியரை இவர்களின் பெற்றோர்கள் கேட்டுள்ளனர்.

## நிதி கோரல்

நெதர்லாந்து அரசால் திருக்கோவிலில் ரூபா. 25,000/= பெறுமதியில் 200 வீடுகள் கட்டிக்கொடுக்குமாறு பணம் வழங்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு வீடுகளுக்குமாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 25,000/=ல் இருந்து தமக்கு தலா ரூபா 2000/= வைத் தருமாறு புலிகள் இயக்கம் மாவட்ட செயலாளரிடம் கேட்டுள்ளனராம்.

## இது மாட்டுக் கொட்டில் அல்ல

(நிந்தவூர் நிருபர்)



படத்தைப் பார்த்ததும் மாட்டுக்கொட்டில் ஒன்றைப் படம் பிடித்து பிரசுரித்திருப்பதாக எண்ணிவிடாதீர்கள்! கல்முனை பஸ்நிலையத்தையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

கல்முனை பஸ்நிலையத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை, பஸ் சாரதிகளுக்கும் பிரயாணிகளுக்கும் பெரும் உபத்திரவங்களையும், அசௌகரியங்களையும் ஏற்படுத்திவருகின்றன.

கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை ஒழிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் கண்டிப்பான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பிரயாணிகள் கோருகின்றனர்.


**Bright ன் புலமைப்பரிசில் பரீட்சை**
மாணவர்கட்கு மலிவு விலையில் புத்தகப் பொதி

| | |
|---|---|
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 1-6 | 250.00 |
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 7-12 | 250.00 |
| புலமைப்பரிசில் மாதிரிவினா விடை | 100.00 |
| பொது விவேகமும் பாடநூல் | 75.00 |
| பொது உளச்சார்பு செயல்நூல் | 60.00 |
| மொத்தம் | 735 |
| Brightன் கழிவு | 235 |
| | 500 |

V.P.P. உண்டு தபாற் செலவு இலவசம்

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27 First Floor P.O.Box - 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P:434770



**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்த, கனவில் சக்தியிழந்த, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

நவம்பர் 19 முதல் 30 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390, 078-71101 Fax : 436439 டிசம்பர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்சரி, ஓட்டமாவடியிலும், நவம்பர் 9, 10, 11 தினங்களில் கல்முனை T.M.M. பாம்சியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No:33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.





**3 மாதத்தில் தீர்வு**

கணவன்-மனைவி பிணக்கு, பிரிந்தவர் ஒன்றுசேர, காதலித்தவர் திருமணம் புரிய, தொழில் உயர்ச்சியை மேம்படுத்த, வீழ்ச்சியுற்ற தொழிலை வீழ்ச்சி அடையா வண்ணம் இருந்த நிலைக்கு 3 மாதத்திற்குள் கொண்டுவர, கணனிய தொழில் கிடைக்க, திருமணமே ஆகாதோர் விரக்தி உற்றோருக்கு தெய்வீக வரத்தால் திருமணம் நடைபெற இன்னும் முனிவர்களால் அருளிய ஜீவிய காலகாண்டம்-நாடி ஜோதிடம் எழுதிக் கொள்ள, அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் காது கேளாதவர், கண் தெரியாதவர், வாய்பேச முடியாதவர்கள், பாரிச வாதம், முடக்கு வாதம், இடுப்பு வலி, அஸ்மா, படபடப்பு, வீரியமின்மை, பெண்களுக்கு வெள்ளைபடுதல், மாதவிடாய் கோளாறு, மனநோய் (ஹிஸ்டீரியா) குழந்தை பேறின்மை, பாலியல் குறைபாடுகள், ஞாபக சக்தி இன்மை, நித்திரை இன்மை, பசியின்மை, தலை முடி உதிர்தல், தோல் நோய் இப்படி தீர்க்க முடியாத வியாதிகளுக்கு மனோதத்துவ சிகிச்சையிலும், வைத்திய முறையிலும், மாந்திரீக முறைகளிலும் வெற்றி கண்டவர். எத்தனை எத்தனையோ பேர்-இதைவிட பெரிய சக்தி வந்தாலும் வாழவைக்கும் மகாசக்தி ஸ்ரீ துர்கா தேவியின் அருளால் வசதி அற்றோருக்கு எம்மாத கடைசியும் கொழும்பிலும், நுவரெலியாவிலும் இலவச அற்புத ஞான தியான பூஜை நடைபெறுகிறது. தேவைகளுக்கு முன் அறிவித்தலுடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு-

P.K.SAAMI (J.D.G.A.N) & J P, மலையாள மாந்திரிக உச்சாடனப் பீடம்,
162, கொட்டாஞ்சேனை வீதி, பீல் பீல்ட் ரோட், கொழும்பு-13.
தொலைபேசி - 01.342463/64 344832 விசேட பிரிவு - 344831 EXT FRS



**SABONA OF LONDON** ஆரோக்கியமான வாழ்வுக்கு சபோனா



வாதம், இரத்தக் கொதிப்பு, மூட்டுவலி, தலைவலி, கைகால் மரத்தல் முதலான நோய்களிலிருந்து நிவாரணம் பெற்ற உலகின் பலகோடி மக்கள் அயலாரிடம் உத்தரவாதம் அளிக்கும் சர்வதேச சிறப்பு பெற்ற ஒரே இயற்கை நிவாரணி.

செப்பு, வெள்ளி, 24 கரட் 5 மைக்றோன்ஸ் கனம் கொண்ட தங்க முலாம் பூசப்பட்ட வைவர்ண டிசைன்களிலும் கிடைக்கின்றன.

சபோனா செப்புக் கையணி

உலகம் முழுவதுமே வலம் வருகிறது சபோனா


போலிகளை வாங்கி வருந்தாதீர்கள்

Brass, Silver & Gold Plated Magna Bangles are Available ISLAND WIDE

ரூ. 750/- க்கு மேல்

இருதயக் கோளாறு குருதிச் சுற்றோட்டத் தொகுதி, மாதவிலக்கு நோவு, இரத்தோட்டத் தடை, நரம்பு முடிச்சு, வாசத்தன்மை இழப்பு, அமுக்கம், நரம்புத் தளர்ச்சி, தலைவலி, தூக்கமின்மை, தசைப்பிடிப்பு, இளைப்பு நோய், நீரிழிவு, சோர்வு, இடுப்புப் பிடிப்பு, பிரயாண அசதி, வாதநோய், வலிப்பு நோய்களுக்கு

சபோனா மெக்னா கையணி




தயாரிப்பு : சபோனா வாதரோக நிவாரண சமாஜம் லண்டன் (U.K) Estd. 1960

SOLE AGENTS **WINNER (PVT) LTD.**
100- 1/16, CRYSTAL PALACE SUPER MARKET, KEYZER STREET, COLOMBO 11.
TEL: 434658, 345245.



விளம்பரப் பகுதி

**SPOKEN ENGLISH**
BRIGHT ஆசிரியர்
PON. SAKTHIVEL DIP. IN. ENG (LOND)
அவர்களின் நேரடி வகுப்புகள் நடைபெறுகின்றன
ACA 55 ST. LUCIA'S ST KOTAHENA.

வெளிவந்து விட்டது !
விஞ்ஞானம் ஆண்டு - 10 (குறிப்புகள், விரிவான வினா - விடை)
விஞ்ஞானம் ஆண்டு - 11 (குறிப்புகள், விரிவான வினா - விடை)
விஞ்ஞான விளக்கம் ஆண்டு - 10,11 (210 வினா, விளக்கம் அடங்கியது)
விஞ்ஞானச் சுருக்கம் ஆண்டு -9,10,11 (ஆண்டு 9,10,11 சுருக்கமாக அமைந்துள்ளன)
இம்முறை G.C.E.(O/L) பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு ஏற்றவாறு குறிப்புகளுடன் அமைந்துள்ளன.
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
ஆக்கம்: ஆ. யோகராஜா.
தொடர்பு: A. JOGARAJAH 90/1, CHRISTURAJA MAWATHA, NAYAKAKANDA, HENDALA, WATTALA

**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
**ரிஷி. S.மணி**
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு, கொழும்பு 11,
போன்: 421398




படிப்பகம்

www.padippakam.com

# விளம்பரம் தேடும் அரசியல் கட்சிகள்

'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது' என்றொரு பழமொழி இருக்கிறது.

சமீபகால பத்திரிகைச் செய்திகளைப் படிக்கும்போதும் அதுதான் நினைவுக்கு வருகிறது.

"யாழ்ப்பாணத்தில் மனித உரிமை நிலவரங்களை ஆராய மனித உரிமைச் செயலணிக்குழு அவசர மாநாடு கூடுகிறது.

நீலன் திருச்செல்வம், அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ பிள்ளை, மகிந்த சமரசிங்க ஆகியோருக்கு அழைப்பு" என்றொரு செய்தி வெளியாகியிருந்தது.

இச்செய்தி யாரோ ஒரு அரசியல் வாதியால் பத்திரிகைக்கு கொடுக்கப்பட்டதா, அல்லது செய்தியை வெளியிட்ட பத்திரிகை தவறாக விளங்கிக்கொண்டு பிரசுரித்த செய்தியா என்பது தெரியவில்லை. முன்னது தான் சரியாக இருக்கும் என்று தோன்று கிறது.

செய்தியைப் படித்ததும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், ஆச்சரியப் பட்டனராம்.

தம்மை அழைக்காமல் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரை மட்டும் அழைத்தது ஏன்? என்று மனித உரிமை செயலணிக் குழுத் தலைவரை ஃபோனில் விசாரித்தனர்.

அப்போதுதான் விஷயம் வெளியானது. மனித உரிமை செயலணிக் குழுவில் தேசிய ஆலோசனைக் குழு ஒன்று இருக் கிறது.

அந்த தேசிய ஆலோசனைக் குழுவில் ஜெயராஜ் பெர்ணான்டோ பிள்ளை, நீலன், மகிந்த சமரசேகர, ஆகியோரும் உறுப்பினர் கள். ஆக அவர்கள் ஒன்றும் விசேஷமாக அழைக்கப்படவில்லை.

மனித உரிமைச் செயலணிக் குழுவை யாழ் மாவட்டத்துக்கு அனுப்புமாறு கூட்டணி யினர் அறிக்கை விடுகின்றனர். அந்த செயலணிக் குழுவுக்கு ஆலோசனை வழங் கும் குழுவில் நீலனும் இருக்கிறார் என்பதை மட்டும் இரகசியமாக வைத்திருந்தனர்.

அதேநேரம் மனித உரிமைச் செயல ணிக் குழுவினர் தம்மை மட்டுமே அழைத் துள்ளனர் என்பதுபோல மக்கள் நினைக்க கூடியவகையில் ஒரு தவறான செய்தியையும் பத்திரிகைகளுக்கு கொடுத்துவிட்டனர்.

செய்தியைப் படித்தவர்கள் என்ன நினைத்திருப்பார்கள்? கூட்டணியினர் மட்டும் தான் மனித உரிமை விடயத்தில் மிக்க அக்கறையாக உள்ளனர்; அதுதான் ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைக்காமல், நீலன் திருச்செல்வத்தை மட்டும் அழைத்திருக்கிறார்கள் என்றுதான் நினைப்பார்கள்.

குறிப்பிட்ட செய்தியை கூட்டணியினர் மறுக்கவில்லை. அதனால் குமார் பொன்னம் பலம் குறிப்பிட்ட செய்தி தொடர்பாக கேள்வி எழுப்பினார். "ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் அழைக் கப்படவில்லை?" என்று சந்தேகம் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களும் மனித உரிமைச் செயலணிக் குழுத் தலைவரிடம் விளக்கம் கேட்டனர்.

அவர் மூலம்தான் உண்மை தெரிந்தது. அது மட்டுமல்லாமல் யாழ் மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர்களையும் கலந்து கொள்ளு மாறு அழைப்பும் விடுக்கப்பட்டது.

மனித உரிமை செயலணிக்குழு என்பது என்ன? அரசாங்கத்தால் உருவாக் கப்பட்ட ஒரு அமைப்புத்தான் அது.

அரசசார்பற்ற மனித உரிமைக் குழுக்கள் பல இருக்கின்றன. அந்த அமைப் புக்கள் வடக்கு-கிழக்கில் அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளில்கூட சுதந்திரமாக இயங்க முடியாத நிலையில் உள்ளன.

குறிப்பிட்ட அமைப்புக்களை அங்கு செயற்பட அனுமதித்தால் மனித உரிமை மீறல்கள் வெளியுலகுக்கு தெரிந்துவிடும் என்று அரசாங்கம் நினைக்கிறது.

மனித உரிமை செயலணிக் குழுவினர் அரசாங்கத்திற்கு நெருக்கடியைக் கொடுக்கும் வகையில் செயற்படமாட்டார்கள். ஏனெனில் அக்குழுவில் இருப்பவர்கள் பலர் அரசாங்கத் தால் நியமிக்கப்பட்டவர்கள்.

யாழ் குடாநாட்டில் படையினர் நிலை கொண்டு ஒரு வருடமாகிவிட்டது. அங்கு மட்டுமல்ல கிழக்கிலும் மனித உரிமை மீறல்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

அப்படியிருந்தும் மனித உரிமை செயலணிக்குழு இதுவரை மௌனமாகத்தான் இருந்தது.

காரணம்; அரசாங்கத்திடம் இருந்து பச்சைக்கொடி காட்டப்படவில்லை. இப்போது யாழ் குடாநாட்டு நிலவரங்கள் தவிர்க்க முடியா மல் வெளியே தெரியத் தொடங்கிவிட்டன.

இந்நிலையில் மனித உரிமைகள் தொடர் பான கேள்விகளையும், சந்தேகங்களையும் களைந்தேயாக வேண்டும். இல்லாவிடில் அரசாங்கத்தின் 'இமேஜ்' வெளியுலகில் கெட்டுப்போய்விடும்.

'யாழ் குடாநாட்டு நிலவரம் நன்றாகத்தான் இருக்கிறது. வேண்டுமானால் நீங்களே சென்று பாருங்கள்' என்று அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புக்களை அனுப்பிவைக்க அரசாங்கம் தயாராக இல்லை.

அவ்வாறு அனுப்பிவைத்தால் பொல்லைக் கொடுத்து அடிவாங்கிய கதையாகிவிடும்.

எனவேதான் மனித உரிமைச் செயலணிக் குழுவை யாழ்ப்பாணம் அனுப்பிவைத்தது அரசாங்கம்.

யாம் செல்ல வேண்டும் என்று அரச சார்பற்ற மனித உரிமைக் குழுக்கள் கேட்காம லிருக்கவும், மனித உரிமை நிலவரங்கள் பற்றி ஆராயப்படுவதாகக் காட்டவும் மனித உரிமை செயலணிக் குழுவின் யாழ் விஜயச் செய்திகளும், 'அவசர மாநாடு'ச் செய்திகளும் அரசாங்கத்திற்கு சாதகமாக உள்ளன.

மனித உரிமை செயலணிக்குழு ஏற்கனவே அம்பலமான தகவல்களை ஆராயுமே தவிர, வெளியே வாராத சங்கதிகளை தோண்டி எடுத்து வெளிச்சத்துக்கு கொண்டுவரும் என்று நம்புவது சிரமம்தான்.

மனித உரிமை செயலணிக் குழு தன் பாட்டில் செயற்படட்டும். அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புக்கள், தொண்டர் நிறுவனங்கள் வடக்கு-கிழக்கில் சுதந்திரமாக செயற்படவும் அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

அதுதான் தமிழ் கட்சிகளின் கோரிக்கையாக இருக்கவேண்டும்.

சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டிய விஷயங்கள் கூட அரசாங்கத்தின் கண்டனத்துக்கு உள்ளாகியிருந்தன.

இந்நிலையில் அரசாங்கத்தால் நியமிக் கப்பட்ட மனித உரிமை செயலணிக்குழு அரசாங்கத்தின் கண்டனத்தை சம்பாதிக்க விரும்புமா என்பது சந்தேகம்தான்.

தொண்டர் நிறுவனங்கள் புலிகளுக்கு சார்பாக மாறிவிடுகின்றன என்று அரசாங்கம் சந்தேகிக்கிறது. அதனால்தான் அவற்றை சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க தயங்கு கிறது.

அதே நேரம் மனித உரிமை செயலணிக் குழுவை மட்டுமே யாழ் குடாநாட்டுக்கு அரசாங்கம் அனுப்பிவைக்கிறது.

**அரச சார்பு, புலிகள் சார்பு என்ற இரண்டும் இல்லாமல் உண்மைகளை மட்டுமே கண்டறிந்து கூறுகின்ற மனித உரிமைக் குழுக் களால் மட்டுமே, யாழ் குடாநாட்டில் புதை யுண்டுள்ள உண்மைகளை வெளியே கொண்டு வர முடியும்.**

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு உண்மை களை கண்டறியத் தூண்டும் ஆர்வத்தைவிட விளம்பரம் தேடும் வேகம் ஏற்பட்டுவிட்டது.

சமீபகாலமாக கூட்டணியினர் சுறு சுறுப் பாக களத்தில் குதித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதிக்கு ஆதரவான அறிக்கை, கையெழுத்து விவகாரம் போன்றவற்றால் தமது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை துடைத்தெறிய காட்டமான அறிக்கைகளை கையிலெடுத்துள்ளனர்.

எனினும் கூட்டணியினரின் அறிக்கைகள் பேச்சுக்கள் எவற்றிலும் ஜனாதிபதியை நோக்கிய விமர்சனம் தவிர்க்கப்பட்டே வருவதை புத்திசாலியான திருவாளர் பொதுஜனம் அவதானிக்க முடியும்.

**எல்லா அறிக்கைகளும் ஜனாதிபதியிடம் நீதி கேட்பதாகவே இருக்கின்றன. நீதிபதியிடம் நம்பிக்கை இருந்தால்தான் அவரிடம் நீதி கேட்க முடியும்.**

முப்படைகளின் தளபதி ஜனாதிபதிதான். கூட்டணியும், தமிழ் கட்சிகளும் ஜனாதிபதியிடம் நம்பிக்கை இழக்கவில்லை.

அரசியல் சாணக்கியத்தின் அந்த சூட்சுமத்தை மக்கள் புரிந்துகொள்ளாதவரை தமிழ் அரசியல்வாதிகள் பாடு கொண்டாட்டம்தான்.



## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# முற்றுகையும் - நெருக்கடியும்

**வ**வுனியா நகரில் ரோந்துசென்ற பொலிஸ் ஜீப்மீது புலிகள் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள்.

27.08.96 அன்று நடத்தப்பட்ட அத்தாக்கு தல்தான் வவுனியாவுக்குள் தமது கவனம் திரும்பிவிட்டது என்பதற்கான புலிகளின் அறிவிப்பு.

அத் தாக்குதலுக்கு வன்னியில் இருந்து புலிகளே உரிமை கோரியபோதும், வவுனியா வில் பலர் அதனை நம்பவில்லை. வேறொரு இயக்கம் மீதே சந்தேகம் திரும்பியது.

'எக்ஸ்ரே ரிப்போட்டில் அத்தாக்குதல் தொடர்பாகவும், நோக்கம் தொடர்பாகவும் தெளிவாகக் கூறப்பட்டதை வாசகர்கள் அறிவீர்கள்.

இப்போது வவுனியாவில் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் தொடர்ந்து வரு கின்றன.

வவுனியா உட்பட படையினரின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் புலிகள் இரண்டுவிதமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர்.

ஒன்று; குறிப்பிட்ட பகுதிகளுக்குள் தங்கியிருந்துகொண்டு செயற்படுவது.

இரண்டு; வெளியே இருந்து ஊடுருவித் தாக்குவது.

வடக்கு-கிழக்கில் படையினரின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளில் வவுனியாதான் பிரச்சனைகள் குறைவான பத்திரமான இடம் என்று முன்னர் கருதப்பட்டது.

அப்போதும் வவுனியா நகருக்குள் புலிகள் இயக்கத்தினர் பல்வேறு ரூபங்களில் இருக்கவே செய்தனர்.

வவுனியாவில் நிலவரத்தை குழப்பிவிடா மல் தமது இரகசிய வேலைகளுக்குரிய ஒரு பகுதியாக அதனை வைத்திருக்க நினைத்தனர். அதனால் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடு படவில்லை.

யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. வவுனியாவைத் தாண்டி சென்றால் புலிகளின் ராச்சியம்தான் என்பதே அப் போதைய நிலை.

தமது கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு தேவை யான பொருட்களை பெற்றுச் செல்வது. தலைநகர ஊடுருவலுக்கும், இரகசிய வேலை களுக்கும் வவுனியாவை ஒரு மையமாகப் பாவிப்பது, தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து வவுனியாவுக்கு வரு வோரின் நடவடிக்கைகளை கண்காணிப்பது போன்ற பணிகளை செய்ய வவுனியாவை புலிகள் பயன்படுத்தினார்கள்.

'எல்லாளன் படையினரின்' பெயரில் அனுப்பப்பட்ட கடிதங்கள் கூட வவுனியாவில் இருந்தே முன்னர் தபாலிடப்பட்டன.

பின்னர் வவுனியாவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் கடுமையாகின. வவுனியா மூலமாக தலைநகருக்கு வெடிமருந்துகள், ஆயுதங்கள் என்பவற்றைக் கொண்டுவருவதும் இயலாத விடயமாகியது.

அதனால் கடல் பாதையைப் புலிகள் பயன்படுத்த ஆரம்பித்தனர். யாழ் குடாநாடும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது. பின்னர் கிளிநொச்சி நகரும் படையினரின் கைக்குள் சென்றது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருக்கும் மக்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உள்வாங்கும் மையப் பகுதியாக வவுனியா நகர் மாறியது.

**வவுனியா நகர் தமது பயன்படுத்தலுக்கு ஏற்ற இடமாக இருந்தபோது புலிகள் இயக்கத் தினர் நகர் நிலவரத்தைக் குழப்ப நினைக்க வில்லை.**

**தம்மைவிட அரசுக்கும், படைகளுக்கும் பயன்பாடு உள்ள பகுதியாக வவுனியா நகர் மாறியபோதுதான் புலிகள் தமது தாக்குதலை ஆரம்பித்தனர்.**

புலிகள் தாக்க நினைக்காமையால்தான் வவுனியாவில் அமைதி நிலவியது. ஆனால் தமது பாதுகாப்பு நடவடிக்கைகள் காரண மாகவே புலிகள் அங்கு எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர் என்று படைத்தரப்பு நினைத்தது.

பாதுகாப்பு நிறைந்த வவுனியா நகரின் மையப்பகுதியில் தாக்குதல் நடத்தியது மட்டு மல்லாமல், அங்கிருந்து பத்திரமாகத் தப்பிச் சென்றதின் மூலம் படையினர் நினைப்பை புலிகள் பொய்யாக்கிவிட்டனர்.

கடந்த 7.11.96 அன்று வவுனியா கணேசபுரத்தில் பாரிய அதிரடித் தாக்குதல் ஒன்று புலிகள் இயக்கத்தினரால் நடத்தப் பட்டது.

அதிகாலை ஒரு மணிக்கு 50ற்கு மேற்பட்ட புலிகள் இயக்க கெரில்லாக்கள் திடீரென்று முற்றுகையிட்டு இராணுவக் காவலரண்களை தாக்கத் தொடங்கினார்கள்.

பலமான பங்கர்கள் அமைத்து படையினர் காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர். புலிகள் தாக்கத் தொடங்கியதும் படையினர் திருப்பித் தாக்கவே செய்தனர். அதனால் புலிகள் தரப்பில் தாக்குதல் பிரிவுத் தலைவர்கள் இரு வர் உட்பட ஐந்து பேர் பலியாகினர்.

பங்கர்கள் எங்கெங்கே இருக்கின்றன. ஒவ்வொரு பங்கர்களுக்குள்ளும் எத்தனைபேர் இருக்கிறார்கள் போன்ற துல்லியமான தகவல் களுடன், அத் தகவல்களுக்கு ஏற்ப புலிகள் முற்றுகையிட்டதால் படையினரால் தாக்குப் பிடிக்க இயலவில்லை.

பங்கர்களை கைவிட்ட படையினர் பின் வாங்கிச் செல்ல, பங்கர்களுக்குள் புலிகள் வந்துவிட்டனர். அந்த பங்கர்களுக்குள் இருந்து புலிகள் தாக்கத் தொடங்கினர். அந்த பங்கர்களுக்குள் இருந்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, பங்கர்களுக்குள் கைக் குண்டுகளை போட்டு வெடிக்கச் செய்து விட்டு புலிகள் திரும்பிச் சென்றனர்.

ஐந்தே ஐந்து நிமிடத்துக்குள் இத்தனை காரியமும் முடிந்துவிட்டது.

25 காவலரண்கள்வரை அழிக்கப் பட்டன. படையினர் தரப்பில் ஒருவரது உடலையும் புலிகள் கைப்பற்றிச் சென்றனர்.

இதன்பின்னர் 11.11.96 அன்று வவுனியா உப்புவெளிப் பகுதியில் புலிகளால் ஐந்து நிமிடத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. மூன்று காவலரண்கள் தாக்கப்பட்டன. படையினரின் இரண்டு உடல்கள் தம்மால் கொண்டு செல்லப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் எப்போதும் விழிப்பாக இருக்க முடியாது. அதனால் நிலைகொண்டுள்ள படையினரைவிட அவர்களைத் தேடிச் சென்று திடீர் முற்றுகையிட்டு தாக்கும் கொரில்லாக்களின் வேகம் உக்கிரமாக இருக்கும்.

எதிர்பாராமல் திடீர் தாக்குதலுக்கு உள்ளாவோர் தப்பிச் செல்லவே முற்படுவர். எதிரிகள் எங் கெங்கே பதுங்கியுள்ளனர்? அவர்களின் பலம் என்ன? போன்ற விபரங்கள் முற்று கைக்கு உள்ளாவோருக்கு தெரியாது.

சரமாரியாக முழங்கும் துப்பாக்கி வேட்டுக்கள் முற்றுகைக்கு உள்ளாவோரை அடுத்த நடவடிக்கைக்கு நிதானமாகத் திட்டமிட அனுமதிக்காது.

கடந்த மாதம் வவுனியாவில் நடை பெற்ற ஒரு மோதலில் புலிகளின் மற்றொரு உத்தியும் வெளிப்பட்டது.

படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதிகளுக் குள் மறைந்திருந்த புலிகளின் அணி ஒன்று படையினரை பின்புறமிருந்து தாக்க, மற்றொரு அணி வெளியில் இருந்து வந்து தாக்குதல் தொடுத்தது. அம்மோதலில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் பலியானார். படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருந்து சென்ற குழுவுக்கு தலைமை தாங்கியவர் அவர்தான்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதி களுக்குள் தாக்குதல்களை நடத்தும் புலிகளின் நோக்கத்தில் உடனடியாக முக்கியத்துவம் உள்ள பகுதிகள் யாழ் குடாநாடும், வவுனியாவும்தான்.

'வவுனியாவில் இருப்பதைவிட புலி களின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் இருப்பதே மேல்' என்னும் நிலைக்கு இட்டுச் செல்வதுதான் புலிகளின் நோக்கம்.

**வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களுக் கான முகாம்களில் உள்ளவர்கள் பலர் மீண்டும் வந்த வழியே திரும்பிச் செல்ல விரும்புகின்றனர். புலிகள் தமது நோக்கத் தில் வெற்றி பெற்று வருவதையே இச் செய்தி வெளிப்படுத்துகிறது.**

புலிகளை தனிமைப்படுத்தி போரில் அவர்களை வெல்வது என்பது அரசாங் கத்தின் தந்திரோபாயங்களில் ஒன்று. அந்த தந்திரோபாயத்தில் வெற்றி பெறுவது, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அமைதி நிலவுவதில்தான் தங்கியுள்ளது.

ஆனால், அதனைச் செய்வதற்கு புலி கள் தமது கைகளைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டும். அது நடக்காது. மறுதரப்பின் வெற்றிக்கு எதிர்த்தரப்பு எப்படி ஒத்துழைக்கும்?

அடுத்த அதிரடி முற்றுகைக்குத்தான் புலிகள் தயாராவார்கள். அதனால் கெடு பிடிகளை தளர்த்தும் வாய்ப்பு படை யினருக்கு ஏற்படப்போவதில்லை. நிலமை கள் கவலைக்கிடமாக்கத்தான் தொடரப் போகின்றன.

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**யா**ழ் குடாநாட்டில் நடமாடும் ரெண்டு எழுத்துப் பெண் உறுப்பினர் கள் நகைகளும் அணிந்து காணப்படு கின்றனராம். முன்னர் நகைகள் அணி வது கிடையாது. "ஏன் இந்த மாற்றம்?" என்று கேட்டால், "எல்லாம் ஒரு காரணத்தோடுதான்" என்று சொல்லி மர்மப் புன்னகை சிந்துகிறார்களாம். குடாநாட்டு தாக்குதல்களில் பெண் ரெண்டு எழுத்தார்தான் முன்னணியி லும் நிக்கினமாம். புதியவர்களைத் திரட்டுவதிலும் சுறு சுறுப்புக் காட்டிகினமாம்.

**கூ**ட்டான கட்சியினரின் அலுவலகத்தில் தட்டச்சு இயந்திரத்துக்கு எண்ணெய் போட்டு தயார் படுத்தியிருக்கினமாம். நாட்டின் எந்த மூலையில் என்ன சம்பவம் நடந்தாலும் உடனடியாக அறிக்கை விட வேண்டியிருக்கும். தட்டெழுத்தாளர் 24 மணிநேரமும் தயார் நிலை யில் இருக்க வேண்டும். பத்திரிகையாளர்களுடன் தொடர்புகளைப் பேணுவதன்மூலம் வாரமொரு செய்தியாவது வரக்கூடியதாக இருக்க வேண்டும் என்றெல்லாம் சூடான தீர்மானங்கள் எடுக்கப் பட்டிருக்குதாம். தமது கட்சியின் பேர் ரிப்பேராகக் காரணமான ஒரு பிரமுகர்மீது வேறு சில பிரமுகர்கள் வெறுப்பில் இருக்கிறார் களாம்.

**கி**ழக்கில் ஒரு பகுதிக்கு மட்டும் மின்சாரம் இருந்தபோது தனது பகுதிக்கும் தருமாறு கேட்டாராம் கிழக்கின் வெகுஜனப் பிரதிநிதி ஒருவர். அவர் தனித்துவக் கட்சியைச் சேர்ந்தவர். அவர் கேட்ட பகுதிக்கு கொடுப்பது கஷ்டம் என்று கையை விரித்தனர் மின் சார சபையினர். "அப்படியானால் 24 மணிநேரத்தில் ஜெனரேட்டர் கொண்டுவரவேண்டியிருக்கும்" என்றாராம் பிரதிநிதி. இது ஒருபுற மிருக்க, ஏற்கனவே மின்சாரம் இருந்த பகுதிகளுக்கும் மின்சாரம் நின்றுபோய்விட்டது. நீண்ட நாட்களாக இருள் ஆட்சி செய்தது. அவராவது ஒரு ஜெனரேட்டர் கொண்டுவந்தால் நல்லாயிருக்கும் எண்டு மின்சாரசபையினர் தேடினார்களாம். அவர் தலைநகர் சென்றுவிட்டார் என்று தகவல் கிடைத்ததாம்.

**யா**ழ் குடாநாட்டில் களவுகள், சுருட்டல்கள் பல ரகம். அதில் ஒரு ரகம் இது- ஆட்கள் இல்லாத வீடுகளில் "யாரும் உட்புகக் கூடாது" என்று எழுதி ஒட்டப்பட்டிருக்குமாம். உள்ளே சுருட்டல், கழட்டல், பிடுங்கல் வேலைகள் எல்லாம் நடக்குமாம். 'உட்புக வேண்டாம்' என்று எழுதி ஒட்டப்பட்ட வீடுகளை சில நாட்களின் பின்னர் காணவில்லையாம். இந்த கச்சிதமான சுருட்டல் விவகாரத்திற்கு பொறுப்பு வாய்ந்த பதவியில் உள்ள ஒருவர்தான் காரணமாம்.

**பா**ரிசில் நம்மவர்கள் சம்பந்தப்பட்ட ஒரு சமாச்சாரம்- குழந்தைக்கு பல்லு முளைத்ததைப் பெரிசாக கொண்டாடினாராம் நம்மவர் ஒருவர். குழந்தையின் தலையில் கொழுக்கட்டை கொட்டியபோது வீடியோவில் படம் பதியவில்லையாம். தகப்பன்காரருக்கு வந்த கோபத்தை அடக்க முடியேல்லையாம். விழா மண்டபத்தில் இருந்து மீண்டும் வீட்டுக்கு காரில் போய் புதுக் கொழுக்கட்டைகள் கொண்டு வந்து வீடியோவில் எடுத்தபிறகுதான் சாந்தி நிலவியதாம். விழாவுக்கு வந்தவர்களை பெண்கள் முதலில் வணக்கம் சொல்லி வரவேற்றனராம். பின்னர் கை குலுக்கியும் வரவேற்றனராம். அது ஏன் இரண்டு ரகமான வணக்கம்? அதொன்றுமில்லை, கை கூப்பியது காப்புகளைக் காட்டுறதுக்கு; கை குலுக்கியது காப்புக்களின் பாரத்தைக் காட்டுறதுக்கு. இத்தகவல்களை 'ஈழகேசரி'யில் குருநாதன் எழுதியிருக்கிறார். வெளிநாட்டில் நம்மவர்கள் சிலர் இன்னமும் தொட்டில் பழக்கத்தை கைவிடேல்லை.

**வா**னொலி தமிழ் சேவையை 'பவர் ஃபுல்'லாகப் பயன்படுத்துவது தொடர்பாக ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்படுகிறதாம். தமிழ் மக்களின் மத்தியில் அதிகாரத்தரப்பார் விடயத்தில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுதான் பிரதான நோக்கமாம்.

**ச**மீபத்தில் அதிகாரமுள்ள சக்தியானவர் தமிழ் பிரமுகர்கள் சிலரைக் கூப்பிட்டு ஆலோசனை கேட்டிருக்கிறார். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தப்பபிப்பிராயங்களை போக்குவது எப்படி என் பதுதான் ஆலோசனையின் நோக்கமாம். பலவிதமான யோசனைகள் சொல்லப்பட்டனவாம். பரிசீலிக்கப்படும் என்று பதில் சொல் லப்பட்டிருக்கிறது. யோசனை சொன்னவை கொலரைத் தூக்கி விட்டுக்கொண்டு நிற்கினம்.

**ஜி**.மணி என்பவர் தமிழகத்து நிலையையெண்ணி வெதும்பி எழுதிய கவிதையொன்று. நமக்கும் பொருந்துவது போலத் தெரிகிறதா பாருங்கள்.

"தமிழகம் கீழுமல்ல,
முழுவதும் மேலுமல்ல;
உலையேற்றிவிட்டு
சோறாக்க மறியல்
பட்டினியும்-அறிவுமே
கிடைத்த பயன்:
பின்னாலும் போகவில்லை
முன்னாலும் போகவில்லை;
நடுக்கிணற்றில் நிகழ்காலம்."



படிப்பகம்

www.padippakam.com

104

## அரசியல் தொடர்
### அற்புதன் - எழுதுவது

# பர்மாவில் இருந்து வந்த ஆயுதக் கப்பல்

# வழிமறிக்கப்பட்ட இந்தியப்படை

### மட்டக்களப்பில் தாக்குதல்

புளொட் இயக்கத்தின் அரசியல் துறைச் செயலர் வாசுதேவாவும், படைத் துறைச் செயலர் கண்ணனும் மட்டக்களப்பில் இருந்தனர்.

இருவரையும் ஒன்றாகவே தீர்த்துக் கட்டத் திட்டமிட்டனர் புலிகள் இயக்கத்தினர்.

புளொட் அமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு புலிகள் இயத்தினர் தயாராக இருப்பதாக வாசுதேவாவுக்கு ஒரு தகவல் கிடைத்தது.

தனது சகோதரர் பரமதேவா புலிகள் இயக்கத்தில் இருந்தவர் என்பதால் தன்னோடு பேசுவதற்கு புலிகள் விரும்பக் கூடும் என்று வாசுதேவாவும் நம்பி விட்டார்.

ஆகஸ்ட் மாதத்தில் மட்டக்களப்பில் புலிகள் இயக்க காரியாலயத் திறப்பு விழாவில் பரமதேவா, வாசுதேவா ஆகியோரின் தாயார்தான் புலிக்கொடியை ஏற்றிவைத்தார்.

பலியான பரமதேவாவை கௌரவிக்கும் முகமாக அவரது தாயாரை கொடியேற்றவைத்தனர் புலிகள் இயக்கத்தினர். தன்னுடன் பகைமை பாராட்டமாட்டார்கள் என்று வாசுதேவா நினைக்க அதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

செப்டம்பர் 13ம் திகதி காலை பாசிக்குடா கடற்கரையில் குளித்துவிட்டு வாசுதேவாவும், கண்ணனும் புளொட் உறுப்பினர்கள் சிலரும் வாகனத்தில் சென்றனர்.

வாசுதேவா குழுவினரை எதிர்பார்த்து கும்புறு முல்லைச் சந்தியில் புலிகள் இயக்கத்தினர் காத்திருந்தனர்.

வாகனம் வந்ததும் வழிமறித்த புலிகள் இயக்கத்தினர் வாசுதேவா குழுவினரை சுட்டுக்கொன்றனர்.

வாசுதேவா, கண்ணன் ஆகியோரும், சுபாஷ், ஆனந்தன் ஆகிய புளொட் இயக்க முக்கிய உறுப்பினர்களும் பலியானார்கள்.

வாசுதேவா ஆரம்பத்தில் தமிழ் இளைஞர் பேரவையின் முக்கிய உறுப்பினராக இருந்தவர். கூட்டணியின் போக்கை நிராகரித்து இளைஞர் பேரவையில் ஒரு பகுதியினர் பிரிந்தனர். 'இளைஞர் பேரவை விடுதலை அணி' என்று தம்மை அழைத்துக் கொண்டனர். அதில் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தவர் வாசுதேவா. அதன் பின்னர் புளொட் இயக்கத்தின் ஒரு பிரிவான தமிழ் ஈழ விடுதலைக் கழகத்திலும் வாசுதேவா செயற்பட்டார். 'புளொட்' இயக்கத்துக்குள் ஏற்பட்ட உள்முரண்பாடுகளின்போது வாசுதேவா உமாமகேஸ்வரனின் பக்கம் இருந்தார்.

கண்ணன், புளொட் இயக்க உருவாக்கத்திலும் பங்குகொண்டவர். 'புதிய பாதை' பத்திரிகை ஆசிரியர் சுந்தரம் புலிகள் இயக்கத்தினரால் கொல்லப்பட்டார். அதன் பின்னர் 'புதியபாதை'யை தொடர்ந்து வெளியிடுவதில் முக்கிய பங்கெடுத்தவர் கண்ணன். ஜோதீஸ்வரன் என்பது அவரது சொந்தப் பெயர்.

கண்ணனை சென்னையில் வைத்து புலிகள் இயக்கத்தினர் கடத்திச் சென்று, பின்னர் விடுவித்தது தொடர்பாக முன்னர் விபரித்திருந்தேன்.

### தாயாரின் கோபம்

வாசுதேவா, கண்ணன் ஆகியோரை பேச்சுவார்த்தைக்கு அழைத்து புலிகள் இயக்கத்தினர் கொலை செய்துவிட்டதாக புளொட் கடுமையாகக் குற்றம்சாட்டியது.

செய்தியறிந்த வாசுதேவாவின் தாயார் அதிர்ச்சியடைந்தார்.

வாசுதேவா, கண்ணன் ஆகியோரின் உடல்களை புலிகள் எடுத்துச் சென்றுவிட்டனர்.

வாசுதேவாவின் தாயார் புலிகள் இயக்க அலுவலகத்துக்கு சென்றார். "என் மகனை எதற்காகக் கொலை செய்தீர்கள்?" என்று கேட்டார்.

வாசுதேவாவின் உடலை ஒப்படைக்கவும் புலிகள் இயக்கத்தினர் மறுத்துவிட்டனர். கோபம் அடைந்த வாசுதேவாவின் தாயார், தன்னால் முன்னர் ஏற்றிவைக்கப்பட்ட புலிகள் இயக்கக் கொடியை இழுத்துக் கிழித்துவிட்டு, அலுவலகத்தில் இருந்தவர்களை திட்டித்தீர்த்துவிட்டு சென்றுவிட்டார்.

மட்டக்களப்பில் இருந்த இந்தியப் படையினரிடம் சென்று முறையிட்டார். வாசுதேவாவின் உடலை மீட்டுத்தரும்படி கேட்டார்.

இந்தியப் படையினரால் மீட்டுக் கொடுக்க முடியவில்லை. வாசுதேவா அணிந்திருந்த பாதணிகள் மட்டுமே தாயாரிடம் சேர்ப்பிக்கப்பட்டன.

இச் சம்பவம் நடைபெற முன்னர் மன்னாரில் உள்ள புலிகள் இயக்க முகாம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

ஜில்மன் (அடம்பன்), அர்ஜுனா, ரஞ்சன் ஆகிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் மன்னாரில் கொல்லப்பட்டனர்.

புளொட் இயக்கத்தினர்தான் தாக்குதல் நடத்தியதாக புலிகள் இயக்கத்தினர் புகார் செய்தனர்.

"புகார் தெரிவித்தோம். இந்தியப்படையினர் நடவடிக்கை எடுக்கவில்லை. என்ன செய்வது?" என்று பிரபாகரனுக்கு தகவல் அனுப்பினார்கள் மன்னாரில் இருந்த புலிகள் இயக்கத்தினர்.

"திருப்பித்தாக்குங்கள்!" என்று உத்தர



விட்டார் பிரபாகரன்.

50க்கு மேற்பட்ட புளொட் இயக்க உறுப்பினர்கள் மன்னாரில் கொல்லப் பட்டனர்.

### கொழும்பில் புளொட்

புளொட் இயக்கத் தலைவர் உமாமகேஸ்வரன் கொழும்புக்கு வந்தார். தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடன் நெருங்கிய நட்புறவை ஏற்படுத்திக் கொண்டார்.

புலிகள் இயக்கத்தினருக்கும், புளொட் இயக்கத்தினருக்கும் இடையேயுள்ள பகைமையை பயன்படுத்தலாம் என்பதால் புளொட் இயக்கத்தினருக்கு லலித் அத்துலத் முதலி உதவி செய்தார்.

கொழும்பில் முகாம்களையும் அமைத்துக் கொண்டனர் புளொட் இயக்கத்தினர். வவுனியாவிலும் செயற்பட்டனர்.

டென்சில் கொப்பக்கடுவ அப்போது வவுனியாவில் இருந்தார். புளொட் இயக்கத்தினருடன் நெருக்கமான உறவுகளையும் வைத்திருந்தார்.

வவுனியாவில் புளொட் இயக்கத்தை நிலைப்படுத்துவதற்கு இராணுவரீதியான தொடர்புகளை ஏற்படுத்தியதில் மாணிக்கதாசன் முக்கிய பங்கு வகித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் டென்சில் கொப்பக்கடுவ புலிகளைப் பற்றி சொன்னது இது;

"அவர்கள் மிகத் திறமையாகச் சண்டை செய்தார்கள். நாம் எதிர்பார்க்காத வகையில் அவர்கள் எதிர்ப்பு தீவிரமாக இருந்தது."

இந்தியா தலையிட்டிருக்காவிட்டால் படைபலம் மூலமாக யாழ் குடாநாட்டை கைப்பற்றி முடித்திருக்கலாம் என்றும் டென்சில் கொப்பக்கடுவ தன்னைச் சந்தித்த புளொட் உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

### பிரபா குற்றச்சாட்டு

"இந்திய உளவுப்பிரிவான 'றோ' ஏனைய இயக்கங்களுக்கு ஆயுதம் வழங்கி, புலிகளுக்கு எதிராகச் செயற்படத் தூண்டிவிடுகிறது" என்று பிரபாகரன் குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே ராஜீவ்காந்திக்கும் பிரபாகரனுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி ஒப்புக்கொள்ளப்பட்ட பணத்தில் முதலாவது பகுதியை இந்தியா கொடுக்காமல் தாமதித்தது.

பணத்தை ஏன்விட வேண்டும். வாங்கி வைத்துக்கொண்டால் பின்னர் உபயோகப் படும் என்று நினைத்தனர் புலிகள்.

தருவதாக ஒப்புக்கொண்ட பணம் தரப் படவில்லை என்று ஆகஸ்ட் மாத இறுதியில் புலிகள் தரப்பால் நினைவூட்டப்பட்டது.

இந்திய அரசாங்கம் மறுக்கவில்லை. முதல் கட்டத் தொகையான 50 இலட்சம் ரூபாய் பிரபாகரனிடம் கையளிக்கப்பட்டது.

இரகசியமாக வைத்திருக்க வேண்டிய அத்தகவலை ஜெனரல் ஹரிகிரத்சிங் பத்திரிகைகளுக்கு கூறிவிட்டார்.

புலிகள் இயக்கத்தினர் தம்மோடு ஒத்துழைக்க மறுத்தால், பணத்தையும் வாங்கிக் கொண்டு ஏமாற்றுகிறார்கள் என்று மக்கள் நினைக்கட்டும் என்று ஹரிகிரத் சிங் எண்ணியிருக்கலாம்.

ஆனாலும் ஹரிகிரத் சிங் வெளியிட்ட தகவல் எதிர்பார்த்த பரபரப்பை ஏற்படுத்தவில்லை.

இந்திய அரசின் நடவடிக்கைகளும், இந்தியப் படையின் செயற்பாடுகளும், ஏனைய இயக்கங்களின் பிரவேசமும் பிரபாகரனின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இலங்கை அரசு ஒப்பந்தத்தை மீறிச் செயற்படும். அப்போது இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் இடையே விரோதம் உருவாகும்.

அவ்வாறு விரோதம் உருவாகாவிட்டாலும் இலங்கை அரசு ஒப்பந்தத்துக்கு மாறாக நடப்பதை சுட்டிக்காட்டிக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாராகலாம் என்பதுதான் பிரபாகரனின் ஆரம்ப நிலைப்பாடாக இருந்தது.

அதற்காக கொஞ்சக் காலம் காத்திருக்கலாம் என்றும் அவர் நினைத்தார்.

ஜே.ஆர் ஜெயவர்த்தனா இந்தியாவோடு பகைக்க விரும்பவில்லை. தெற்கில் ஜே.வி.பி. யினரும் வளர்ந்து கொண்டிருந்தனர்.

ஒரே நேரத்தில் புலிகளையும், ஜே.வி.பி. யினரையும் எதிர்கொள்வது புத்திசாலித்தனமல்ல. போதாக் குறைக்கு இந்தியாவையும் பகைத்துக் கொண்டால் வடக்கு-கிழக்கில் தனியாட்சியே ஏற்பட்டுவிடலாம்.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்து இந்தியாவை நண்பனாக வைத்திருக்கவே விரும்பினார் ஜே.ஆர்.

எனவே பிரபாகரன் பொறுமை இழக்கத் தொடங்கினார்.

இலங்கைப் படையினர் வெளியேறிய இடங்களில் எல்லாம் இந்தியப் படையினர் முகாம்களை நிறுவத் தொடங்கினார்கள்.

அதுவும் புலிகள் இயக்கத்தினருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

### யாழ் நிலை மாற்றம்

இந்திய படையினரின் வருகைக்குப் பின்னர் யாழ்ப்பாணம் வழமைக்கு திரும்பியது. யாழ் நகரில் ஷெல் தாக்குதல்கள் காரணமாக மக்கள் நடமாடவே அஞ்சினார்கள். கடைகளும் களையிழந்து காணப்பட்டன.



மட்டக்களப்பில் இந்தியபபடை

இந்தியப்படை வந்தபின் மக்கள் யாழ்நகரில் பயமில்லாமல் நடமாடினார்கள். கடைகள் களைகட்டின. 'இந்தியப்படை இருக்கையில் நமக்கென்ன பயம்?' என்பது போல மக்களின் மனநிலை மாறத்தொடங்கியது.

இந்தியப் படையினரோடும் மக்கள் வாஞ்சையோடு பழகத் தொடங்கினார்கள். இந்திப் பாசைகூட பலருக்கு பரிச்சயமானது. இந்தி வார்த்தைகள் சிலவற்றை தெரிந்து கொண்டு படையினருடன் பேசிப்பார்த்தார்கள்.

தமிழ் தெரிந்த படையினரும் இருந்தமையால் இந்தியப் படையினரோடு பழக்கம் ஏற்படுத்திக்கொள்வதில் தடையெதுவும் இருக்கவில்லை.

இப்படியே போனால் மக்கள் போராட்டத்தையே மறந்து விடுவார்கள். தங்களையும் மதிக்கமாட்டார்கள். தமிழீழம் வேண்டாம். ஒப்பந்தத்தில் உள்ளவையே போதும் என்று இருந்துவிடுவார்கள். இந்தியா சொல்வதற்கெல்லாம் தலையாட்டும் பொம்மைகளாக மாறிவிடுவார்கள் என்றுதான் புலிகள் இயக்கத்தினர் நினைத்தனர்.

இதற்கிடையே ஈ.என்.டி.எல்.எஃப் இயக்கத்தினரை யாழ்ப்பாணத்தில் அலுவலகம் திறப்பதற்கு இந்தியப் படையினர் அனுமதித்தனர்.

யாழ்ப்பாணம் குருநகரில் முன்னர் இராணுவமுகாம் இருந்த பகுதியில் உள்ள ஒரு வீட்டில் ஈ.என்.டி.எல்.எஃப் அலவலகம் திறக்கப்பட்டது.

அவ்வீட்டில்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தினரால் கடத்தப்பட்ட அமெரிக்கர்களான அலென் தம்பதியினர் முன்னர் குடியிருந்தனர்.

இந்திய 'றோ' உளவுப்பிரிவுதான் ஈ.என்.டி.எல்.எஃப்.பை அனுப்பிவைத்திருக்கிறது. அலுவலகம் நடத்த அவர்களை அனுமதிக்கக்கூடாது என்று தீர்மானித்தனர் புலிகள் இயக்கத்தினர்.

புலிகள் இயக்கத்தின் குருநகர் பொறுப்பாளர் அந்த ஊர்மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்.

ஈ.என்.டி.எல்.எஃப். அலுவலகம் முன்னால் சென்று, "வெளியேறுங்கள், வெளியேறுங்கள்" என்று மக்கள் கோஷமிட்டனர்.

"என்ன பிரச்சனை?" என்று கேட்டுக் கொண்டு வெளியே வந்தார் அந்த இயக்க உறுப்பினர் ஒருவர். "அடியுங்கடா அவனை" என்றொரு குரல் கேட்டதுதான் தாமதம், அந்த உறுப்பினர் தாக்கப்பட்டார்.

உள்ளே இருந்த உறுப்பினர்கள் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். செய்தியறிந்து யாழ் கோட்டையில் இருந்து இந்திய இராணுவத்தினர் விரைந்து வந்தனர்.

ஈ.என்.டி.எல்.எஃப். முகாமை மூடிவிட்டு, உறுப்பினர்களை பாதுகாப்பாக அழைத்துச் சென்றுவிட்டனர்.

படிப்படியாக இந்திய இராணுவத்தினருக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கினார்கள் புலிகள் இயக்கத்தினர்.

தமது ஆதரவாளர்கள் மூலம் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது. இந்தியப்படை கேட்டால், 'எமக்கும் அதற்கும் தொடர்பில்லை' என்று கூறிவிடுவது, அதுதான் புலிகளின் பாணியாக இருந்தது.

பலாலி இராணுவ முகாமில் இருந்து ரோந்துக்காக புறப்பட்ட இந்திய இராணுவத்தினரை தொடர்ந்து செல்ல விடாமல் அவ்வூர் மக்கள் வழிமறித்தனர். இந்திய இராணுவத்தினரை நோக்கி கற்களும் வீசப்பட்டன.

இந்தியப் படை தளபதி திபீந்தர் சிங் யாழ் கோட்டை முகாமுக்கு சென்றுகொண்டிருந்தபோது ஒரு கூட்டத்தினர் குறுக்கே நின்று கோஷங்களை எழுப்பினார்கள்.

கிட்டத்தட்ட 200 பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் அந்த ஆர்ப்பாட்டத்தில் காணப்பட்டனர்.

திபீந்தர் சிங்குக்கு காரணம் புரியவில்லை. "புலிகள் இயக்கத்தினர்தான் இவர்களை இங்கே அனுப்பிவைத்திருக்கிறார்கள்" என்று மற்றொரு அதிகாரி விளக்கம் கொடுத்தார்.

திபீந்தர் சிங்குக்கு கோபம் வந்துவிட்டது. உடனே புலிகள் இயக்க தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டார்.

"என்ன இது? எதற்காக இப்படியெல்லாம் பண்ணுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"என்ன, ஆர்ப்பாட்டமா? அதுபற்றி நமக்கு எதுவுமே தெரியாதே!" என்று சொல்லிவிட்டனர் புலிகள் இயக்கத்தினர்.

ஆனாலும் திபீந்தர் சிங் தொடர்பு கொண்ட கொஞ்ச நேரத்தின்பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றுவிட்டனர்.

புலிகள் இயக்க தலைமையகத்தில் இருந்து, யாழ் கோட்டை முகாமுக்கு அருகில் இருந்த புலிகள் இயக்க முகாமுக்கு தகவல் சொல்லப்பட்டது. முகாமில் இருந்தவர்கள் சென்று சொன்னதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இடத்தைக் காலிபண்ணிவிட்டுப் போய் விட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான பத்திரிகைகளில் 'ஈழமுரசு', 'முரசொலி' இரண்டும் புலிகள் இயக்கத்தினரின் கருத்துக்களையே பிரதிபலித்தன.

"மக்கள் ஆர்ப்பாட்டம். இந்திய இராணுவத்தினரை வழிமறித்தனர்" என்று அந்த இரண்டு பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்தில் செய்திகள் வெளியாகின.

இந்தியப் படைக்கு எதிரான செய்திகள் மக்கள் மத்தியில் பரவட்டும். இந்தியப்படை நமக்காகத்தான் வந்திருக்கிறது என்ற நம்பிக்கை வளரக்கூடாது என்பதே புலிகள் இயக்கத்தினரின் விருப்பமாக இருந்தது.

### ஆயுதக் கப்பல்

'இனிமேல் யுத்தமே இல்லை' என்றுதான் மக்களும் நினைத்தனர். பிரச்சனைகள் யாவும் தீர்ந்துவிடும் என்பதுதான் பரவலான நம்பிக்கையாக இருந்தது.

ஆனால் பிரபாகரன் ஓய்ந்திருக்கவில்லை. மீண்டும் யுத்தம் தொடங்கத்தான் போகிறது என்பதில் உறுதியாக இருந்தார்.

1987 செப்டம்பரில் பர்மாவின் தலைநகரான ரங்கூனிலிருந்து 'இல்யானா' என்னும் கப்பல் புறப்பட்டது.

கப்பலில் புலிகள் இயக்கத்தினருக்கான ஆயுதங்கள் இருந்தன.

நடுக்கடலில் தரித்துநின்ற கப்பலில் இருந்து படகுகள் மூலமாக ஆயுதங்களை கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர் புலிகள் இயக்கத்தினர்.

கிட்டத்தட்ட 700 துப்பாக்கிகளும், தோட்டாக்களும், வெடி மருந்துகளும் இருந்தன.

எல்லாவற்றையும் பொலித்தீன் பைகளில் போட்டு பத்திரமான இடங்களில் புதைத்து வைத்துவிட்டனர்.

இந்தியாவை முழுமையாக நம்ப முடியாது. நாம்தான் சொந்தக்காலில் நின்று தொடர்ந்து போரிட வேண்டியிருக்கும் என்று பிரபாகரன் முடிவு செய்துவிட்டதன் அடையாளம்தான் அது.

இந்தியப் படை வந்துவிட்டதால் பிரச்சனை தீர்ந்துவிட்டது என்றுதானே மக்கள் நினைக்கிறார்கள்.

பிரச்சனைகள் தீரவில்லை என்று வெளிப்படுத்தியாக வேண்டும் என்று தீர்மானித்தனர் புலிகள் இயக்கத்தினர்.

### செப்டம்பர் 15

இந்தியப் படையினருக்கும், இந்தியாவுக்கும் எதிரான முதலாவது காயை நகர்த்தினார் பிரபாகரன்.

செப்டம்பர் 15ல் புலிகள் இயக்க யாழ் மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திலீபன் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப்போவதாக அறிவிக்கப்பட்டது.

முதலில் அந்த அறிவிப்பை இந்திய அதிகாரிகள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. மிரட்டல் என்றுதான் நினைத்தனர்.

ஆனால் புலிகள் இயக்கத்தினர் திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வந்துவிட்டனர் என்பதுதான் உண்மை.

உண்ணாவிரதமும், அதனையொட்டிய நிகழ்வுகளும் புலிகள் இயக்கத்தினர் ஆயுதப்போராட்டத்தில் மட்டுமல்ல, அறவழிப்போராட்டத்திலும் சாதுரியமாக காய் நகர்த்தக்கூடியவர்கள் என்பதை நிரூபித்தன.

அவைபற்றி அடுத்தவாரம் பார்க்கலாம். (தொடர்ந்து வரும்)

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



படிப்பகம்

www.padippakam.com

# பரிதவித்துவாழும் யாழ்ப்பாண மக்கள்! படையினர் போடும் தப்புக்கணக்கு!

## அலசுவது- இராஜதந்திரி

மனித உரிமைகள் செயலணிக் குழுவின் கிளை அலுவலகமொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்குத் தீர்மானிக்குமளவுக்கு அங்கே அடிப்படை மனித உரிமைமீறல் நடவடிக்கைகள் பெருமளவில் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

பெரும் பரபரப்பையும், திகைப்பையும் ஏற்படுத்தியுள்ள கிருஷாந்தி, ராஜினி ஆகியோரது ஈவிரக்கமற்ற கொலைகள் மட்டுமல்ல; மேலும் பல கொலைச் சம்பவங்கள், பாலியல் பலாத்காரங்கள், ஆட்கடத்தல்கள் என்பவை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளதையே அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தில் பணியாற்றும் ஒரு சாதாரண அடிமட்ட சிப்பாயின் வயது வட்டம் சுமார் 25 வயதுக்குள்ளாகவே இருக்கும். அத்தகைய ஒரு சிப்பாய்க்கு சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்த யாழ்ப்பாணத்தின் பொலிவு, அதன் மேன்மை, அமைதி, என்பவை பற்றி எதனையுமே புரிந்து கொள்ள முடியாது.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக சின்னாபின்னமாகி உருக்குலைந்து போயிருக்கும் இன்றைய யாழ்ப்பாணத்தைக் கண்டு இதுதான் உண்மையான யாழ்ப்பாணம்; இன்று அங்கே பரிதவித்து வாழும் யாழ்ப்பாணத்தவரது வாழ்க்கைதான் அவர்களது நிஜமான வாழ்க்கை என்று யாழ்ப்பாணத்தில் உள்ள இளஞ்சிப்பாய்கள் தப்புக் கணக்குப் போடமுடியும்.

இதன் காரணமாகவே அங்குள்ள அப்பாவி மக்களைப் பதம்பார்த்து, அவர்களைத் தமது வக்கிர இச்சைகளுக்கு சில சிப்பாய்கள் உள்ளாக்கியிருப்பதை அறியமுடிகின்றது.

இராணுவத்தினர் விடுகின்ற தவறுகளை விசாரிப்பதற்கு இராணுவ நீதிமன்றங்கள் இயங்குவதுண்டு. அத்தகைய இராணுவ நீதிமன்றங்களை Court Martial என்றே அழைப்பதுண்டு.

இராணுவத்தில் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் பேணும் விதத்தில், தவறிழைக்கும் படையினர் மீது கடுமையான தண்டனைகளை விதிப்பதே இராணுவ நீதிமன்றங்களின் கடமையாகும்.

இலங்கை இராணுவத்தைப் பொறுத்தவரை அதன் வளர்ச்சிக்கேற்ப, பக்குவமோ, முதிர்ச்சியோ காணப்படவில்லை.

ஆயுத தளபாடங்களும், ஆளணிகளும் பெருமளவில் படையினரிடையே இருக்கின்றனவே தவிர, ஒழுக்கம், கட்டுப்பாடு மற்றும் செயற்திறன் என்பவை அவர்களிடம் அரிதாகவே காணப்படுகின்றன.

இதன் காரணமாகவே இலங்கை இராணுவம் கடந்த 13 வருடகால யுத்தத்தில் எவ்வகையிலும் ஒரு உறுதியான வெற்றியைப் பெற முடியாதிருக்கின்றது.

முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் தமது பதவிக்காலத்தில் படையினருக்கென பாவனைக்குதவாத உலர் உணவுப் பொருட்கள் பலவற்றை பல கோடி ரூபா பணத்தில் இறக்குமதி செய்து மோசடியில் ஈடுபட்டிருந்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தளபதியாகப் பதவி வகித்தபோதே தென்னிலங்கையில் ஏராளமானோர் ஜே.வி.பி. உறுப்பினர்கள் என்ற ரீதியில் வகை, தொகையின்றிக் கொல்லப்பட்டனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயிருந்தனர்.



எனவே இலங்கையின் இராணுவமென்பது தென்னிலங்கை மக்களுக்குக் கூட சிம்மசொப்பனமாகவே இருந்துள்ளது.

இந்நிலையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம், கட்டுப்பாடற்ற பிரதேசம் என்ற வார்த்தைப் பிரயோகங்களால் துண்டாடப்பட்டுள்ள வட பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்ற பகுதிக்குள் நடப்பவை புல்லரிக்கச் செய்பவையாகவே இருக்கின்றன.

இராணுவத்தினர் ஈடுபட்டுள்ள குற்றச்செயல்கள் பலவற்றுக்கும் முப்படைகளினதும் பிரதம தளபதி என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதிலளிக்கவேண்டியவராகின்றார்.

கடந்தவாரம் ஜனாதிபதி சந்திரிகா லேக்ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்படும் 'ஒப்ஸேர்வர்' 'சிலு'மின என்ற ஆங்கில, சிங்கள வாரப்பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டிகளில் எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேச்சுக்களை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா இப்பேட்டியை வழங்கியுள்ள முறை, மற்றும் அரசியல் பேச்சுக்குறித்து அவர் விதித்துள்ள நிபந்தனைகள் என்பவை தமது தரப்புத் தவறுகளை பூசிமெழுகுவதாகவே இருக்கின்றன.

எனவே ஜனாதிபதி, பத்திரிகைகளில் குறிப்பிட்ட எல்.ரி.ரி.ஈ. யினருடனான பேச்சு என்பது, 'கறிக்குதவாத ஏட்டுச் சுரக்கா'யாகவே உள்ளது.

ஒரு நிரந்தரத் தீர்வுக்காக ஏங்கி நிற்கும் மக்களைப் புண்படுத்தியவாறும், அவர்கள்மீது இராணுவ அழுத்தங்களைப் பிரயோகித்த நிலையிலும் தீர்க்கமான அரசியல் தீர்வு முயற்சியில் ஈடுபடமுடியாது.

மக்கள் மீதான நெருக்குதல்கள், அழுத்தங்கள் அகற்றப்பட்டு தெளிவாக அவர்கள் சிந்திக்கக்கூடிய நிலையிலேயே தீர்வு முயற்சிகளைப் பற்றிப் பேச முடியும்.

எல்.ரி.ரி.ஈ.யினரது பலம்குறைந்து விட்டது; அவர்களது முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டதென பாதுகாப்புப் படை வட்டாரங்களும், ஆட்சியாளர்களும் கூறிவருகின்றனர். இதன் மூலமாக, எல்.ரி.ரி.ஈ.யினரின் இராணுவ உறுதிப்பாடு தொடர்பாக தப்புக்கணக்குப் போடுகின்றனர்.

ஆனால் எதிர்வரும் 26ந் திகதி எல்.ரி.ரி.ஈ.தலைவர் வே. பிரபாகரனின் 42வது பிறந்ததினத்தையிட்டு முழு நாடுமே 'ஜரூர்' நிலையில் இருக்கின்றது. எவ்விடத்திலும், எந்நேரத்திலும் எல்.ரி.ரி.ஈ. தாக்குதல்களை நடத்தலாமென ஆயுதப்படையினருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஜாக்கிரதை நடவடிக்கை- எல்.ரி.ரி.ஈ.அமைப்பு அரசாங்கத்துக்கும் படையினருக்கும் பலத்த அச்சுறுத்தலாக இருப்பதையே புலப்படுத்துகின்றது.

எனவே, எதிர்காலத்தில் எல்.ரி.ரி.ஈ.அமைப்புடன் பேசுவதற்கு எத்தனிக்கலாம்; ஆனால் அத்தகைய எத்தனிப்புக்களுக்கு முன்னர் சுமுகமானதொரு சூழலைக் கட்டியெழுப்ப வேண்டியதே ஜனாதிபதியின் பொறுப்பாக இருக்கின்றது.

எல்.ரி.ரி.ஈ.யினரது பலம் என்பது அவர்களது இராணுவ ரீதியான உறுதிப்பாடே என்பதனை அனைவரும் நன்கறிவர்.

இப் பலத்தைக் குறைத்துக் கொண்டு அவர்கள் எவ்விதத்திலும் பேச்சுக்களில் ஈடுபட முன்வரமாட்டார்கள்.

எனவே ஆயுதங்களைக் கைவிட்டு எல்.ரி.ரி.ஈ.யினர் பேச்சுக்களுக்கு வரவேண்டும் என ஜனாதிபதி வேண்டுவது, மறு புறத்தே பேச்சுக்களுக்கு வரவேண்டாம் என அவர்களைப் பார்த்துக் கூறுவதுபோலவே இருக்கின்றதென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையிலிருந்து அண்மையில் வட அயர்லாந்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்று சென்றிருந்தது. அக்குழுவில் பிரதி தபால், தொலை தொடர்புகள் அமைச்சர் ஹிஸ்புல்லாவும் இடம்பெற்றிருந்தார்.

வட அயர்லாந்துப் பிரச்சினை தொடர்பாக இலங்கைக்குழுவினர் பல்வேறு விடயங்களை ஆராய்ந்தனர்.

அப்போது 'ஆயுதங்களின் மௌனம்' என்பது பற்றி வட அயர்லாந்துப் பிரச்சினை தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆயுதங்களைக் கை விடாது மறுபுத்தே அவற்றுக்கு வேலை கொடுக்காது அரசியல் பேச்சுக்களை நடத்துவதையே இந்த 'ஆயுதங்களின் மௌனம்' என்ற சொற்பதம் தெளிவு படுத்துகின்றது.

வட அயர்லாந்துப் பிரச்சினை இன்று உலகறியும் வகையில் இருப்பதற்கும்; வட அயர்லாந்துக் கத்தோலிக்க மக்களின் உரிமைப் போராட்டம் சர்வதேச சமூகத்தின் கவனத்தைப் பெறுவதற்கும் ஐரிஷ் கெரில்லாக்கள் நடத்திவரும் போராட்டங்களே முக்கிய காரணமாக இருக்கின்றன.

ஐரிஷ் கெரில்லாக்களின் பலம் குறைந்து விட்டால் தனது மனம் போன போக்கில் வட அயர்லாந்தில் உள்ள கிறிஸ்தவர்களின் விருப்பு வெறுப்புக்களையே முதன்மைப்படுத்தும் ஒரு தீர்வையே பிரிட்டிஷ் அரசு கொண்டு வரமுனையலாம்.

எனவே ஐரிஷ் கெரில்லாக்களின் பலம்தான் வட அயர்லாந்துப் பிரச்சினைக்கு ஒரு விரிவான தீர்வைக் காண்பதற்கு பிரிட்டிஷ் அரசை நிர்ப்பந்தித்துள்ளது.

அந்த நிர்ப்பந்தத்தின் ஓரங்கமாகவே 'ஆயுதங்களின் மௌனம்' என்ற சொற்பிரயோகமும் விளங்குகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை ஆரோக்கியமானதொரு போர்நிறுத்தம் ஒருபோதும் ஏற்படவில்லை. சந்திரிகா அரசு கொண்டு வந்த மோதல் தவிர்ப்பு நிலையும் ஒரு சில மாதங்களில் நிலைகுலைந்தது.

ஜனாதிபதி இறுதியாக பேச்சுக்களுக்குத் தயாராக இருப்பதாக பத்திரிகைகள் மூலமாக தெரிவித்த கருத்துக்களை எல்.ரி.ரி.ஈ.யினர் நிராகரித்துள்ளனர்.

இந்த நிராகரிப்புக்கு பேச்சின் மீது அவர்களுக்கு ஆர்வமில்லை என்று கூறுவதைவிட, பேச்சுக்கள் குறித்து அரசு போடும் நிபந்தனைகளே முக்கிய காரணமாக இருக்கலாம்.

மறுபுறத்தே பேச்சுக்களுக்கு வர எல்.ரி.ரி.ஈ.யினர் நிபந்தனைகள் எதனையும் போட்டால் அவை குறித்து திருப்தியடையாத பட்சத்தில் அரசாங்கமும் பேச்சுக்களை நிராகரிக்க முடியும்.

இந்நிலையில் இருதரப்பினரும் நிபந்தனைகளற்ற பேச்சுக்களுக்காக முன்வரவேண்டும். அதுவே ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு அடித்தளமிடமுடியும்.

# முகாம்கள் எப்போ திறக்கும்?

'பட்ஜெட்' விவாதங்களில் அனல் பறந்து கொண்டிருக்கின்றது.

எதிர்க்கட்சியும், எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள தமிழ் கட்சிகளும் 'பட்ஜெட்'டை தும்புபறக்க விமர்சித்துக் கொண்டிருக்கின்றன.

பாராளுமன்ற விவாதங்களை தவறவிடாமல் பத்திரிகைகள் வாயிலாக படித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் படித்துப் பார்க்கும் போது ஒரு உண்மை பளிச்சென்று தெரியும்.

ஆளும் கட்சியைத் தவிர வேறு எவருமே பட்ஜெட்டை வரவேற்றுப் பேசவில்லை.

பட்ஜெட் மீதான வாக்கெடுப்புக்கள் நடைபெறும்போது காட்சி மாறுகிறது.

பட்ஜெட்டை தும்பு பறக்க விமர்சித்த தமிழ் கட்சிகள் ஆதரவாக வாக்களிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசசிங்கம் பட்ஜெட்டை கடுமையாகச் சாடினார். "இது ஒரு கண்துடைப்பு பட்ஜெட்" என்று ஆவேசமாக பேசியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது.

பட்ஜெட்டின் இரண்டாம் மதிப்பின் மீதான பிரேரணையை ஆதரித்து அதே துரைராசசிங்கம் வாக்களித்தும் இருக்கிறார்.

பட்ஜெட் ஒரு கண்துடைப்பு என்றால் அவர் ஏன் ஆதரவாகக் கை தூக்கினார்?

ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பட்ஜெட்டை புள்ளிவிபரங்களோடு சாடுவதில் முன்னணி வகிக்கவில்லை. ஆனால் அரசாங்கத்தை ஒரு பிடி பிடித்தார்கள்.

இது என்ன நாடா, அல்லது சுடுகாடா என்று கேட்காத குறைதான். அதே பாராளுமன்ற உறுப்பினர்கள் பட்ஜெட்டை ஆதரித்து வாக்களித்துள்ளார்கள்.

அதேபோல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா அகதிகள் விடயம் தொடர்பாகவும் பேசியிருக்கிறார்கள்.

அப்பேச்சுக்களும் ஒரு அரசியல் விளையாட்டாகவே அரசாங்கத்தால் நோக்கப் படுகிறது.



அரசாங்கம் அவ்வாறு நினைப்பதற்கு தமிழ் கட்சிகளின் அணுகுமுறைகளும் ஒரு காரணம்தான்.

பாராளுமன்றத்தில் வவுனியா பிரச்சினை தொடர்பாக ஒரு விவாதம் நடத்தக் கோரியது தமிழர் விடுதலைக் கூட்டணி.

பாராளுமன்றத்தில் உள்ள ஏனைய தமிழ்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அது தொடர்பாக கூட்டணி மூச்சு விடவில்லை.

தாமே தனியாக நின்று விவாதம் கோரினால்தான் அரசியல் ரீதியில் லாபம் என்பதுதான் கூட்டணியின் கணக்கு.

அதனால் விவாதம் நடத்தப் படுவது உறுதியாக முன்னரே பத்திரிகைகளுக்கு செய்தி கொடுக்கப்பட்டது. "வவுனியா விவகாரம் தொடர்பாக தனியான விவாதம். பாராளுமன்றக் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கூட்டணி கோரிக்கை" என்று ஒருபத்திரிகையில் செய்தியும் வெளியானது.

வேடிக்கை என்னவென்றால் குறிப்பிட்ட தினத்தில் பாராளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டமே நடக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆகியோரை மட்டும் சந்தித்து தமக்கு ஒரு விவாதம் நடத்த அனுமதி கோரினார்கள் கூட்டணியினர்.

அவர்களும் சம்மதம் தெரிவித்தனர். ஆனால் குறிப்பிட்ட தினத்தில் அதாவது 15.11.96ல் விவாதம் நடக்கவில்லை.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப்புக்கு நேரம் இல்லாமையால் விவாதம் நடக்கவில்லை என்று கூறப்பட்டது.

ஆனால், வவுனியா அகதிகள் விடயத்தில் பதில் சொல்ல வேண்டியவர் பிரதி பாதுகாப்பு அமைச்சரே தவிர, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரல்ல.

பாதுகாப்பு தொடர்பான விதிகளின் காரணமாகத்தான் வவுனியா வரும் அகதிகள் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள். புனர்வாழ்வு அமைச்சர் அதில் தலையிட முடியாது. எனவே புனர்வாழ்வு அமைச்சரை மட்டுமே வைத்து ஒரு விவாதம் நடத்துவதால் பயனில்லை. பிரச்சனை தீரப்போவதில்லை.

ஆனால் கூட்டணியினருக்குத் தேவை என்ன? ஒரு விவாதம் நடத்தினோம். காரசாரமாக உரையாற்றினோம் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாவது மட்டும்தான்.

அதனால் அமைச்சர் அஷ்ரப் முன்னிலையில் விவாதம் நடத்த ஒப்புக்கொண்டு விட்டனர்.

தமிழ் கட்சிகள் மத்தியில், பிரச்சனைகளைத் தீர்ப்பதில் உள்ள ஈடுபாட்டைவிட, குறிப்பிட்ட பிரச்சனைகளை 'நாம்தான் முதலில் பேசினோம்' என்று பத்திரிகைகள் மூலமாக பெயரெடுப்பதில்தான் பலத்த ஆர்வம் காணப்படுகிறது.

அரசாங்கமும் அதனை நன்கு புரிந்து வைத்து எப்படி வேண்டுமானாலும் 'கத்துவதற்கு' மட்டும் வாய்ப்புக் கொடுத்துவிட்டு, தனது காதுகளை மூடிக்கொள்கிறது.

வன்னியில் இருந்துவரும் மக்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று அரசு கருதுமானால், வவுனியாவுக்கு வருமாறு அழைத்திருக்க வேண்டியதில்லை.

வன்னிப் பகுதியில் அவர்கள் இருக்கக் கூடியதாக அங்கு போதிய நிவாரணப் பொருட்களை அனுப்பிவைத்திருக்கலாம்.

அரசாங்க அதிபர்கள் மூலமாக இடம் பெயர்ந்த மக்களுக்கான முகாம்களை வன்னியில் உருவாக்கியிருக்கலாம்.

அரசாங்கம் அதற்கு தயாராக இல்லை.

புலிகளை மக்களிடம் இருந்து பிரித்தாக வேண்டும்.

புலிகளைவிட்டு மக்கள் வெளியேறி அரச கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வருவதாகக் காட்டியாகவும் வேண்டும்.

இந்த இரண்டு தேவைகளுக்கும் பயன்பட்ட பின்னர் மக்கள் முகாம்களில் அடைக்கப் படுகிறார்கள்.

தேவைகளும், நோக்கங்களும் யுத்தம் சார்ந்தவையாக இருப்பதால், யுத்தத்தின் வெற்றிக்கு பாதகம் என்று கருதப்படும் விடயங்களையும், விதி முறைகளையும் தளர்த்துவதற்கு அரசாங்கம் தயங்கவே செய்யும்.

எனவே- வவுனியா முகாம்களின் தகவுகள் திறக்கப்பட்டு, அம் முகாம்களில் உள்ளோர் வெளியே சுதந்திரமாக நடமாடக் கூடிய நிலை தோன்றுவது கேள்விக்குறிதான்.



படிப்பகம்

www.padippakam.com

## கடந்தவாரம்

பூலானின் கிராமத்திற்குள் கொள்ளைக் கோஷ்டி புகுந்து பூலானின் பெரியப்பா வீட்டில் கொள்ளையடிக்கிறது.
பூலான்தான் அவர்களை ஏவிவிட்டதாக பெரியப்பா வீட்டார் புகார் செய்கிறார்கள்.
பூலானின் அப்பாவும், அம்மாவும் போலிசாரால் கைது செய்யப்பட பூலான் தன் அக்காவீட்டிலிருந்து கிராமத்துக்கு வருகிறாள்.
கிராம மக்களால் தாக்கப்படுகிறாள்.
மீண்டும் போலிசாரால் பிடிக்கப்படுகிறாள்.

இனி..

# தருவது 19 ரசிகன்

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

பொலிஸ் நிலையம் எனக்குப் பழக்கப்பட்ட இடம்தான். முன்னர் அங்கே போனபோது எப்படி இருந்ததோ அப்படித்தான் இப்போதும் இருந்தது.

அந்த இன்ஸ்பெக்டர் என்னைக் கண்டதும் நாறிய மீனைப் பூனை பார்ப்பதுபோல பார்த்தான். அவன் எதுவும் பேசாமல் இருந்ததுதான் ஆச்சரியமாக இருந்தது.

அந்த இன்ஸ்பெக்டர் மேசைக்கருகே நின்றுகொண்டிருக்க, அவன் வழக்கமாக அமர்ந்திருக்கும் ஆசனத்தில் வேறொருவர் அமர்ந்திருந்தார்.

இன்ஸ்பெக்டரைவிட பதவி கூடியவராக இருக்கவேண்டும். அவர் அமர்ந்திருந்த தோரணையில் இருந்து புரிந்துகொண்டேன். இன்ஸ்பெக்டர் பணிவாக நின்று கொண்டிருந்தான்.


பூலான்

அமர்ந்திருந்தவருக்கு பெரிய மீசை இருந்தது. தலையில் மட்டும் முன் பக்கத்தில் முடி உதிர்ந்திருந்தது. கன்னத்தில் நீண்ட கிராப் வைத்திருந்தார். கன்னக் கிராப்பில் நரை தெரிந்தது.

மேலதிகாரி இருப்பதால் இந்த இன்ஸ்பெக்டர் வாலாட்ட முடியாது என்று நினைத்தபோது ஆறுதலாக இருந்தது.

நான் இந்த பொலிஸ் நிலையத்தில் இருக்கமாட்டேன். வேறு எங்காவது என்னைக் கொண்டுசென்று வைத்திருங்கள் என்று கூறவேண்டும். 'ஏன்?' என்று கேட்பார். இங்கே எனக்கு நடந்த கொடுமைகளை எல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லிவிடவேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

மேலதிகாரியைப் பார்த்தால் நல்லவராகத்தான் தெரிகிறார். கண்களை இடுக்கிக்கொண்டு என்னை கூர்ந்து நோக்கினார்.

"இவள்தான் சேர்! இவள்தான் பூலான்!" என்றான் இன்ஸ்பெக்டர்.

"நீதானா அது?" என்று கேட்டார் அதிகாரி. மீசையை ஆசை ஆசையாக வளர்த்திருப்பார் போலும். தன் ஆட்காட்டி விரலால் மீசையை வருடிவிட்டபடி இருந்தார். வருடிக்கொண்டுதான் பேசினார்.

நான் மௌனமாக தலைகுனிந்தபடி நின்றேன். இந்த மேலதிகாரி நல்லவர் போலத் தெரிகிறார். அவரைப் பகைத்துக்கொள்ளாமல் இந்த இன்ஸ்பெக்டரைப் பற்றிச் சொல்லிவிடவேண்டும்.

கிராமத்தில் நடந்த கொள்ளைக்கும் எனக்கும் ஒருதொடர்பும் கிடையாது என்பதையும் சொல்லிப்பார்க்கலாம்.

வேண்டுமானால் அக்கா வீட்டுக்குப் போய் விசாரித்துப் பார்க்கட்டும். கொள்ளை நடந்தபோது நான் அங்குதான் இருந்தேன். பக்கத்து வீட்டுக்காரர்களும் என்னைக் கண்டுதான் இருப்பார்கள்.

நான் உண்மையைச் சொன்னாலும் இந்த இன்ஸ்பெக்டர் பொய்களைச் சோடித்து என்னைப் பிடித்துவைத்துவிடுவான். இன்னொரு முறை என்னை மேயத்தான் நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு ஆசைப்படுவான் என்றுதான் நினைத்து வந்தேன்.

இப்போது மேலதிகாரி இருப்பதால் நான் உண்மையைச் சொன்னால் காது கொடுத்துக் கேட்பார் என்று ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

இந்த மேலதிகாரி மட்டும் நான் சொல்லும் உண்மைகளைப் பொறுமையாகக் கேட்டுவிட்டு, இந்த இன்ஸ்பெக்டரை உடுப்பைக் கழற்றி விரட்டட்டும். என்னை துரத்தி துரத்தி கடித்த நாய்களையெல்லாம் பிடித்துவந்து தண்டிக்கட்டும். நான் பழிவாங்கும் ஆசையை விட்டுவிடுவேன்.

இந்தப் பூலான் தன் வழியில் போய்விடுவாள். தனக்குப் பிடித்தமான ஒருவனை மணந்துகொண்டு எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கி இருந்துவிடுவாள்.

அக்காவின் குழந்தையைப் பார்த்ததில் இருந்தே எனக்கும் அப்படி ஒரு குழந்தை பிறந்தால் எப்படியிருக்கும் என்ற ஏக்கம் இடைக்கிடையே வந்ததுண்டு.

அக்காவும், அத்தானும் சந்தோசமாக குடும்பம் நடத்துவதைப் பார்க்கும்போதெல்லாம், எனக்கும் அப்படி ஒரு குடும்பவாழ்க்கை கிட்டவில்லையே என்று மனத்துக்குள் ஒரு தவிப்பு எட்டிப் பார்த்ததுண்டு.

அதெல்லாம் என்னால் நினைத்தே பார்க்க முடியாத வாழ்க்கை. ஓட ஓட துரத்திக் குதறியவர்களை பழிவாங்குவதுதான் என் வாழ்க்கையாகப் போகிறது. குடும்பம், குழந்தைகள், அழகான, அன்பான கணவன் என்பதெல்லாம் நான் நினைக்கக்கூடாதவை. ஏக்கங்களையும், தவிப்பையும் ஒரு புழுவாக நினைத்து மனதுக்குள்ளேயே நசித்துப் போட்டுவிடுவேன்.

ஆனால் இப்போது இந்த மேலதிகாரியைப் பார்த்ததில் இருந்து, பட்டமரம் துளிர்ப்பதுபோல என் வாழ்க்கையும் மறுபடி தழைக்க ஒரு வழி கிடைக்குமோ என்று நினைக்கத்தான் செய்தேன்.

ஒரு சுருட்டைப் பற்றவைத்து புகையை விட்டபடி அந்த அதிகாரி என்னையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு பார்வையிலேயே குற்றம் செய்தவர்களா இல்லையா என்பதை பொலிஸ்காரர்கள் கண்டுபிடித்து விடுவார்களாம்.

"எப்படியம்மா திருடர்களைப் பொலிஸ்காரர்கள் பிடிக்கிறார்கள்?" என்று நான் சின்னவளாக இருந்தபோது கேட்டதற்கு, அம்மா அப்படித்தான் சொன்னாள்.

இந்த அதிகாரியும் என்னைப் பற்றிக் கண்டுபிடிக்கத்தான் பார்க்கிறாரோ? பார்க்கட்டும். பார்க்கட்டும். பணிவாக ஒடுங்கி நின்றுகொண்டேன்.

சுருட்டை அணைத்துவிட்டு எழுந்து வந்தார். அதென்ன அது, கையிலே குண்டாந்தடியை எதற்கு எடுத்துவருகிறார்.

சும்மா மிரட்டுவதற்காக இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன்.

"உனக்கு கொள்ளைக் கோஷ்டியில் யாரைத் தெரியும்?"

இதுதான் சந்தர்ப்பம். எல்லாவற்றையும் கொட்டிவிடவேண்டும் என்று நினைத்தேன்.

"ஐயா! எனக்கு யாரையும் தெரியாது ஐயா!" என்று ஆரம்பித்து கிராமத்தில் எனக்கு நேர்ந்த கொடுமைகளையெல்லாம் ஒரே மூச்சில் ஒப்புவித்தேன். பொலிஸ் நிலையத்தில் நடந்ததை மட்டும் சொல்லவில்லை. அடுத்ததாகச் சொல்லலாம்.

நான் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டபடியே குண்டாந்தடியை தனது உள்ளங்கையில் உருட்டிக் கொண்டிருந்தார் அதிகாரி.

"துணிச்சல் காரியாகத்தான் இருக்கிறாய். எத்தனை பேருக்கு சந்தோசம் கொடுத்தாய்?"

எனக்குப் பகீர் என்றது.

"ஐயா!"

"என்னடி ஐயா பையா? கொள்ளைக் கோஷ்டியில் எத்தனை பேருக்கு சுகம் கொடுத்தாய் என்று கேட்கிறேன்?"

என் சகல நம்பிக்கைகளும் முறிந்து விழுந்துபோயின.

சே.. இவனையா நல்லவன் என்று நினைத்தேன். இதுவரை காட்டிய பணிவையெல்லாம் உதறிப்போட்டுவிட்டு ஒரு புழுவைப் பார்ப்பதுபோல அவனைப் பார்த்தேன்.

"என்னடி பார்க்கிறாய்? முழுக்க நனைந்த பின் உனக்கு முக்காடு எதற்கடி? அங்கே மட்டும்தான் காட்டுவாயாக்கும். எங்களுக்கும் காட்டடி!"

சட்டென்று தன் குண்டாந்தடியால் என் வயிற்றுக்குக் கீழே குத்திவிட்டு, இன்ஸ்பெக்டரைப் பார்த்துச் சிரித்தான். பல்லெல்லாம் காவிக்கறை தெரிந்தது. பல்லே துலக்கமாட்டான் போலிருக்கிறது. சனியன்! அவன் குத்திய இடத்தில் வலித்தது.

இன்ஸ்பெக்டர் அந்த மீசைக்கார பன்றியிடம் கேட்டான்:

"சேர்! இவள் அப்பாவையும், அம்மாவையும்..?"

"அதுதான் இரை வந்துவிட்டதே. இனிப் பொறி எதற்கு? திறந்துவிடு. போய்த் தொலையட்டும்."

இன்ஸ்பெக்டர் சுவரில் மாட்டியிருந்த சாவிக் கொத்தை எடுத்துக்கொண்டு போனான்.

"ஏனடி உனக்கு இங்கேயே இருக்க வேண்டுமா? வீட்டுக்குப் போகவேண்டுமா?"

நான் பதில் சொல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"இங்கேயெல்லாம் தொட்டார்களா?" கேட்டுக்கொண்டே குண்டாந்தடியால் என் கழுத்துக்கீழே தொட்டுக் காட்டினான். குண்டாந்தடியின் முனையால் அழுத்தினான்.

"வலிக்கிறதா?" கேட்டுவிட்டு பெரிதாகச் சிரித்தான் மூதேவி.

"ஒருநாள், ஒரே ஒரு நாள் என்னோடு இருக்கிறாயா? சொல்லு! முழுசாக ஒரே ஒரு நாள்! அவ்வளவுதான். நீ வீட்டுக்குப் போய்விடலாம்!"

இன்ஸ்பெக்டர் வந்துவிட்டான்.

"இவளைப் பார்க்கவேண்டுமாம் சேர்! அழுது அடம்பிடிக்கிறது கிழவி"

"நானும் பார்க்கவேண்டும் என்கிறேன். மாட்டேன் என்கிறாளே!" காவிப்பல்லுகள் தெரிய இளித்தான். இன்ஸ்பெக்டரும் சத்தம் இல்லாமல் சிரித்தான்.

அந்த மீசைக்கார பன்றி சட்டென்று குனிந்து குண்டாந்தடியால்... என்னால் அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை.

சட்டென்று அப்பாவும், அம்மாவும் வெளியே இருக்கிறார்கள் என்ற நினைப்பு வந்தது.

நான் கூச்சல் போட்டு சண்டையிட்டால் அவர்களுக்குக் கேட்டுவிடும்.

அம்மா தாங்கமாட்டாள். நெஞ்சு வெடித்தே செத்துப் போய்விடுவாள். அதனால் என் ஆத்திரத்தையெல்லாம் உள்ளே அடக்கிக் கொண்டேன்.

"திம்மென்றுதான் இருக்கிறாள். கிராமத்துக்கட்டை. கொள்ளைக்காரர்களையே மயக்கிப் போட்ட சிறுக்கிதானே! என்னடி செய்தாய்? எங்களையும் மயக்கிப் போடு என்றால் கேட்கமாட்டேன் என்கிறாளே! இன்ஸ்பெக்டர்! அவர்களை வரச்சொல்லு போ!"

அம்மா அழுதுகொண்டே வந்தாள். அப்பாவின் கண்களும் கலங்கித்தான் இருந்தன. துண்டால் வாயைப் பொத்திக்கொண்டார்.

"ஏய் கிழவி! ஏன் மூக்கைச் சிந்துகிறாய்? ஒழுங்காக பிள்ளை வளர்க்கத் தெரியவில்லை. இங்கே வந்து மூக்கால் ஒழுகினால் என்ன அர்த்தம்? இல்லை, என்ன அர்த்தம் என்றுதான் கேட்கிறேன்?"

"அய்யோ.. பெரிய ஐயா! என் மகள் ஒரு பாவமும் அறியாதவள் ஐயா. ஒரு பாவமும் அறியாதவள் ஐயா. அ..அய்யோ ஒரு பாவமும் அறி.. அறி... அறியாதவள் ஐயா!"

அம்மாவுக்கு மூச்சு முட்டியது. விம்மி



விம்மி அழுதாள்.

"வரே வா! உன் மகளுக்கு பாவம் செய்யத் தெரியாது. சாலம் போடத் தெரியும். முந்தி விரித்துப் பந்தி போடத்தான் தெரியும்! போடி கிழவி! நீயும் அந்தக் காலத்தில் யார் யாருக்கு பந்தி வைத்தாயோ யாருக்குத் தெரியும்? கிழவி இந்த வயதிலும் எப்படியிருக்குது பார்."

அய்யோ அம்மா! அதற்கு மேலும் என்னால் பொறுக்க முடியவில்லை. என் உச்சந்தலைவரை சூடேறியதுபோல இருந்தது.

"யாரையடா சொன்னாய் வேசி மகனே! நீ மட்டும் ஒழுங்காகப் பிறந்தவனாடா நாயே! கட்டாக்காலி நாயே! கழிசடை நாயே! யாரையடா.. யாரையடா கேட்டாய்.. டேய்... உன்னைப் பெற்றாளே ஒருத்தி அவளிடம் போய் கே.. அடியடா அடி.. நீ.."

என் முதுகில் குண்டாந்தடியால் ஓங்கி ஓங்கி அடித்தான்.

"அய்யோ.. அடிக்காதீர்கள் ஐயா.. அய்யோ என் பிள்ளையை கொன்று போடுகிறார்களே.. அய்யோ.. அய்யோ.. ஐயா.. ஐயா.. அடிக்காதீங்க ஐயா.. அய்யோ அய்யோ..." அம்மா கத்திக் குழற,

"அ..அம்மா நீ வீட்டுக்குப் போ அப்பா. அப்பா அம்மாவை...."

சொல்லி முடிக்கவிடாமல் காலால் முதுகில் உதைத்தான்.. குப்புறவிழுந்தேன். முதுகில் ஏறி நின்று அழுத்தினான். மூச்சுத் திணறியது.

"அ..அ..அய்யோ.." என்று வீரிட்ட சத்தத்தின் பின்னர் அம்மாவின் குரல் சட்டென்று அடங்கியது.

அம்மாவுக்கு என்ன நடந்துவிட்டது? எனக்கு மயக்கம் வரும்போல இருந்தது.

அய்யோ அம்மா.. துர்க்காதேவியே எனக்கு பலத்தைத் தா!

'பூலான் எழடி!' எனக்குள் உள்ளுணர்வு உந்தித் தள்ளியது. என் உடல் முழுக்கப் புதுப்பலம் வருவதுபோல இருந்தது.

(தொடர்ந்து வரும்)

# சொக்கவைக்கும் சொகுசான மாளிகைகள்

## உயிர்த்தோழிகளின் உல்லாசபுரிகள்

கோடி கோடியாகப் பணம் குவிந்து கிடந்தது. உயிர்த் தோழிகள் இருவருக்கும் அத்தனை பணத்தையும் வைத்துக்கொண்டு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ஊரெங்கும் சொத்துக்களை வாங்கினார்கள். எங்காவது அட்டகாசமான ஆடம்பர பங்களா கண்ணில் பட்டுவிட்டால் போதும். அதை வாங்கும் வரை தோழிகளுக்கு தூக்கமே வராது.

அதிகாரத்தைப் பயன்படுத்தி மலிவு விலையில் வளைத்துப் போட்டுவிடுவார்கள்.

வாங்கிக் குவித்த ஆடம்பர பங்களாக்களில் உள்ள வசதிகள் போதாது என்று, தாமே சொந்தமாகவும் பல பங்களாக்களை அரண்மனைகள்போல கட்டுவித்தார்கள்.

வெளிநாட்டு வங்கிகளில் பணம், உள்நாட்டு சொத்துக்குவியல். ஒரு கோடி ரூபாய் என்பது அவர்களுக்கு ஒரு ரூபா மாதிரித்தான். கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய்க்கு சொத்துக்கள் மட்டுமே சேர்த்துவிட்டார்கள்.

யார் என்று தெரிகிறதா? ஜெயலலிதாவும், அவரது உயிர்த்தோழி சசிகலாவும்தான் அந்த கோடீஸ்வரப் பெண்கள்.

சசிகலா இப்போது தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் இருக்கிறார். அவர் கொடுத்த தகவல்களின்படி சசிகலா பெயரில் உள்ள பல ஆடம்பர பங்களாக்களும், சசிகலாவின் பினாமிகளது பெயர்களில் உள்ள பங்களாக்களும் கண்டுபிடிக்கப்பட்டு சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தப் பங்களாக்களில் உள்ள வசதிகளை அறிந்தால் வாயடைத்துப் போவீர்கள்!

எல்லாவற்றையும் சொன்னால் இடம் போதாது. தொடராகத்தான் வெளியிட வேண்டி இருக்கும். உதாரணத்திற்கு மட்டும் சில தகவல்கள்.

சொத்துக்களின் பெறுமதி விபரங்கள் நம்நாட்டு பணமதிப்பின்படியே தரப்படுகின்றன.

சென்னைக்கருகில் மகாபலிபுரம் ஒரு அமைதியான, அழகான பகுதி. ஓய்வெடுக்க அருமையான இடம். அங்கு பளிங்குக் கற்களால் 22 கோடி ரூபாய் பெறுமதியில் ஒரு மாளிகை இருக்கிறது. சசிகலா பெயரில் இந்த மாளிகை இருக்கிறது.

மாளிகையின் முதல் மாடியில் இரண்டு பிரமாண்டமான அறைகள் எதிரெதிரே கட்டப்பட்டு உள்ளன. உள்ளே சொகுசான கட்டில்கள். நான்கு புறமும் கட்டிலில் நடப்பதைக் காட்டும் கண்ணாடிகள்.

இரண்டு பிரமாண்டமான அறைகளிலும் இரட்டைக் கட்டில்கள் போடப்பட்டுள்ளன. கட்டில் ஒன்றின் பெறுமதி மட்டுமே பத்து இலட்சத்திற்கும் மேல் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்த மாளிகையின் அடித்தளத்தில் 17 படுக்கை அறைகள் உள்ளன. 5 குளியலறைகள் உள்ளன. மேலே செல்ல இரண்டு படிக்கட்டுகள் உள்ளன. அதில் ஒரு படிக்கட்டு நேரடியாக ஜெயலலிதா-சசிகலா அறைகளுக்குச் செல்கிறது.

மாளிகையில் சுரங்க அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மின்சாரம் இல்லாத நேரங்களில் பயன்படுத்த 40 இலட்சம் ரூபாவில் ஜெனரேட்டர் வாங்கப்பட்டுள்ளது. இங்கு மாடியில் இரண்டு புறாக்கூண்டுகள் உள்ளன. இவற்றைக் கட்டி முடிக்க மட்டும் 2 இலட்சம் ரூபா செலவிடப்பட்டதாம்.

இம் மாளிகையில் 40 இலட்சம் ரூபா செலவில் நீச்சல் குளம் ஒன்றும் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. நீச்சல் குளம் கட்டும் வேலை தொடங்கியதும் பதவியும் போய்விட்டது. அதனால் பணிகள் பாதியில் நிற்கின்றன.

இந்த மாளிகையின் இரகசிய சுரங்கங்களில் சோதனை நடத்தியவர்களுக்கு பலத்த அதிர்ச்சி. வைரக் குவியல் ஒன்றையே கண்டுபிடித்திருக்கிறார்கள். அவற்றின் பெறுமதி மட்டும் பல கோடி ரூபாய்கள் இருக்குமாம்.



இந்த விபரங்களுக்கே தலை சுற்றுகிறதா? பொறுமை! பொறுமை!

அக்கரை என்னும் கிராமத்தில் இருக்கிறது இன்னொரு பங்களா. இந்தப் பங்களாவில் நீச்சல் குளமும் இருக்கிறது. இந்த குளு குளு பங்களாவிலும் அருகருகே இரண்டு பிரமாண்டமான படுக்கையறைகள் கட்டப்பட்டுள்ளன. இரண்டு அறைகளின் நடுவே சந்தனமரக் கதவு இருக்கிறது. இந்த அறைகளோடு இணைந்து ஒரு பெரிய குளியலறை இருக்கிறது. அதற்குள் இருக்கும் குளியல் தொட்டியில் ஒரு விசேஷமும் உண்டு.

ஒரே நேரத்தில் இரண்டுபேர் எதிரெதிரே வசதியாக அமர்ந்திருந்து நீராட முடியும். நீரில் ஆடவும் முடியும். ஜெயலலிதா-சசிகலா இருவருக்குமான பிரத்தியேக குளியலறைதான் அது. ஜெயலலிதாவே நேரில் பார்த்து ஓ.கே. செய்து கட்டி முடிக்கப்பட்டதாம். இந்தக் குளியலறையை நவீனரகமாக கட்டிமுடிக்க 25 இலட்சம் ரூபா செலவிடப்பட்டதாம்.

இந்த சொகுசு பங்களாவைச் சுற்றி மரங்களும், மலர்த்தோட்டங்களும் இயற்கை வனப்பாக காட்சி தருகின்றன. இந்த பங்களாவின் பெறுமதி 10 கோடி ரூபாய்களுக்கு மேல் இருக்கும்.

இவையெல்லாம் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் மாதிரித்தான். இவை தவிர சென்னையில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் சொகுசு மாளிகைகள் இருக்கின்றன.

தோண்டத் தோண்ட மேலும் மேலும் சொத்து விபரங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. தமிழக மக்கள் மூக்கில்வைத்த விரலை எடுக்க முடியாமல் இருக்கிறார்கள்.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சரும் அவரது தோழியும் உலகின் பெரும் பணக்காரர்களின் பட்டியலில் இடம் பிடிக்க கடுமையாக உழைத்திருக்கிறார்கள். அது மட்டும் உண்மையிலும் உண்மை.

# இன்னுமொரு நடிகை

தமிழ்த் திரையுலகின் கவர்ச்சிப் புயல் சில்க் சுமிதா மின்விசிறியில் தொங்கி பலியானார். தொங்கினாரா? தொங்கவிடப் பட்டாரா என்ற சந்தேகம் இன்னமும் தீரவில்லை. தமிழக தடயவியல் நிபுணர் ஒருவர் சமீபத்தில் கூறியுள்ள விபரங்களின்படி சில்க் சுமிதா மரணத்தில் மர்மம் இருப்பது உறுதியாகியுள்ளது.

சில்க் சுமிதாவின் மரணத்தைப்போலவே இன்னொரு நடிகையும் மரணமாகியுள்ளார் என்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

சில்க் சுமிதாவின் மரணச் செய்தி தமிழ்ப்பட இரசிகர்களை உலுப்பிக் கொண்டிருந்தபோது, மும்பாய் படஉலகின் கவர்ச்சி நடிகை ஒருவர் சத்தமே இல்லாமல் செத்துப் போனார்.

அவரது பெயர் ஷரோன் பிராடி. வயது 18. கடந்த மாதம் 19.10.96 சனிக்கிழமை ஷரோன் பிராடி தற்கொலை செய்து கொண்டார்.

எப்படி தற்கொலை செய்து கொண்டார் தெரியுமா? மின்விசிறியில் தூக்குப் போட்டுக் கொண்டுதான் தற்கொலை செய்துள்ளார். சில்க் சுமிதாவின் மரணச் செய்திகளை படித்துவிட்டு தானும் மின்விசிறியில் தொங்கும் யோசனையை மேற்கொண்டாரோ என்று தெரியவில்லை.

இரண்டு நடன நடிகைகளுமே மின் விசிறியில் தொங்கியது அபூர்வ ஒற்றுமை தானே!

தனது மரணத்திற்கு ரூப்மதன் என்னும் தொழிலதிபரே காரணம் என்று கடிதம் எழுதிவைத்துவிட்டுத்தான் ஷரோன் பிராடி தற்கொலை செய்திருக்கிறார்.



ஷரோனைத் திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றிவிட்டாராம் ரூப்மதன். ஷரோனுடன் நெருங்கிப் பழகினார் ரூப்மதன். இளமையும், அழகும் உள்ள ஷரோனை தனது சக தொழிலதிபர்களையும் திருப்தி செய்யுமாறு நிர்ப்பந்தித்தாராம் ரூப் மதன். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது கவர்ச்சியான உடைகளில் வருமாறும் கட்டாயப்படுத்தினாராம்.

ரூப்மதன் தன்னை ஏமாற்றி இலாபம் அடையப்பார்க்கிறார் என்று தெரிந்தவுடன் மனமுடைந்துபோனார் நடிகை. அதனால் தான் மின்விசிறியில் தொங்கிவிட்டார்.

தொழிலதிபர்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருக்கிறார் ஷரோன் பிராடியின் தாயாரான லிண்டா பிராடி.








படிப்பகம்

www.padippakam.com






# மாறும் முகம்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதை இப்போது அநேகமாக நம்பமுடிவதில்லை. அகத்தில் இல்லாத விஷயங்களையெல்லாம் முகத்தில் காட்டுவதில் கில்லாடிகள் பலர் நம்மிடையே இருக்கலாம். ஆனால், படத்தில் முகபாவனை காட்டுகிறார் பாருங்கள், இவரை யாராலும் வெல்ல முடியாது.

தனது முகத்தை பல்வேறு கோணலாக மாற்றிக்காட்டுவதில் இவர் ஒரு மன்னர். நாய்போல, கழுதைபோல, குரங்குபோல என்று பலவிதமான கோணங்களில் முகத் தசைகளை சுருக்கியும், விரித்தும், கோணலாக்கியும் வித்தை காட்டுவார். அந்த முகபாவனைகளில் ஒரு போஸ்தான் இது. முகமாற்றச் சாதனை மூலமாக 10 தடவை பரிசுகளை வென்றுள்ளார். இவரது பெயர்; கோர்டன் பற்றின்கன். பிரிட்டனைச் சேர்ந்தவர்.

இவரது சாதனையை முறியடிக்க உங்களால் முடியுமா? முகக் கண்ணாடி முன் நின்று முயன்று பாருங்கள்.

முயற்சி செய்வோருக்கு ஒரு தகவல்; இவரது சாதனையைப் பார்த்துவிட்டு தாமும் செய்து பார்த்த பலருக்கு முகத்தில் சுளுக்கும், தசைப்பிடிப்பும் ஏற்பட்டதுதான் மிச்சம். பரவாயில்லை என்றால் பரிசீலித்துப் பாருங்கள்.

# உயர்ந்ததும் சிறந்ததும்

கனடாவில் சகாரா கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டி நடந்தது அல்லவா. அப் போட்டியை தொலைக்காட்சியில் கண்டுகளித்தவர்கள் படத்திலுள்ள கோபுரத்தைக் கண்டிருப்பீர்கள். அருகில் தெரிகிறது பாருங்கள் மைதானம், அங்குதான் போட்டி நடந்தது.

இந்த மைதானமும் கோபுரமும் உலக அதிசயங்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளன.


முதலில் இந்த உயர்ந்த கோபுரம்பற்றிய தகவல்; வானத்தை 'ஹலோ சௌக்கியமா?' என்று நலம் விசாரிக்கும் இக் கோபுரத்தின் உயரம் 553 மீட்டர். அதாவது 1815 அடி 5 அங்குலம். உலகில் மிக உயர்ந்த கோபுரம் இதுதான். இதன் பெயர் 'கனடியன் நேஷனல் டவர்'. கனடாவில் ரொரன்டோவில் இது இருக்கிறது. 1976ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. கோபுரத்தின் மேல்பகுதியைப் பாருங்கள், வட்ட வடிவமான அந்தக்கட்டிடத்துக்குள் உணவு விடுதிகள், தொலைக்காட்சி ரான்ஸ்மிட்டர்கள், கேளிக்கைக் கூடங்கள் என்பன அமைந்துள்ளன. கண்ணாடியிலான தரையும் இருக்கிறது. டவரின் கீழே இருந்து 58 செக்கனில் மேல் பகுதிக்கு பயணம் செய்யக்கூடிய 'லிப்ட்'டும் இருக்கிறது. கனடா வரும் உல்லாசப் பிரயாணிகள் இங்கு செல்லத் தவறுவதில்லை.

அடுத்தது, டவர் அருகே உள்ள மைதானம் பற்றிய தகவல்கள்:-


இந்த விளையாட்டு மைதானத்தை 'ஸ்கைடோம்' என்று அழைக்கிறார்கள். வெளியே அடாதமழை கொட்டினாலும் உள்ளே விளையாடிக் கொண்டிருக்கலாம்.

எப்படி என்கிறீர்களா? விளையாட்டு மைதானத்தின் மேல் உள்ள கூரையை மூடிவிடலாம். கூரை திறக்கப்பட்ட நிலையில் இருப்பதையே படத்தில் காண்கிறீர்கள். காலநிலைக்கு ஏற்ப திறந்து மூடக்கூடிய இந்த விளையாட்டரங்கில் 50 ஆயிரம் பேர் ஒரே நேரத்தில் அமர்ந்து பார்க்கக்கூடிய இருக்கை வசதிகள் உள்ளன. 1989ல் இது கட்டி முடிக்கப்பட்டது. உலகில் உள்ள முதல் தரமான விளையாட்டுக்களை இங்கே விளையாடலாம். சகல வசதிகளும் இருக்கின்றன.





# சொத்தான பொத்தான்



முத்திரை சேகரிப்பில் படுசீரியசாக ஈடுபட்டுள்ளவர்களைப் பார்த்திருப்பீர்கள். பொழுதைப் போக்க வித்தியாசமான முயற்சிகளில் ஈடுபடுவது நல்லதுதான்.

திருமதி பி.ஏ.கிறாட்லி அமெரிக்காவில் நெப்றாங்காவைச் சேர்ந்தவர். இவரது ஆர்வம் சட்டைப் பொத்தான்களின் மீதுதான். அதனால் அத்தானை ஒரே தொல்லைப் படுத்தி விதம் விதமான பொத்தான்களை வாங்கிவரச் செய்திருப்பார் என்றா நினைக்கிறீர்கள். இல்லை, தானே முயன்று விதம் விதமாகச் சேர்த்து வைத்திருந்தார். அவ்வாறு அவர் சேர்த்துமுடித்த பொத்தான்களின் எண்ணிக்கை 20 ஆயிரம். 37 நாடுகளைச் சேர்ந்த பொத்தான்கள் இருக்கின்றன. ஒன்று போல் மற்றொன்று இருக்காது. 20 ஆயிரம் பொத்தான்களும் ஒவ்வொரு ரகமாக இருப்பதுதான் இவரது முயற்சியை உலக சாதனையாக்கியுள்ளது.

படத்தில் இருக்கும் ஆண்மகன் பெயர் டோட்டென். இவருக்கு திருமணமாகவில்லை. பெண்களைக் கண்டாலும் பொத்தான்களின் மேலேதான் இவரது கண்கள் போகும். தப்பாக நினைக்க வேண்டாம். பொத்தான் சேர்ப்பதில் அலாதியான ஈடுபாடு. மொத்தமாக 5 ஆயிரத்தி 600 பொத்தான்களை விதம் விதமாகச் சேர்த்து கோர்ட், சூட் தைத்து அணிந்து கொண்டார். திருமணத்தில் இல்லாத சந்தோசம் இந்த சாதனைக் கோர்ட், சூட் அணிந்த போது ஏற்பட்டதாம்.



குழந்தை பிறந்துவிட்டாலே எந்தத் தாய்க்கும் மனநிறைவுதான். படத்தில் இருக்கும் தாயாருக்கு பல மடங்கு மனநிறைவு ஏற்பட்டுவிட்டது. பிறந்த குழந்தை மகா மகா பொலிவாகப் பிறந்துவிட்டது.

தாயின் உதவியுடன் ஸ்டைலாக எழுந்து நிற்கும் குண்டு குண்டு குழந்தையின் பெயர்: ஷாச் ஸ்றென்கோர்ட். பிறந்து 17 மாதங்கள் ஆகிறது. எடை எவ்வளவு தெரியுமா? 68 இறாத்தல். மூன்று அடி உயரம். ஆசையாக தூக்கிக் கொஞ்ச வருகிறவர்கள் பாடு கஷ்டம்தான். உணவைக் கட்டுப்படுத்தி படிப்படியாக எடையைக் குறைக்கலாம் என்று டாக்டர்கள் ஆலோசனை சொல்லியுள்ளார்களாம்.

இருந்துவிட்டுப் போகட்டும். கண்ணுக்கு நிறைவாகப் பார்த்துக் கொண்டிருக்கலாம் என்கிறார் தாயார் லூரி. கண்பட்டுவிடப்போகிறது.



# இடமும் வலமும் இரண்டானால்

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கம் இருக்கிறது. மனிதனுக்கும் அப்படித்தான். அகமும், புறமும் என்று இரண்டு பக்கங்கள்.

இவரோ புறத் தோற்றத்தையே இரண்டாக மாற்றிவிட்டார். தாடி, மீசை, உடை, பாதணி என்று எல்லாமே இரண்டு ரகம்.

இந்த வினோத தோற்றத்துடன் அமெரிக்காவை ஒரு ரவுண்ட் அடித்தாராம். சென்ற இடமெல்லாம் மாபெரும் வரவேற்பு. இவரது பெயர், ஜோன் பெக்கி நோவ்ஸ்கி. அமெரிக்கர்.

ஏன் இந்த முயற்சி? என்று கேட்டால், "என் பெயரும், படமும் பத்திரிகைகளில் வெளிவர வேண்டும். திடீர் பிரபலம் அடைய விரும்பினேன். அதுதான் இப்படியொரு முயற்சி" என்கிறார். எதற்கும் அரசியல் வாதிகள் இவரிடம் கவனமாக இருப்பது நல்லது. போட்டிக்கு வந்து விடுவார் அல்லவா.





படிப்பகம்

www.padippakam.com

## ஜீன்ஸ்-ஹொலிவூட் வில்லன்

இயக்குநர் ஷங்கர் ஏற்கனவே பல படங்களில் சின்னச் சின்ன வேடங்களில் நடித்திருக்கிறார். 'ஜீன்ஸ்' படத்தில் முக்கிய கதாபாத்திரம் ஒன்றில் துணிந்து நடிக்கப்போகிறார்.

பிரசாந்த் இரட்டை வேடத்தில் நடிக்கும் படம் 'ஜீன்ஸ்' என்பது தெரிந்த செய்தி. அவருக்கு ஜோடியாக நடிக்கும் உலக அழகி ஐஸ்வர்யாராய் கவர்ச்சி உடைகளில் தோன்றி அசத்தப்போகிறாராம்

'ஜீன்ஸ்' படத்தில் நாசருக்கும் இரட்டை வேடமாம். முதன்முதலாக இரட்டை வேடம் போடப்போகிறார்கள் நாசரும், பிரசாந்தும்.

இசை: ஏ.ஆர்.ரகுமான். இசையமைப்பதோடு படத்தில் சில பாடல்களையும் பாடுகிறார்.

'ஜீன்ஸ்' படப்பிடிப்பு அமெரிக்காவில் ஆரம்பித்து, அவுஸ்திரேலியா, சுவிற்ஸர்லாந்து, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளிலும் நடைபெறவுள்ளது.

மற்றொரு முக்கிய செய்தி ஹொலிவூட் நடிகர் ஒருவரை வில்லனாக நடிக்கவைக்கப் பேச்சுவார்த்தை நடக்கிறதாம்.

## ராமராஜன் 25 இலட்சம்

ராமராஜனின் படங்களால் போட்ட முதலுக்கு நஷ்டமில்லை. தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் ஆகியோரின் கையையும் கடிக்காது. அதனால் ராமராஜனின் மார்க்கெட் நிதானமாக உயர்ந்து வருகிறது.

நடிப்பு, இயக்கம் என்று இரண்டுக்கும் சேர்த்து 25 இலட்சம் ரூபா சம்பளம் வாங்குகிறார் ராமராஜன். 45 நாட்களில் படத்தை முடித்துக் கொடுத்துவிடுவார்.

## காதோடு சொல்லுகிறோம்

தற்போது வெளியாகியுள்ள மூன்றெழுத்து நடிகரின் ஔவையாரின் பெயரை நினைவூட்டும் படத்தில் ஹீர நடிகையும் நடித்துள்ளார். ஹீரோவின் மீன் நடிகைதான். 'ஹீர' நடிகை மீன் நடிகைக்கு போட்டியாக அசத்த நினைத்தாராம். தனக்கும் மூன்றெழுத்து நடிகருக்கும் முத்தக் காட்சி வைக்குமாறு ஒற்றைக்காலில் நின்றாராம் ஹீர நடிகை. நடிகரின் காதுக்குச் செய்தி போனது. வேணுமானா ஹீரோயினுக்கு கொடுக்கலாம். இந்தப் பொம்பிளைக்கு ஏன் கொடுக்கணும்? அப்படியொரு காட்சியே வேண்டாம் என்றுவிட்டாராம் நடிகர். கொடுக்கத் தயாராக இருந்தும் நடிகர் வாங்க மறுத்துவிட்டதால் 'ஹீர' நடிகை நொந்து போனாராம். அதனால் என்ன மொத்தமாக வாங்கத்தான் 'ஆசை' நாயகன் 'குமார' நடிகர் இருக்கிறாரே!

'பம்பாய்' பட நாயகி மணியான நடிகை தெலுங்கு நடிகர் ஒருவருடன் நட்பாகியிருக்கிறார். நடிகையின் முன்னாள் காதலரான இந்தி நடிகர் அதனால் கடுப்பாகி இருக்கிறாராம். தெலுங்கு நடிகரின் மனைவியும் மணியான நடிகைமீது புழுதிவாரித் தூற்றுகிறாராம். தெலுங்கு நடிகரின் மனைவி யார் தெரியுமோ? 'அமல' நடிகைதான். முன்னாள் நடிகையான அவர் இந்நாள் நடிகைகளிடம் இருந்து தனது கணவரைக் காப்பாற்றப் படாத பாடுபடுகிறார்.

'வினித' நடிகையைக் கண்டால் போதும் தயாரிப்பாளர்கள் ஒரே ஓட்டமாக ஓடிவிடுகிறார்களாம். "மும்பாய் நடிகைகளிடம் என்னைவிட என்ன இருக்கிறது?" என்று அவர் கேட்கும் மிக முக்கியமான கேள்விக்கு பதில் சொல்ல முடியாதாம். அதனால்தான் அந்த ஓட்டம் ஓடுகிறார்களாம். பாவம், 'வினித' நடிகை பேச்சுத் துணைக்குக் கூட ஆள் இல்லாமல் தவிக்கிறார்.

## மினி சினி

* ரஜினியின் 'பாட்ஷா', 'முத்து' ஆகிய இருபட... பெயர்களில் தெலுங்கில் டப் செய்யப்பட்டு ... பெற்றன. தற்போது ரஜினி நடித்து வரும் 'அ... படத்தையும் அதே பெயரில், தமிழில் வெளி... நாளில் தெலுங்கில் டப் செய்து வெளியிடவு...
* 'செல்வா' படத்தில் விஜய் ஜோடியாக நடித்... கன்னடத்தில் தயாராகி வரும் 'பூவே உனக்கா... ஒரேயொரு பாடல் காட்சியில் நடனமாடியு...
* முரளி-ராஜஸ்ரீ ஜோடியாக நடிக்கும் 'போலா... படத்தின் பெயரை 'கண்டக்டர் மாப்பிள்... மாற்றிவிட்டார்கள். அத்துடன் கதாநாயகி ... நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக சுவாதியை ... துள்ளார்கள்.
* விஜயகாந்திற்கு ஜோடியாக 'திருமூர்த்தி' ப... ரவளிக்குத் தமிழில் படவாய்ப்புக்கள் எது... எனினும் இவர் தனது சகோதரனைக் கதா... 'காதல் யுத்தம்' என்ற படத்தைத் தயாரித்து...
* கே.டி. குஞ்சுமோன் தயாரிக்கும் 'சக்தி' ப... இசையமைப்பாளராக அறிமுகமாகியுள்ள ... இந்தப் படம் வெளிவருவதற்கு முன்னரே, ... இயக்கத்தில் நெப்போலியன் நடிக்கும் 'சிறகுகள்... படத்திற்கு இசையமைக்க ஒப்பந்தமாகியுள்ள...
* 'புதையல்' பட அறிமுக நாயகி சாக்ஷி 'பா... தெலுங்குப் படத்தில் நடிக்கிறார். இப்படத்... ஜோடியாக வினீத் நடிக்கிறார்.
* ரஜினியின் 'வள்ளி' படத்தில் அறிமுகமான ... மலையாளம் மற்றும் தெலுங்குப் படங்களில் நடி... இவர் தற்போது விக்ரமன் இயக்கும் 'சூர்யவ... சரத்குமாருக்கு ஜோடியாக நடிக்கிறார்.
* இதுவரை கதை, திரைக்கதை, வசனம் ... வந்துள்ள பவித்ரன் சில படங்களைத் தயாரி... இவர் இயக்கும் 'மூக்குத்தி காசி' படம் மூல... பாளராகிறார்.
* ஆர்.கே. செல்வமணி இயக்கி இன்னமும் ... இருக்கும் 'குற்றப்பத்திரிகை' படத்தில் முன்... பிரதமர் அமரர் ராஜீவ் காந்தியாக நடித்தவ... அனுபம் கெர். இவர் இப்போது பிரபுதே... நடிக்கும் 'வி.ஐ.பி.' படத்தில் நடிக்கிறார்.
* மலையாளத்தில் மம்முட்டி நடித்து பெரு... 'ஹிட்லர்' படத்தைத் தமிழில் பிரபுவை வைத்... திட்டமிட்டிருந்தார்கள். இப்போது அந்தத்... கைவிட்டு விட்டு, 'ஹிட்லரை' தமிழில் ... வெளியிடுகிறார்கள்.

## ரோஜா தள்ளா...

சமீபகாலமாக ரோஜாவுக்குத் தெலுங்கி... ஏன்தான் இந்தத் தள்ளாட்டமோ தெரிய... மொழிகளிலும் நல்ல படவாய்ப்புக்கள் அமைய... கஷ்டப்படுகிறார். தமிழில் சத்யராஜ் ஜோடி... ஆர்.கே.செல்வமணியின் 'அரசியல்', 'அடிமை... படங்களில் இரண்டு கதாநாயகிகளில் ஒரு... வருகிறார் ரோஜா.



பிரசாந்த்-சங்கவி
படம்: மன்னவா

## மிடுக்கான விஜயகாந்த்

கிராமத்து தலைவர் வேடங்களுக்கு எப்போதுமே நல்ல வரவேற்பு இருக்கிறது. 'நாட்டாமை' படத்தின் பிரமாண்ட வெற்றிக்குப் பின்னர் கிராமத் தலைவர்கள் சம்பந்தப்பட்ட கதைகளுக்கு தமிழ் பட உலகில் பலத்த கிராக்கி.

முன்னர் 'சின்னக் கவுண்டர்' படத்தில் கிராமத் தலைவராக வெளுத்துவாங்கியவர் விஜயகாந்த். 'தர்மச்சக்கரம்' படத்திலும் விஜயகாந்துக்கு கிராமத்தலைவர் வேடம்தான்.

பதினெட்டுப்பட்டி கிராமங்களுக்குத் தலைவராகவும், பொன்முடி என்னும் கிராமத்தின் செல்வந்தராக தோன்றுகிறார் விஜயகாந்த். பட்டுவேட்டி, பட்டுச்சட்டை, கழுத்தில் புலிநகம் பதித்த சங்கிலி சகிதம் வில் வண்டியில் விஜயகாந்த் செல்லும் காட்சி சமீபத்தில் படமாக்கப்பட்டது.

'சின்னக் கவுண்டர்' படத்தின் பின்னர் விஜயகாந்தின் நடிப்புப் பசிக்குத் தீனிபோடும் படமாக இது அமையும். இயக்கம்: கே.எஸ்.ரவிக்குமார். பாடல்கள்: ஆர்.வி.உதயகுமார். இசை: தேவா.

## விழுந்தார் சுவாதி

பவித்ரன் தயாரிப்பில் ஏ.வெங்கடேசன் இயக்கும் 'செல்வா' படத்தின் ஒரு பாடல் காட்சிக்காக சமீபத்தில் ராஜஸ்தான் சென்றிருந்த சுவாதி, அந்தப்பாடல் காட்சியின் போது, ஓடும் ஒரு ஒட்டகத்தின் மீது தாவி ஏற முயன்றார். ஆனால் அவரது முயற்சி முடியாமல் போகவே, கீழே பாலைவன மணலில் தொப்பென்று விழுந்துவிட்டாராம். நல்லவேளை, விழுந்தது மணலில் என்ப...தால், காயம் எது...வும் ஏற்படாமல் தப்பித்து விட்டாராம் சுவாதி.

## அருணாச்சலம் ஆரம்பம்

'அருணாச்சலம்' படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. படத் துவக்க விழாவையும் அட்டகாசமாக நடத்தியிருக்கிறார்கள். துவக்க விழாவில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் அருணாச்சலீஸ்வர் மற்றும் உண்ணாமுலை அம்மன் உள்ள காலண்டர்கள் வழங்கப்பட்டதாம்.

'அருணாச்சலம்' படத்தின் லாபத்தை எட்டுப் பேருக்கு வழங்க முன்வந்தார் ரஜினி. அதில் ஏழு பேரின் பெயர்கள் முன்னாடியே கூறப்பட்டன. எட்டாவது ஆள் யார்? என்பது சஸ்பென்சாக இருந்தது. இப்போது அதுவும் தெரிந்துவிட்டது. அது இயக்குநர் ஸ்ரீதர். ஆனால் ஸ்ரீதரோ நன்றி சொல்லி நெகிழ்ந்துவிட்டு, அன்போடு மறுத்துவிட்டாராம்.



சரத்குமார்-லிசாரே
படம்: நேதாஜி

## நடிகர்கள் மார்க்கெ...

தமிழ்ப் பட உலகில் பெரிய ஹீரோக்கள் என்ற பட்டியலில் ...கள் ஏழே ஏழுபேர்தான். ரஜினி, கமல், விஜயகாந்த், சத்யர... சரத்குமார், கார்த்திக். இவர்களது சம்பளமும் அதி...

இந்த ஏழுபேருக்கு அடுத்ததாக இருப்பவர்கள் ப... அஜித்குமார், விஜய் இருவரும் முன்னணியில் உ... அப்பாஸ் நடித்துவரும் படங்கள் வெளியாகி ஹிட்டா... அவரும் முன்னணிக்கு வந்துவிடுவார்.

இவர்களுக்கு அடுத்தபடியாக பிரசாந்த், நெப்போலி... ராம்கி, முரளி, அருண்குமார், பாண்டியராஜன் போன்றோர் இடம்பெறுகிறார்கள்.

## கமலுக்கு யார் அழகு

### அழகிப் போட்டியைச் சாடுகிறார் கமல்

தீபாவளி வெளியீடாக வந்து சக்கை போடு போடுகிறது 'அவ்வை சண்முகி'.

கமலுக்கு இப்போது 42 வயது. இம்மாதம் நவம்பர் 7ம் திகதிதான் தனது 42வது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

'அவ்வை சண்முகி' படத்தில் மாமி வேடத்தில் 40 நாட்கள் நடித்தாராம். 40 நாட்களும் சரியாகச் சாப்பிடக்கூட முடியவில்லையாம். போதாக்குறைக்கு எலாக்ஸ்டிக் பிரா அவரது முதுகைச் சிராய்த்து பதம்பார்த்துவிட்டதாம்.

மாமிக்குரிய நடை, உடை, பாவனை யாவும் தன் அம்மாவை நினைத்துக்கொண்டு நடித்தது என்கிறார் கமல்.

மாமி வேடம் போட்டுள்ள கமல் உலக அழகு ராணிப் போட்டி பற்றி என்ன சொல்கிறார் தெரியுமா?

"எது அழகு, இதுதான் அழகு என்று எல்லோருக்கும் பொதுவான ஒன்றை யார் நிர்ணயிப்பது?

அம்மாவுக்கு குழந்தை அழகு. எனக்கு என் மனைவி அழகு. என் மனைவிக்கு நான்தான் அழகு.

இது என்ன அமெரிக்கத்தனமான அழகிப் போட்டி சாப்பாட்டுப் போட்டியொன்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பரமகுடி மீன் குழம்பை அமெரிக்கா கொண்டுபோய் அங்கிருக்கிற உணவு வகைகளோடு ஒப்பிட்டு இது தோற்றுப் போச்சுன்னா நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

வெள்ளரிக்கா தோட்டத்தில நடந்துபோற கிராமத்துப் பெண்ணின் அழகே தனிதான். அவளோடு இந்த அழகிகளையெல்லாம் ஒப்பிட முடியாது. இந்த அழகிப்போட்டி அமிதாப்பச்சன் நிறுவனம் பண்ணுகிற ஒரு வியாபாரம். நாங்க நடிக்கிறமாதிரி இதுவும் ஒரு தொழில். இதில் கலந்து கொள்ளும் அழகிகள் இந்திரலோகத்தில் ஆடவா வர்றாங்க. பணம் கிடைக்குது வர்றாங்க.

என்னைப் பொறுத்தவரை சிவாஜிகணேசனைத் தவிர வேறு யாருமே அழகே இல்லை. எனக்கு காமராஜர் பிடிக்கும். காந்தி பிடிக்கும். அவங்களை எல்லாம் அழகன் போட்டிக்கு அனுப்பினா தோற்றுப் போவாங்க. ஆனா எனக்கு அவங்க அழகுதான்."

இவ்வாறு கூறியுள்ளார் கமல். என்ன கமலின் கருத்தோடு நீங்களும் உடன்படுகிறீர்களா?



விஜய்-...
படம்: ...



படிப்பகம்

www.padippakam.com

# சினி விசிட்

## அப்பாஸ்க்கு அட்வைஸ்

18 வயதான இளம் ஹீரோ அவரது காட்டில் மழை கொட்டுகிறது. மூச்சுவிடவே நேரமில்லாமல் நடித்துக் கொண்டிருக்கிறார். அவர் தான் அப்பாஸ்.

'காதல் தேசம்' படத்தின் பின்னர் அப்பாஸை இளம் வட்டாரங்களுக்கு பிடித்து விட்டது.

காதல் மன்னனாக பெயர் எடுத்துவரும் அஜித்குமாருக்கு சரியான போட்டி அப்பாஸ் தான்.

'வி.ஐ.பி', 'ஆசைத்தம்பி', 'ஜாலி' உட்பட கைநிறைய படவாய்ப்புக்களோடு இரவு பகலாக நடித்துக்கொண்டிருக்கிறார். தன்னுடன் நடிக்கும் நடிகைகள் எல்லாம் வயதில் மூத்தவர்களாக இருப்பதால் நெருக்கமாக நடிக்க கூச்சப் படுகிறாராம் அப்பாஸ்.

வி.ஐ.பி. படப்பிடிப்பில் ரம்பாவை வாய்தவறி அக்கா என்று கூப்பிட்டுத் தொலைத்து விட்டாராம் அப்பாஸ். வந்தது பாருங்கள் ரம்பாவுக்கு மூக்கின் மேல் கோபம். "என்னடா குழந்தே இங்கே எதற்கு வந்தாய்?" என்று கேலிசெய்வது போலப் பேசி வெறுப்பைக் காட்டிவிட்டாராம்.

வளர்ந்துவரும் நடிகர். நாளை அவர் தயவு தேவைப்படும் என்பதால் அத்தோடு விட்டார் ரம்பா. இல்லாவிட்டால் அப்பாஸ் பாடு பெரும் பாடாகியிருக்கும்.

அஜித்குமார் போல காதல் விஷயங்களில் கழுத்தை நீட்டி சளுக்கிக் கொள்ளவேண்டாம் என்று அப்பாஸுக்கு பலர் அட்வைஸ் பண்ணுகிறார்களாம்.

"நல்ல பிள்ளையாக நடந்து பெயர் எடுப்பேன்" என்கிறார் அப்பாஸ். ரசிகைகள்தான் விடுகிறார்களில்லையாம். அப்பாஸ் கலந்து கொள்ளும் படப்பிடிப்புக்களைக் காண மாணவிகள் கூட்டம் அலைமோதுகிறதாம்.


அப்பாஸ்

## நெப்போலியனின் 'வீரப்பன்'

நெப்போலியன் இருவேடத்தில் நடிக்கப்போகும் படம் 'வீரப்பன்'. ராஜ்கிரண் நடித்த 'மாணிக்கம்' படத்தை தயாரித்த அம்மா கிரியேஷன்ஸ் பட நிறுவனம் தயாரிக்கும் படம் இது.

காட்டில் வாழும் வீரப்பனாகவும், கிராமத்து வாலிபனாகவும் இரண்டுவேடங்களில் நெப்போலியன் தோன்றப்போகிறார். கதாநாயகிகள் தேர்வு நடைபெற்று வருகிறது.

பிரகாஷ்ராஜ், மணிவண்ணன் ஆகியோரும் நடிக்கவுள்ளனர். சுரேஸ் என்னும் புதிய இயக்குநர் அறிமுகமாகிறார். கவிதாஞ்சன் என்றபெயரில் புதிய இசையமைப்பாளரும் அறிமுகமாகப்போகிறார். அடுத்த மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

## மூக்குத்தி காசியில் புது ஹீரோ

பவித்ரன் இயக்கத்தில் சரத்குமார் நடிப்பதாக இருந்த படம் 'மூக்குத்தி காசி'. பின்னர் சரத்குமார் ஒதுங்கிக்கொண்டார். பாஸ்கர்ராஜ் என்னும் புதுமுகத்தை கதாநாயகனாகப் போட்டு படப்பிடிப்பை ஆரம்பித்துவிட்டார் பவித்ரன். பாஸ்கர்ராஜ் முன்னர் நடனக்குழுவில் இருந்தவர். இப்போது அவருக்கு அதிஷ்டம் அடித்திருக்கிறது. குஷ்பு, ரோஜா இருவரும் கதாநாயகிகளாக நடிக்கின்றனர்.

கவுண்டமணி, செந்தில், மணிவண்ணன் ஆகியோரும் நடிக்கின்றனர். கதை, திரைக்கதை, வசனம், இசை, இயக்கம் என்ற பல பொறுப்புக்களை ஏற்றுள்ளார் பவித்ரன்.

கதாநாயகன் யானைப்பாகனாக நடிப்பதால், ஐந்து யானைகளும் படத்தில் நடிக்கின்றன.

## அழகிப் போட்டியில் பிரபுதேவா

இந்தியாவில் பெங்களூரில் நடைபெறவுள்ள அழகிப்போட்டி பற்றிய சர்ச்சைகளைப் போட்டியோடு தொடர்புடைய எவருமே ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

போட்டி கர்நாடக மாநிலத்தில் நடந்தாலும் தமிழ்நாட்டு திரையுலகத்தினரும் கலந்து கொள்கிறார்கள். நிகழ்ச்சிகளுக்கு இளையராஜா இசை அமைக்கிறார். தமிழ்ப்படவுலக நடனப் பயிற்சியாளர் கலாவும் நடன நிகழ்ச்சி ஒன்றை தனது குழுவினர் மூலம் வழங்கப்போகிறார்.

மற்றொரு செய்தி என்ன தெரியுமா? நடனப் புயல் என்று அழைக்கப்பட்டும் பிரபு தேவாவும் ஒரு விசேஷ நடன நிகழ்ச்சியில் ஆடப் போகிறார். அவருடன் லண்டனைச் சேர்ந்த 20 கலைஞர்கள் இணைந்து ஆடப்போகிறார்கள்.

## மும்பாய் நியூஸ்

இந்தி நடிகர் சல்மான்கானுக்கு சொந்தப் படம் தயாரிக்கும் ஆசை வந்திருக்கிறது. தனது சகோதரர் அரபாஸ்கானுடன் இணைந்து புதுப்படத்தயாரிப்பில் குதித்துவிட்டார்.

படத்தின் பெயர் 'ஜன்னத்'. சல்மான்கானுடன் ஜோடியாக நடிப்பவர் கஜோல். இயக்கம் சல்மான்கானின் மற்றொரு தம்பி சொகைல் கான். ஆக இது ஒரு குடும்பப் படம்.



ரம்பா

## கொள்ளையர்கள் கொல்லப்பட்டனர்

அர்ஜுன்-ரம்பா ஜோடியாக நடிக்கும் படம்: அடிமைச் சங்கிலி. படப்பிடிப்பு வேகமாக நடந்துவருகிறது. படத்தில் அர்ஜுனுக்கு மற்றொரு ஜோடி ரோஜா. கொள்ளைக் கூட்டமொன்றின் தலைவராக ஆனந்தராஜ் நடிக்கிறார். படத்தில் அவருக்கு ஒன்பது தம்பிகள். கொள்ளையடிப்பதுதான் தொழில். கிராமம் ஒன்றில் கொள்ளையடித்துவிட்டுத் திரும்பும்போது கிராம மக்கள் அவர்களை அடித்துக் கொன்று விடுகின்றனர். அதில் ஆனந்தராஜின் 9 தம்பிகள் பலியாகின்றனர்.

தனது தம்பிகளைக் கொலை செய்த கிராம மக்களை பழிவாங்கக் கிளம்புகிறார் ஆனந்தராஜ். அவரை அர்ஜுன் எதிர்த்துப் போராடுவது தான் கதை.

தமிழகக் கிராமம் ஒன்றில் கொள்ளையர்கள் அக்கிராம மக்களால் அடித்துக் கொல்லப் பட்டது இந்த ஆண்டில் நடந்த உண்மைச் சம்பவம். அதனைத் தழுவித்தான் கதை அமைத்துள்ளனர். நம்பியார், விசு, வடிவேலு, சார்லி ஆகியோரும் நடிக்கின்றனர்.


ண்டியராஜன்-ஜோதிமீனா படம்: நல்ல மனசுக்காரன்

## முகப்பில்

கமல்
படம்:–அவ்வை சண்முகி

ரம்பா
படம்:–வி.ஐ.பி

## மூவேந்தரின் நிவாரணம்

சரத்குமார்-விஜயகுமார் நடித்து வெளியான படம் 'சேரன்-பாண்டியன்'. ரஜினி நடித்து வெளியான படம் 'பாண்டியன்'. இப்போது ஆனந்தபாபு, ரஞ்சித், விவேக் ஆகியோர் நடித்துவரும் படம்; 'சேரன், சோழன், பாண்டியன்'.

அருண்குமார், சுவாதி ஜோடியாக நடிக்கும் புதிய படமொன்றுக்கு 'சேரன்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

கவுண்டமணி, மணிவண்ணன், விவேக், மனோரமா, செந்தில் ஆகியோரும் நடிக்கவுள்ளனர். கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்: ராஜா அண்ணாமலை. இசை: தேவா. சண்டைப்பயிற்சி; ராக்கி. தமிழ்ப்படவுலக பெயர் பஞ்சத்துக்கு மூவேந்தர்களின் பெயர்கள் நிவாரணமளிக்கின்றன.

## ரம்பாவின் இலட்சியம்

ரஜினியுடன் 'அருணாச்சலம்' படத்தில் ஜோடி சேர வாய்ப்புக் கிடைத்தவுடன் ரம்பாவின் மார்க்கெட் படு சூடாகிவிட்டது.

'அருணாச்சலம்' வெளியானதும் ரம்பாவின் சம்பளம் மேலும் உயரும் என்பதால் இப்போதே அவரை ஒப்பந்தம் செய்துவிட அலைகிறார்கள் தயாரிப்பாளர்கள்.

"நேரம் கிடைக்கும்போது நடித்துத் தாருங்கள். இப்போது ஒப்பந்தத்தில் மட்டும் ஒரு கையெழுத்துப்போட்டு விடுங்கள்." என்று கெஞ்சுகிறார்கள் தயாரிப்பாளர்கள்.

ரம்பா மும்பாயில் மிதுன் சக்கரவத்தியுடன் கொஞ்சிக்கொண்டிருந்துவிட்டு திரும்பியிருக்கிறார். "இந்திப் படவுலகோடு இருந்துவிடு. தொடரான வாய்ப்புகளுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்" என்று மிதுன் வேண்டுகோள் விடுத்தாராம்.

ரம்பாவுக்கு இந்தி, தமிழ், தெலுங்கு என்று மூன்று படவுலகிலும் குறி. அதனால் மிதுனின் வேண்டுகோளை பரிசீலிக்க மறுத்துவிட்டார்.

தமிழில் 'அருணாச்சலம்' கிடைத்திருப்பது முன்னேறிப்பாய்ச்சலுக்கு உதவப்போகிறது. நக்மா? ரோஜா, மீனா ஆகியோரைவிட தற்போது முன்னணியில் இருப்பவர் ரம்பாதான். அருணாச்சலமும் வெளியாகி சூப்பர் ஹிட்டாகிவிட்டால் ரம்பாவின் இடத்தை யாராலும் அசைக்க முடியாது.

ரஜினி, அஜித்குமார், அர்ஜுன், விஜயகாந்த், சரத்குமார், பிரபுதேவா, அப்பாஸ், ஆகிய ஹீரோக்களோடு தமிழில் நடித்துக்கொண்டிருக்கும் ரம்பாவின் இலட்சியங்களில் ஒன்று, கமலுடன் நடிக்க வேண்டும் என்பதுதான்.

அந்த ஆசையும் நிறைவேறிவிட்டால் ரம்பா ரம்பாதான், மற்றவர்கள் சும்மா சும்மாதான்.

## பாண்டியராஜனின் கண்டுபிடிப்பு

கண்டுபிடிச்சேன், காரணத்தைக் கண்டு பிடிச்சேன் என்று பாண்டியராஜன் பாடாதகுறைதான் பாக்கி. தனது சினிமா உலக சறுக்கலுக்கு காரணம் தெரிந்து விட்டதாம். என்ன காரணம்?

வெளியார் இயக்கிய படங்களில் தொடர்ந்து நடித்தது தான் சறுக்கலுக்குக் காரணமாம். இனிமேல் தனது இயக்கத்தில் மட்டுமே அதிக படங்களில் நடிப்பது என்று முடிவு செய்துவிட்டார்.

புருஷன் பொண்டாட்டி படத்தை அடுத்து 'கோபாலா கோபாலா' படம் வெளிவருமாம். அதற்குப் பின்னர்தான் நல்ல மனசுக்காரன் வெளியாக வேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறார் பாண்டியராஜன். நீண்டகாலத் தயாரிப்பில் இழுபட்டுக் கொண்டிருக்கிறது 'நல்ல மனசுக்காரன்'. நல்ல சகுனம் பார்த்துக் கொண்டிருக்கிறார் பாண்டியராஜன்.

## நோ! மேக்-அப்

பிரபல எழுத்தாளர் பூமணியின் நாவல் ஒன்று படமாகிறது. 'கருவேலம் பூக்கள்' என்று பெயர் சூட்டியுள்ளனர். நாசரும், ராதிகாவும் இப்படத்தில் மேக்-அப்இல்லாமல் நடிக்கின்றனர். இசை; இளையராஜா.


படிப்பகம்

www.padippakam.com

# வரவு–செலவுத் திட்டம்

## இது நாட்டுக்கல்ல—வீட்டுக்கு!

"தேவையற்ற பொருட்களை வாங்கிக் கொண்டே இருந்தால் கடன் பெருகி மிகத் தேவையுள்ள பொருளை விற்க நேரிடும்" என்றார் ஓர் அறிஞர்.

செலவைச் சுருக்கி சேமிப்பைப் பெருக்க வேண்டும். பெருக்கிய பணத்தைப் பல துறைகளிலும் முதலீடு செய்ய வேண்டும். தகுந்தபடி முதலீடு செய்யாத பணம் கைக்கு வராத பணம் என்றே கொள்ளலாம்.

சிறுதுளி பெருவெள்ளம் ஆகிறது. தினமும் சேர்த்து வைக்கும் சில ரூபாய்களே நாளை பல இலட்சங்களாக உருவாகிறது.

உங்கள் வருமானத்தில் இருபது சதவீதத்தைச் சேமியுங்கள். அது முடியாத பட்சத்தில் பத்து சதவீதமாவது சேமிப்பாக இருக்கட்டும்.

தினமும் காலையில் எழுந்ததும் உங்கள் முதல் செலவு சேமிப்பாக இருக்கட்டும். அவரவருக்குத் தகுந்தபடி 1 ரூபாய் முதல் 100 ரூபாய் அல்லது அதற்கு மேலும் சேமிக்கலாம். இன்று முதல் சேமிப்பேன் என உறுதி கொண்டு ஒரு ரூபாய் நாணயத்தைச் சேமிப்புக்காக எடுத்து வைப்பவர் வாழ்வின் முன்னேற்றத்தில் முதல்படி எடுத்து வைத்து விட்டார் என்றே சொல்ல லாம்.

சேமிக்க ஆரம்பித்து விட்டால் சேமிப்பைப் பெருக்க என்னென்ன செய்யலாம்!

1. சிக்கன வாழ்வை மேற்கொள்ள வேண்டும். தேவையற்ற பொருட்களை வாங்கும் பழக்கத்தைக் கை விட வேண்டும். இந்தப் பொருள் இல்லாவிட்டால் வாழ முடியாதா என சிந்தித்து வாங்குவதே நல்லது.

2. தேவையான பொருட்களை வீட்டிலேயே எழுதிப் பட்டியல் தயாரித்த பிறகே கடைக்குச் செல்ல வேண்டும்.

3. கூடுமானவரை நாமாகவே கடைக்குச் சென்று வாங்குவது நல்லது.

4. பவுடர், சோப், எண்ணெய் போன்றவைகளைப் பெரிய அளவுகளில் வாங்குவதால் பணத்தைச் சிறிது மிச்சப்படுத்தலாம்.

5. மாத ஆரம்ப நாட்களில் கணவனும், மனைவியும் சேர்ந்து ஒரு பட்ஜெட் தயார் செய்து, வரவு-செலவு எழுதி சேமிக்க ஒரு தொகையை ஒதுக்க வேண்டும். எழுதுவதோடு இல்லாமல் அதன்படி நடப்பது முக்கியம்.

6. செலவழித்து முடிந்ததும் மீதியைச் சேமிப்பாக வைத்துக் கொள்ளலாம் என நினைப்பது தவறு. இதனால் சில சமயங்களில் சேமிக்க இயலாமல் போய்விடும். சேமிப்புத் தொகையை முதலில் எடுத்து வைத்துவிட்டு மீதியைச் செலவழிக்கப் பழக வேண்டும்.



### சேமிக்கும் வழிகள் என்ன

வீட்டில் குழந்தைகளுக்குச் சேமிப்பின் அவசியத்தை எடுத்துச் சொல்லி உண்டியலில் காசு சேர்க்கப் பழக்கலாம். அன்றாடம் சேர்க்கப்படும் சில்லறைக் காசுகள் பெருக ஆரம்பித்து ஒன்று பத்தாகி, நூறாகி ஆயிரமாகி நமக்குப் பயன்தரும் என்பதை மறக்கக் கூடாது.

* வங்கிகளில் பணத்தை சேமிப்புக் கணக்குகளில் முதலிடலாம்.

* வீட்டில் பெண் குழந்தைகள் வளர்ந்து வருகின்றார்களா? தினமும் ஒரு குறிப்பிட்ட தொகையை நகைக்காகச் சேமிக்கலாம். உதாரணமாக ஒரு நாளைக்கு நகைக்காகப் பத்து ரூபாயை எடுத்து ஒரு பெட்டியில் போட்டுக்கொண்டுவந்தால் ஒன்றரை மாதத்தில் ஒரு கிராம் தங்கம் வாங்கி விடலாம் அல்லவா?

* குழந்தை பிறந்ததும் வங்கியில் ஒரு சிறு தொகையை அவர்களது பெயரில் வைப்பிலிட்டால், அவர்கள் பெரியவர்களாக வளர்ந்ததும், அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

* 'பணத்தைப் பொன்னில் போடு அல்லது மண்ணில் போடு' என்பார்கள். அதாவது போகப் போக விலை ஏறக் கூடிய பொன் அல்லது மண்- அதாவது நிலத்தில் பணத்தை முதலீடு செய்வது நல்லது.

பொதுவாகச் சேமிப்பை முதலில் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். எப்போதும் நம் மனம் பழக்கத்திற்கே அடிமையாகிவிடும். சேர்க்கும் கை சேர்த்துக் கொண்டே இருக்கும். செலவழிக்கும் கை செலவழித்துக் கொண்டேதான் இருக்கும்.

வரவுக்கு மேல் செலவு செய்தால் மானமிழந்து, மதியிழந்து, செல்லும் இடமெங்கும் அவப்பெயர் வாங்க நேரிடும்.

அதிகமாகச் சம்பாதித்தாலும், அதை விட அதிகமாகச் செலவழித்தால் ஏழையாவார்கள்.

குறைவாகச் சம்பாதித்தாலும், அதை விடக் குறைவாகச் செலவு செய்தால் செல்வந்தராவீர்கள். என்ன சேமிக்கத் தயாராகி விட்டீர்களா?!

# இது சமையலறைச் சமாச்சாரம்

* பச்சை மிளகாய் நிறைய வாங்கி விட்டீர்களா? குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்தாலும் அழுகிப் போய் விடுகின்றன. அழுகிப் போகாமல், ஈரம் வற்றாமல் பசுமையாகப் பச்சை மிளகாயை வைத்திருக்க ஒரு யோசனை; மிளகாய் வாங்கியதும் காம்பை நீக்கிவிட்டு, ஒரு பிளாஸ்டிக் டப்பாவுக்குள் போட்டு அதைக் குளிர் சாதனப் பெட்டிக்குள் வையுங்கள். பச்சை மிளகாய் பத்து நாட்கள் ஆனாலும் புதுசு போலவே இருக்கும். விலை கொடுத்து வாங்குகிறோம் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டாமோ?
* உருளைக் கிழங்கைச் சமைக்கும் போது தோலைச் சீவி எடுத்து வீசி விடுகிறோம். உருளைக்கிழங்குத் தோலில் நிறையச் சத்து இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை எப்படியாவது பயன்படுத்த வேண்டும். தோலை நன்றாக நீரில் அலசி, கொஞ்சம் உப்பு, கொஞ்சம் தூள் போட்டுக் கலந்து வாணலியில் ஒரு தேக்கரண்டி எண்ணெய் விட்டு வறுத்து வைத்தால் நன்றாக இருக்கும். செய்து பாருங்களேன்.



* வீட்டில் துளசிச் செடி இருக்க வேண்டும். நீங்கள் குடிப்பதற்காக வடிகட்டி வைத்திருக்கும் நீரில், கொஞ்சம் துளசி இலைகளைக் கழுவிப் போட்டு வையுங்கள். தண்ணீர் வாசனையாக இருப்பதுடன், தடிமன் வராமல் பாதுகாக்கும்.
* பண்டிகைக் காலங்களில் பாயாசம், சர்க்கரைப் பொங்கல், இனிப்புக்கள் செய்வோம். எந்த இனிப்பு வகைகள் செய்தாலும் அதற்கு ஏலக்காய் பொடி செய்து போடுகிறோம். ஒவ்வொரு தடவையும் மூன்று, நான்கு என்று தட்டும் போது சில சரியாகப் பொடியாகாது. இல்லையென்றால் அங்கும் இங்கும் சிதறும். பத்துக் கிராம் ஏலக்காயோடு மூன்று தேக்கரண்டி சீனி சேர்த்து மிக்ஸியில் பொடி செய்து வைத்துக் கொண்டால் வசதியாக இருக்கும் அல்லவா?
* வடை செய்யும் போது சாதாரணமாக கடலைப்பருப்பு, துவரம் பருப்புத்தான் போடுகிறோம். அதற்குப் பதிலாக முதல் நாளே கொண்டைக் கடலையை ஊற வைத்துப் பிறகு அத்துடன் ஒருபிடி உளுத்தம் பருப்பு ஊற வைத்து அரைத்தால் வடை மொறு மொறுவென்று சுவையாக இருக்கும். அத்துடன் சத்தானதும் கூட.
* கத்தி கூர்மையாக இல்லையா? அதைச் சிறிது நேரம் சூடான நீரில் போட்டு வையுங்கள். பிறகு எடுத்துத் துடைத்து வெட்டிப்பாருங்கள் கூர்மையாக வெட்டும்.
* அரிசியை நன்றாக வறுத்து பொடி செய்து வைத்துக் கொள்ளுங்கள். கட்லட் செய்யும் போது அதற்குத் தூவ ரஸ்க் தூளுக்குப் பதிலாக இதைப் பயன்படுத்தலாம்.

## ரவா சவ்வரிசி பக்கோடா

தொகுத்துத் தருவது: சுகந்தினி

சமைப்போம் சுவைப்போம்

**தேவையானவை:**

சவ்வரிசி - 2 டம்ளர்
ரவை - 2 டம்ளர்
புளித்த மோர் - 1 டம்ளர்
பச்சை மிளகாய் - 8
ஓமம் - 1 கரண்டி
உப்பு - அளவாக
கடுகு - கொஞ்சம்
எண்ணெய் - அளவாக
உளுத்தம்பருப்பு - கொஞ்சம்
கறிவேப்பிலை - கொஞ்சம்.

**செய்முறை:**

சவ்வரிசியை மிஷினில் சிறு ரவைபோல உடைத்துக் கொள்ளவும். ரவையையும், சவ்வரிசியையும் புளித்த மோரில் ஊற வைக்கவும். ஒரு மணி நேரம் ஊறிய பின் பச்சை மிளகாயை நறுக்கி, ஓமத்தைப் பொடித்து ரவைக் கலவைக்குள் போடவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை போட்டு வதக்கி, ரவைக் கலவைக்குள் போட்டு, உப்பையும் சேர்த்து நன்றாகப் பிசைந்து கொள்ளவும்

அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் கொதித்ததும், ரவைக் கலவையைப் பக்கோடாப் பதத்தில் பிடித்து எண்ணெயில் போட்டுச் சிவந்ததும் எடுக்கவும்.

# கண்களைக் கவனியுங்கள்!

கண்களின் கீழே கருவளையம் வருவதற்கான அடிப்படைக் காரணத்தைத் தெரிந்து கொண்டு அதைச் சரி செய்தால்தான் கருவளையம் நீங்கும்.

ஒருவருக்குத் தூக்கம் சரியான அளவு இல்லையென்றால் அவருடைய தோல், முகம் எல்லாமே பொலிவிழந்துதான் போகும். தூங்கும்போதுதான் உடம்பில் உள்ள முக்கிய பாகங்கள் ஓய்வு பெறுகின்றன; புதிய செயல்களைப் பெற்றுப் புத்துணர்வும் பெறுகின்றன. வெகுநேரம் வேலை செய்து கொண்டிருந்தாலும் சரியானபடி தூங்காவிட்டால் உடம்பு சோர்ந்து போகின்றது. இந்தச் சோர்வின் களைப்புத்தான் கண்களுக்குக் கீழே கருவளையங்களாகத் தெரிகிறது. முகம் அழகிழந்து போகின்றது.

மனதில் கவலை, டென்ஷன், வேறு ஏதாவது தவிர்க்க இயலாத பிரச்சனை- இதையெல்லாம் வைத்துக் கொண்டு படுத்தால் தூக்கம் எப்படி வரும்? புரண்டு, புரண்டு படுத்துக்கொண்டே இருக்க வேண்டியதுதான். கவலையோடு இருப்பவர்களுக்கு இளமை சீக்கிரமே நழுவிப் போய் விடுகின்றது.

கண்களுக்குக் கீழே கருவளையம் வராமல் இருக்க முதலில் தேவைப்படுவது ஆழ்ந்த தூக்கம். சிலர் பூனைத் தூக்கம் போடுவார்கள். ஒரு சின்ன சத்தம் கேட்டாலும் எழுந்து விடுவார்கள். உடம்பும், மனமும் ஓய்வு கொள்ள வேண்டுமானால் கனவு



வராத நல்ல தூக்கமாகத் தூங்கவேண்டும்.

ஆகையால் படுக்கும் முன்பு அன்றைக்கு நடந்த நல்ல விஷயங்களை மட்டும் நினைத்துக் கொண்டு தூங்குங்கள். நன்றாகத் தூங்கினால் உடம்பிற்குப் புத்துணர்வு, தெம்பு, சுறுசுறுப்பு வரும். முகம் பொலிவாகும். கருவளையம் போய்விடும்.

# திருமணத்தின் முன் நடந்த ஒத்திகை?

## மைக்கேல் ஜாக்சனின் ஒப்பந்தம்

முப்பத்தெட்டு வயதான பொப்இசைப் புயல் மைக்கேல் ஜாக்சன் கடந்த ஆண்டு தனது மனைவி லிசாவை விவாகரத்துச் செய்திருந்தார்.

லிசாவைக் காதலித்து மணந்த மைக்கேல் ஜாக்சனுக்கு ஒரு வருத்தம் இருந்தது. தமக்கொரு குழந்தையில்லையே என்பதுதான் அந்த வருத்தம்.

லிசாவுக்கும் மைக்கேல் ஜாக்சனின் போக்குப் பிடிக்கவில்லை. மைக்கேல் ஜாக்சன் பெண்கள் போன்ற மனநிலை கொண்டவர். லிசா அவரை வெறுக்க அதுதான் காரணம் என்று சொல்லப்பட்டது.

இந்நிலையில் இம்மாதம் 14.11.96 அன்று அதிரடியான அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார் மைக்கேல் ஜாக்சன்.



37 வயதான டெப்பிரோவ் என்னும் பெண்ணை மணந்துகொண்டதாக அறிவித்துள்ளார் மைக்கேல் ஜாக்சன். அதுமட்டுமல்ல மைக்கேல் ஜாக்சனின் குழந்தைக்கும் தாயாகப் போகிறார் டெப்பிரோவ். ஜாக்சனின் கரு டெப்பிரோவ் வயிற்றில் வளர்ந்து கொண்டிருக்கிறது என்னும் தகவலும் வெளியாகியிருக்கிறது.

கல்யாணத்துக்கு முன்னரே குழந்தை தயாராகி விட்டது. இருவரும் அவசரப்பட்டு விட்டார்களாக்கும் என்று நினைக்காதீர்கள். அதில்தான் இருக்கிறது விஷயம்.

ஏற்கனவே லிசாவை திருமணம் செய்தபோதும் குழந்தை பிறக்கவில்லை. அதனால் மைக்கேல் ஜாக்சனைப்பற்றி தப்பாகப் பேசுகிறார்கள்.

டெப்பிரோவை மணந்தபின்னும் குழந்தை பிறக்காவிட்டால் மைக்கேல் ஜாக்சனிடம்தான் ஏதோ கோளாறு என்ற பேச்சு ஏற்பட்டுவிடுமல்லவா?

அதனால்தான் டெப்பிரோவும் மைக்கேல் ஜாக்சனும் ஒரு ஒப்பந்தம் செய்தார்களாம்.

திருமணத்திற்கு முன்னர் ஒரு ஒத்திகை பார்த்து விடலாம். 'கரு' உருவாகிவிட்டால் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம் என்பது தான் ஒப்பந்தம்.

ஒத்திகையில் பூரண வெற்றி. டெப்பிரோவின் வயிற்றில் கரு வளரத் தொடங்கியது. அதனால் ஒப்பந்தப்படியே இருவரும் திருமணம் செய்துகொண்டனர்.

இந்த இரகசிய ஒத்திகை சமாச்சாரம் வெளியே தெரியாமல் இருப்பதற்காக டெப்பிரோவ் மைக்கேல் ஜாக்சனின் கருவுக்கு வாடகைத்தாயாக இருந்தார் என்று ஒரு புதுக்கதையை உருவாக்கியிருக்கிறார்கள்.

டெப்பிரோவ் மருந்துவமனை ஒன்றில் தாதியாக பணியாற்றி வந்தார். தோல் வியாதிக்காக மைக்கேல் ஜாக்சன் அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது தனியான அக்கறையோடு அவரைக் கவனித்தார் டெப்பிரோவ். கவனிப்பு காதலாக மாறியது. காதல் கரு சுமக்க வைத்தது. 'கரு' கல்யாணத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது வாழ்க மணமக்கள்!



# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AR

பெயர்:........................

முகவரி:........................

........................

கையொப்பம்:........................

**உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 30-11-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## மூதூர் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | எஸ். மேரி ஜோ குரூஸ் 64ம் கட்டை, சகாயபுரம், மூதூர். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# காதல் ஸ்பெஷல்

## 'லவ்' என்றால் என்ன?

'லவ்' என்றால் என்னவென்று சொல்லித் தெரியவேண்டியதில்லை.

'லவ்' என்ற வார்த்தைக்குள் எத்தனை அர்த்தங்கள் ஒளிந்து கிடக்கின்றன, என்று சொல்ல முடியுமா? இனி முடியும். இதோ பாருங்கள்:

'லவ்' என்ற வார்த்தையில் உள்ள எல்.ஓ.வி.இ.(LOVE) என்ற நான்கு ஆங்கில எழுத்துக்களுக்கும் தனித் தனிப் பொருள் உண்டு.

எல்-பார்க்க (L-LOOK) ஓ-கவனி (O-OBSERVE) வி- ஆராய்ந்தறிய (V-VERIFY) இ-அனுபவி (E-ENJOY) அப்பாடா! இனிமேல் முழு அர்த்தம் தெரியாமல் குழம்பமாட்டீர்கள் தானே?

### மொழிக்கொரு லவ்வு

'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்ற தமிழ் வார்த்தைக்கு ஆங்கிலத்தில் 'ஐ லவ் யூ'. நம்மவர்கள் கடல் கடந்து பரவிக்கொண்டிருக்கும் காலகட்டம் இது. வெளிநாடு செல்லும் நம்மவர்களுக்கு உபயோகமாகப்படும் என்ற நல்லெண்ணத்துடன் (?!) வேறு சில மொழிகளில் ஐ லவ் யூ என்பதற்கு உரிய வார்த்தைகள் சிலவற்றைத் தருகிறோம்.

* சீனா- வோ அய்னீ
* ஃபிரான்ஸ்-யே ட்ரமே
* இத்தாலி-டை வோக்லியோ பேனே.
* ஹங்கேரி-ஸெரெட்லக்.
* ரசியா-யா டெப்யா லையுட்ஸி யூ
* ஜெர்மனி-கிஷ் லையப் டிஷ்.



* டென்மார்க்- ஜெக் எல்ஸ் கெர்டிக்.
* ஹீப்ரு-அனி ஒஹோவ் ஓடாக்.
* இந்தோனேஷியா-ஸாஜா காணி ஸெபாலி.
* ஸ்பானிஷ்- நினி குபேண்டா.
* கிரீன்லாந்து- ஸ்-ஏகே போ
* ஜப்பான்-வாடகூஷி வகனாடாவோ அப்ஹீமாணி.

### 141-என்றால் போதும்!

I LOVE YOU இந்த ஆங்கில எழுத்துக்களை கணக்கிட்டு இதையே சுருக்கமாக 143 என ஒரு சூத்திரம் போல் சொல்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அதையே மேலும் சுருக்கி 141 என்றும் சொல்லமுடியும்.

அதாவது I LOVE YOU (YOU வுக்குப் பதிலாக 'U' எனக் குறிப்பிடலாம். அப்படிக் குறிப்பிட்டால் 141தான் வரும்.



படிப்பகம்

www.padippakam.com

## இன்று என் தாலாட்டு

ஆவணியில் வந்துதித்த ஆணிமுத்தே
ஆரணியே பூமகளே கண்ணுறங்கு
பூமணியே பொன்மகளே யாழினியே
பட்டுநிலா பார்த்தபடி கண்ணுறங்கு!

தேன்மொழியே செவ்விதழே சிறுமலரே
தாரணியே தூயவளே கண்ணுறங்கு
மான்விழியே மைதிலியே மலரிதழே
மாந்தளிரே மானுடமே கண்ணுறங்கு!

விண்பெருமை பேசுகின்ற மாந்தரிடை
வாழ்ந்திட நீ வந்ததென்ன சேய்நிலவே?
காண்பதெலாம் காசசெய்யும் நாட்டியமே
கண்டிட நீ காலமுண்டு கண்ணுறங்கு!

உத்தரத்து காற்றுவந்து தொட்டதுவோ
உள்ளமிக வெந்து நீயும் வெம்புகிறாய்?
நித்திரையே அற்றுவெந்து வாழ்பவர் நாம்
நித்திலமே மல்லிகையே கண்ணுறங்கு!

காசபணம் சீர்வரிசை கேட்பதற்கு
கண்மணியே உந்தனண்டை யார்வருவார்?
மோசமிவை மண்ணினின்றும் போயொதுங்கும்
மாண்புடன் நீ வாழ்ந்திடலாம் கண்ணுறங்கு!

கணனியிலே கைபதித்து கலைபுரிவாய்
கல்வியிலே கரைதொட நீ முனைந்திடுவாய்!
மனதினிலே அன்புவிழி திறந்திடுவாய்
மேன்மைகளுன உடனிருக்கும் கண்ணுறங்கு!!

மாவை-வரோதயன்.

## கண்ணில் விழும் சாம்பல்

கூந்தலை
துண்டித்திருந்தாலும்
எவ்வளவு பசுந்து நீ!
0–0
ஒவ்வொரு கிழமையும்
உன்–
மூக்கு கண்ணாடியில்
தாஜ்மஹாலின் முன்னுள்ள
தடாகத்தைப் பார்க்கிறேன்!
0–0
அந்த சட்டையும்
கொட்டான் பாவாடையும்
என்னமாத்தான்
எடுப்பாயிருக்கு......!
0–0
கொலுசு இல்லாத
சின்னப் பாதங்கள்...
நீ கடும் ஆள் தான்!
0–0
நீ முன் வரிசையில்
அமர்வது போல என்,
ஹிருதயத்திலும்...
0–0
அந்த–
'சோக்கு'துகள் போல
வாழ்க்கையில்–
என்னை உதிர்த்து
உன்னை எழுதுகிறேன்!
வாசித்துவிட்டு அழிக்க
அல்ல!
0–0

பருவம் வந்து பெய்த மழை,
நனைந்ததோடு–
காய்ச்சல் வரும்;
அது உனக்கு வந்திருக்கலாம்
இனி, எனக்கும் வரலாம்!
0–0
நான்
வாங்கிய கனவுகளை
நீ விற்றுவிட்டாய்!
0–0
மனசின் இடுக்குகளிலிருந்து
உன்–
ஞாபகங்களை பிய்த்து
இறந்ததாக எரித்துவிட்டேன்!
இப்போது
அவை சாம்பல்களாக
என் கண்ணில் விழுகின்றன!
0–0

அதனால்,
கண்கரித்து
அழுது வடிக்கின்றது...
கண்ணீரில் வரும்–
ஞாபகங்களில் மீண்டும்
உன்னை நேசிக்கிறேன்!
0–0
நீ–என் ஞாபகங்களை
எரிக்கவில்லை, ஆகவே,
அழவில்லை.
எரிக்காவிட்டால்
புதைத்திருக்க வேண்டும்!
அது–
பேயாக
உன்னை துரத்தும்!!
0–0

எம்.யே.தஸ்ரீப்,
அக்கரைப்பற்று.

## யார் காரணம்?

கிரிகட் ஆட்டம்
விறுவிறுப்பாய் இருந்தது:
இந்தியா வெற்றி பெற
கையைத் தட்டி விட்டேன்.
•••
நாட்டுப்பற்றுள்ள
நல்லவர் இருவர்
என்னைத் தட்டி–ஒரு
கேள்விகேட்டார்!
•••
"வாழ்வது இந்நாட்டில்
ஆதரவு அந்நாட்டிற்கா?"
வெட்கமாயிருந்தது எனக்கு
நியாயமான கேள்வி தானே அது...?
•••
மன்னிப்புக் கோரினேன்
அந்த மாமனிதரிடம்;
மணியோசை என்னை
திசை திருப்பியது.
•••
திரும்பிப்பார்த்தேன்:
தபால்காரர் என்னிடம்
நீண்ட கூடு ஒன்றை
நீட்டிச் சென்றார்.
•••
பிரித்துப்பார்த்தேன்:
பிறப்புச்சாட்சி பத்திரத்தின்
பிரதி ஒன்று அது.
வாசிக்கத் தொடங்கினேன்......
•••
வருத்தமாய் இருந்தது எனக்கு!
இந்நாடே என்னை
இந்திய தமிழன் என்றல்லவா
பதிவு செய்துள்ளது......!
•••
இப்போது எண்ணினேன்
நான் இந்தியாவை
ஆதரிப்பதற்கு–இந்த
நாடுதானே காரணம்....?
•••
நல்ல பல கேள்வி கேட்க
அந்த நல்ல மனிதரை தேடினேன்:
இல்லை அவர் அவ்விடத்தில்
இருக்கை மட்டும் தான் மிச்சம்!

ம.சண்முகராஜா, பதுளை.

## தேன் கிண்ணம்

## காதல் ஊழல்!

சத்தியவசந்தம்
சிதைந்தது
தேசத்திலா?
உன் வேசத்திலா?
**
விழி
வலைவீசி
என்னை
உன்சிறைக்குள்
சுவாசிக்கச் செய்தவளே!
காதல்
கவிதையா?
கழுதையா?
**
புன்னகை 'ரொக்கட்'
அனுப்பி
என்
இதய தளத்தை
அழித்தவளே!
காதல் சோகம்
சிலந்தி வலையா?
சிற்பியின் சிலையா?
**

வார்த்தை வேர்களால்
என்
உணர்வுக்குள் ஊடுருவி
உயிரில்
அரங்கேறியவளே!
உன் இதயம்
கரும்பா?
வேம்பா?
**
என் கனவுகளை
கட்டியிழுத்து
இரவுத் தொட்டிலுக்குள்
என் கட்டிலை
கவிதையாக்கியவளே!
உன் நினைவுகள்
அன்பா?
அம்பா?
**
என் இதயத்தை
'இண்ட நெற்' ஆக்கி

அதற்குள்
வசித்து
குருதியோடு கலந்தவளே!
உன் ஆசை
தேனா?
தேளா?
**
என் உயிரோடு பேசி
உன் உருவத்தை
அதில் பதித்து
என் உயிரை
புதுப்பித்தவளே!
நீ
நீரா?
நெருப்பா?
**
காதல் பூவை
என் சோலையில்
மலர வைத்து
தென்றலாக
எனக்குள் நுழைந்தவளே!
உன் நாமம்
தேவதையா?

தீ வதையா?
**
நீ
காதல் ஊழல்...!
என் புல்லாங்குழலாக
நீ!
இல்லை:
போலிக்குழலான
நீ
தீ!
**
நீ
வைத்த தீயில்
எரிவது
காதல் மட்டுமல்ல;
என்
கற்பனையுந்தான்!

நிந்ததாசன்.

## யாழ் சென்ற போது....

சப்பாத்தி முள்ளின்
விளைச்சலால்
சரியாகத் தெரியாத
ஒற்றையடிப் பாதை.
▫▫
பாசி பிடித்த
படலை.
▫▫
பழுத்து வீழ்ந்த
குருத்தோலை.
▫▫
கறையானுக்கு
இரையான
அம்மாவின்
கடைசிக்காலக்
கட்டில்.
▫▫
வாழைத்தோட்ட
வாய்க்காலுக்கருகில்
வாடிக்கிடந்த
பலாமரம்.
▫▫
இடிபாடுகளின்
நடுவில்
இரண்டாகக் கிடந்த
சீனியப்புவின்
மாட்டு வண்டில்.
▫▫
சோலையாக
இருந்த
எங்களின் சொத்து
எங்கே?
▫▫
சொத்து மட்டும்
அல்ல,
சொந்த மண்ணும்....?

யாழ்-ஞானகணேசன்





கட்டம் 1



கட்டம் 2

↑ முதன் முதலாக கம்பியூட்டரில் டிசைன் செய்து பார்க்கப்பட்ட படம்.

→ கமலுக்கு மேக்-அப் டெஸ்ட் செய்து பார்த்தபடம்.



கட்டம் 3

கமல் மாமி

## அவர்–அவள் ஆனது

அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்ட மே-அப் சாதனங்கள் மூலம் மேக்-அப் போட்டபின் அசத்தலான தோற்றம் வந்துவிட்டது. கமல் அசல் மாமியாகவே மாறிவிட்டார். அதே கெட்டப்போடு, தமிழக முதல்வர் கலைஞர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரோடு புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.

படப்பிடிப்பில் மனோரமா, கே.ஆர்.விஜயா, விஜயகுமாரி ஆகியோருடன் கமல் மாமி. நன்றாகப் பார்த்துச் சொல்லுங்கள். மாமிதானே அழகாகத் தெரிகிறார்.



## இந்த வாரம் உங்கள் பலன்

(24.11.96 தொடக்கம் 30.11.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: — சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- மனக்கிலேசம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 3 | மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, இனசன நன்மை. | பி.ப. | 3 | மணி |
| சனி- தொழில் விருத்தி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, காரியக்கேடு. | பி.ப. | 2 | மணி |
| சனி- பிரயாண மிகுதி, தொழில் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- குடும்ப நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பகல் | 11 | மணி |
| புதன்- பிரயாண மிகுதி, தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, அந்நியர் பகை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணச் செலவு. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, காரிய சித்தி. | மு.ப. | 10 | மணி |
| சனி- கடன் தொல்லை, மனஸ்தாபம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயான மிகுதி, கடன் தொல்லை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- காரிய சித்தி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| சனி- கடன் தொல்லை, மனக்கிலேசம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### நவக்கிரக சஞ்சாரம்

விருட்சிகம் - சூரியன், புதன்.
தனு - வியாழன்.
கும்பம் - சனி.
மீனம் - கேது.
சிம்மம் - செவ்வாய்.
கன்னி - இராகு.
துலாம் - வெள்ளி.

★ சந்திரன்- மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கடன் தொல்லை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், தொழில் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தேகசுக நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| சனி- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- அந்நியர் பகை, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| புதன் - இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், கடன் தொல்லை. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்: — சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், கடன் தொல்லை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- உறவினர் உதவி, கௌரவம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- தொழில் நஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| சனி- மன மகிழ்ச்சி, அந்நியரால் உதவி. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### தனு: — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, அந்நியர் சகவாசம். | பி.ப. | 3 | மணி |
| புதன்- கடன் படல், பிரயாண மிகுதி. | பகல் | 12 | மணி |
| வியாழன்-தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- காரிய நஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணச் செலவு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| சனி- செலவு மிகுதி, பிரயாண மிகுதி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- குடும்ப சுகம், காரியானு கூலம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, பிரயாண மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், பயனுள்ள செயல். | பி.ப. | 3 | மணி |
| புதன்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 | மணி |
| சனி- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கன்னி: — சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் விருத்தி, கௌரவம். | பி.ப. | 3 | மணி |


அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4



படிப்பகம்

www.padippakam.com





## விடியற் காட்சி

காலை இளங்குயில் பாடுதே-அது
கதிரவன் வரவைத் தேடுதே!
சோலை இருள் மெல்ல விலகுதே-எங்கும்
சுடரொளிக் கதிர்கள் பரவுதே!

வாலைக்கிளப்பிக் கன்று ஓடுதே-அதை
வரச் சொல்லித் தாய்ப்பசு அழைக்குதே!
பாலைச் சுரந்து அது கொடுக்குதே!
-நன்றாய்ப்
பருகிக் கன்று அது ருசிக்குதே!

தேனுக்காய் வண்டுகள் அலையுதே
-உயர்ந்த
தென்னையில் கிளிகளும் கத்துதே!
மீன்களும் ஓடையில் பாயுதே-காட்டில்
மிருகத்தின் ஒலிகளும் கேட்குதே!

கூடிச் சிறுவர்கள் போவதும்-இவர்
குதித்து விளையாடி மகிழ்வதும்
வேடிக்கையான நற் காட்சியே- நாம்
விடியலில் காண்கின்ற காட்சியே!

காரைதீவூர், சின்ன ராசராஜன்.

அன்பென்று கொட்டு முரசே!-அதில்
ஆக்கமுண்டா மென்று கொட்டு!
துன்பங்கள் யாவுமே போகும்-வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனால்!

-சுப்பிரமணிய பாரதியார்.

## எது புதையல்?

### பாப்பா முரசு சிறுகதை

ஓர் ஊரில் ஒரு பணக்காரர் வசித்து வந்தார். அந்த ஊரில் அவருக்கு ஏராளமான நிலபுலன்கள் இருந்தன. அவருக்கு மூன்று மகன்கள்.

அந்த மூவரும் மகா சோம்பேறிகள். வேளா வேளைக்குச் சாப்பிட்டுக் கொண்டு, பொறுப்பில்லாமல் ஊர்சுற்றிக்கொண்டு திரிவதே மூவரினதும் வேலையாகும்.

இவர்களது நடவடிக்கைகளால் பணக்காரருக்கு ஒரே கவலை. அந்தக் கவலையினால் அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டுப் படுத்த படுக்கையானார்.

ஒரு நாள், அவர் தனது மூன்று மகன்களையும் அருகே அழைத்து,

"என் பிள்ளைகளே! இன்னும் சிறிது நேரத்தில் நான் இறந்து விடுவேன்... நான் இறப்பதற்கு முன் உங்களிடம் ஒரு இரகசியத்தைச் சொல்லப்போகிறேன்..." என்றார்.

மூவரும் தந்தையை மிக ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

"நமது நிலத்தில் புதையல் இருக்கிறது. நான் இறந்த பிறகு தோண்டி எடுத்துக் கொள்ளுங்கள்," என்று சொல்லி விட்டு இறந்து போனார்.

எந்த இடத்தில் புதையல் இருக்கிறது என்று தந்தை கூறவில்லையே என்று மூன்று மகன்களும் கவலைப்பட்டனர்.

"இப்போது புதையலைப் போய் எங்கு தேடுவது?" என்று மூன்றாவது மகன் கேட்டான்.

"நிலத்தில் என்று மட்டும்தான் கூறியிருக்கிறார். எனவே நமது நிலம் எங்கெங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் தோண்டிப் பார்த்து விடுவோம்," என்றான் மூத்த மகன்.

அந்த யோசனையை மற்ற இருவரும் ஏற்றுக் கொண்டு மூவரும் மண்வெட்டி, அலவாங்குகளை எடுத்துக்கொண்டு வயல்களுக்குள் இறங்கினார்கள்.



இரவு, பகல் என்று பாராமல் நிலத்தைத் தோண்டினர். வியர்வை ஆறாக வழிந்தது. அந்த அளவுக்கு அவர்கள் உடலை வருத்தினார்கள். அவர்களுக்குப் புதையல் ஒன்றே குறியாக இருந்தது.

அவர்களுக்குச் சொந்தமான நிலங்களில் பாதிக்கும் மேல் தோண்டிப் பார்த்து விட்டனர். ஊர் மக்களுக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு நாளும் சோம்பேறிகளாக ஊர் சுற்றிக் கொண்டு திரிந்தவர்கள் கடுமையான உழைப்பாளிகள் ஆகிவிட்டார்களே? இவர்களுக்கு என்ன நடந்தது என்று அறிந்து கொள்ள விரும்பினார்கள்.

பெரியவர் ஒருவர், அம்மூவரிடமும் வந்தார்.

"குழந்தைகளே!... வயலில் என்ன தேடுகிறீர்கள்?" என்று வினவினார்.

"எங்கள் தந்தை இறக்கும் முன், எமது நிலத்தில் புதையல் இருப்பதாகக் கூறினார். அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம்" என்றான் இரண்டாவது மகன்.

அதைக் கேட்டு விட்டுச் சிரித்த பெரியவர், அவர்களைப் பார்த்து,

"குழந்தைகளே! இந்த நிலத்தில் புதையல் இருப்பதாக உங்கள் தந்தை கூறியது தங்கப் புதையலை அல்ல. தானிய விளைச்சலைத் தான் அவர் புதையல் என்று கூறியுள்ளார். உங்களை வயலில் இறங்கிக் கடுமையாக உழைக்கச் சொன்னால் நீங்கள் அதைக் கேட்க மாட்டீர்கள் என்றுதான் மறைமுகமாகப் புதையல் என்று கூறியுள்ளார்.

இப்போது கூட ஒன்றும் குறைந்து விடவில்லை. நீங்கள் தோண்டிய நிலங்கள் உழுதது போல் ஆகிவிட்டது. இதில் நீங்கள் தானியங்களைப் பயிரிட்டு அமோக விளைச்சலைப் பெறுங்கள். இதுவும் ஒரு புதையல் தான்" என்று கூறினார்.

அவர்களும் அதனை ஆமோதித்தார்கள்.

இப்போது மகன்கள் மூவரும் சோம்பேறிகளாக இல்லாமல் வயலில் கடுமையாக உழைக்கிறார்கள்.

## வாரம் ஒரு நாடு

### சியர்ரா லியோன்



தலைநகர் - ஃபிரீ டவுன்
பரப்பு - 71,740 சதுர கிலோ மீட்டர்
மக்கள் தொகை- 44 இலட்சம்
மொழி - ஆங்கிலம், பழங்குடி மொழிகள்
எழுத்தறிவு - 24%
சமயம் - இஸ்லாம், கிறிஸ்தவம், பழங்குடி சமயம்.
நாணயம் - லியோன்
தனி நபர் வருமானம் - 140 டொலர்.

**அமைவிடம்:**

சியர்ரா லியோன் (சிங்கத்தின் சிகரம்) என்னும் பெயர் ஆரம்பத்தில் போர்த்துக்கீய மாலுமிகளால் இப்பகுதிக்குக் கொடுக்கப் பட்டது. எப்போதும் இதன் கடற்கரை அருகில் உள்ள சிகரங்களில் பயங்கரமான ஓசை கேட்டுக் கொண்டிருந்ததே இப் பெயர் வரக்காரணமாகும்.

மேற்கு ஆபிரிக்க முனையில் கினிக்கும், சைபீரியாவுக்கும் நடுவே இந்நாடு அமைந்துள்ளது.


**வரலாறு:**

பிரிட்டனின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த சியர்ரா லியோன், 1961ல் சுதந்திரமடைந்தது. அதிபரை அசெம்பிளி தெரிவு செய்கிறது.

**பொருளாதாரம்:**

இதன் பொருளாதாரம் விவசாயத்தையும், சுரங்கத் தொழிலையும் சார்ந்தது. முக்கிய உற்பத்திப் பொருட்கள்- வைரம், இரும்புத்தாது, கொக்கோ, கோப்பி, கோலா ஆகியன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30.11.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 168
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 166

பரிசுக்குரியவர்:
பி. குகதீசன்,
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ். பிரதீப், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-4. | ஏ.முஹம்மது அஸாம், சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| ஏ.எம். றிபாஸ், அல்-மனார் வீதி, மருதமுனை-02. | செல்வி சர்மி சந்திரமோகன், அ.த.க. பாடசாலை, கல்நாட்டினகுளம், வவுனியா. |
| எஸ். அர்ச்சனா, புனித சிசிலியா மகாவித்தியாலயம், மட்டக்களப்பு. | எஸ். முரளிதாஸ், இராமகிருஷ்ணமிஷன் மகா வித்., அக்கரைப்பற்று. |
| செல்வன் ஐ. இப்திகார், மடவளை பஸார், மடவளை. | கே. ஷனாஸ் மொஹமட், இராகலை வீதி, பலாங்கொடை. |
| எம்.எம். பறூஜான், கரு/ஜீலான் மத். க. ஹேனமுல்லை, பாணந்துறை. | ஜே. அமீன், ஸம் ஸம் வீதி, மருதமுனை. |

## விளக்கெண்ணெய்

*** விளக்கெண்ணெய் எதிலிருந்து கிடைக்கின்றது?**

ஆமணக்கு விதைகளில் இருந்து.

*** இந்த ஆமணக்கு விதைகளைச் சாப்பிடலாமா?**

விதைகளைப் பச்சையாகச் சாப்பிடக் கூடாது. அவை விஷத்தன்மை உடையவை. ஆனால் காய்ந்த விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் விஷமற்றது.



*** வீடுகளில் விளக்கெண்ணெயை எதற்குப் பயன்படுத்துகிறார்கள்?**

பல மருந்துப் பொருட்களில் இது பயன்படுத்தப்படுகிறது. பண்டைய எகிப்தியர்கள், தென் அமெரிக்க மக்கள் இதைப் புனித மருந்தாகக் கருதினார்கள். தெற்காசிய நாடுகளில் விளக்கு எரிக்க, கண்கள் பொலிவு பெற, மலச்சிக்கலை நீக்க இது உபயோகிக்கப்படுகின்றது.

*** மருந்துப் பொருட்களுடன் வேறு எவ்வகைப் பொருட்களை இதன் மூலம் தயாரிக்கிறார்கள்?**

பெயின்ட், வார்னிஷ், சாயங்கள் தயாரிப்பதற்கும் விளக்கெண்ணை பயன்படுகிறது.

*** ஆமணக்கு அதிகமாக எங்கு உள்ளது?**

தெற்காசியாவிலும் வெப்ப வலய நாடுகளிலும் இது அதிகம் உள்ளது.

## பிரெயில் முறை

கண்பார்வை இழந்தவர்களால் படிக்க இயலாது. எனவே அவர்கள் படிப்பதற்கு ஏற்றவாறு பலவகை எழுத்து முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மிகச் சிறந்தது பிரெய்ல் முறை ஆகும். இம்முறையை லூயிஸ் பிரெய்ல் என்னும் ஃபிரெஞ்சு நாட்டுக்காரர் கண்டுபிடித்தார்.



கண்பார்வை இழந்தவர்கள், கை விரல்களால் தடவி மேடுபள்ளங்களை உணர்ந்து கொள்ள முடியும். அதைப் போன்றுதான் காகிதங்களில் கையால் தடவிப் படிக்கும்படி எழுத்துக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இம்முறையைக் கொண்டு கண்பார்வையற்றவர்கள் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்கிறார்கள்.

லூயிஸ் பிரெய்ல் தம் மூன்றாம் வயதில் கண்பார்வையை இழந்தார். பாரிஸில் உள்ள கண்பார்வையற்றோர் கல்வி நிலையத்தில் கல்வி பயின்றார். பின்னர் அங்கேயே ஆசிரியரானார்.

அந்நிலையத்தில் சார்ள்ஸ் பார்பியர் என்பவர் கண்டுபிடித்த முறையின் படியே கண் பார்வையற்றவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வந்தது.

அந்த முறையில் பல குறைகள் இருந்தன. பிரெய்ல் அக்குறைகளை நீக்கித் திருத்தி அமைத்தார். அவர் பெயராலேயே புதிய முறைக்கும் இந்தப் பெயர் ஏற்பட்டது. இப்போது எல்லா நாடுகளிலும் பிரெய்ல் முறையையே பின்பற்றுகிறார்கள்.

## பிளேட்டோ



உலகப் புகழ்பெற்ற கிரேக்க தத்துவ ஞானிகளில் பிளேட்டோவும் ஒருவர். இவர் சோக்ரட்டீஸ் என்னும் தத்துவஞானியின் மாணவர். அரிஸ்ரோட்டில் என்ற தத்துவ ஞானியின் ஆசிரியர்.

ஏதென்ஸ் நகரத்தில் ஒரு செல்வக் குடும்பத்தில் பிளேட்டோ பிறந்தார். இவர் சிறு வயதிலேயே இசை, இலக்கியம், ஓவியம், தத்துவம் ஆகியவற்றைக் கற்றார். 20வது வயதில் சோக்ரட்டீஸிடம் மாணவனாகச் சேர்ந்தார்.

ஆனால் அரசியல் காரணமாக சோக்ரட்டீஸ் கொல்லப்பட்டதும், இவர் அரசியலை வெறுத்துத் தத்துவத்துறையில் ஈடுபட்டார்.

கி.மு.387ல் அக்கடமி என்னும் பல்கலைக் கழகத்தைத் துவக்கினார். இதைத் தத்துவ விசாரணைக்கும், விஞ்ஞான ஆராய்ச்சிக்குமான ஒரு நிலையமாக வளர்த்தார். இங்கு அரிஸ்ரோட்டில் போன்ற சிந்தனையாளர்களை உருவாக்கினார்.

பிளேட்டோ சிறந்த தத்துவஞானியாகவும், கவிஞராகவும் விளங்கினார். பல நூல்களையும் எழுதினார். அவை பெரும்பாலும் உரையாடல்களாக அமைந்துள்ளன. இவற்றில் தம் கருத்துக்களை சோக்ரட்டீஸ் கூறுவது போல வெளியிட்டுள்ளார். உளவியல், கல்வி, அரசியல் பற்றியும் இவற்றில் ஆராய்ந்துள்ளார்.


'குடியரசு' என்னும் உரையாடல் நூலில், இவர் தாம் கனவு கண்ட இலட்சிய அரசு ஒன்றைச் சித்தரித்துள்ளார்.

இன்றைய ஐரோப்பிய தத்துவக் கொள்கைகளில் பெரும்பகுதி பிளேட்டோவின் அடிப்படையில் உருவானதாகும். ஐரோப்பிய நாகரிகத்தில் பிளேட்டோவின் கருத்துக்கள் இடம்பெறாத எந்தத் துறையும் இல்லை எனலாம்.



படிப்பகம்

www.padippakam.com






2

# நாவல் உலகின் நவீன எழுத்துவேந்தன்

## — சுஜாதா —

### கடந்த வாரம்

அவர்கள் இளம் காதலர்கள்
ஆனந்த்-மல்லிகா.
இருவரும் சந்தோசமாக இருக்க
தனியான மலைப்பகுதிக்குச் சென்றனர்.
அங்கே புதர் ஒன்றுக்குள்
ஒரு பிணம் கிடக்கிறது.
ஆனந்த் பொலிசாருக்கு அறிவிக்கிறான்.
பொலிசார் வருகின்றனர்.
அது ஒரு ஆண் பிணம்.
பர்ஸில் பெயர் முகவரி
போன் நம்பர் இருக்கிறது.
அந்த நம்பருக்கு போன் செய்கிறார்கள்.

இனி.....

"என்ன விஷயம்?"

"உங்கள் வீட்டுக் கார் நம்பர் என்ன?"

"எந்தக் கார்? இரண்டு கார் இருக் கிறது."

கீழே தண்ணீர்த் துளிகள் அவள் பாதங்கள் மூலம் வழிந்து மெதுவாக ஒன்று சேர்ந்து திரண்டு கொண்டிருந்தன.

"ஃபியட்."

"டி.எஸ்.கே. 2520. ஏன், ஏதாவது விபத்தா?"

"நீங்கள் பேசுவது....?"

"ஸ்ரீமதி ஷர்மா."

"மிஸஸ் ஷர்மா, நீங்கள் உடனே விலிங்டன் ஆஸ்பத்திரிக்கு வாருங்கள். மிக முக்கியமான விஷயம்."

"என்ன! என்ன, சொல்லுங்களேன்?"

"உங்கள் கணவர் அந்தக் காரில் வெளியே சென்றாரா?"

"ஆம். ஹரியானா பக்கம் போயிருக் கிறார். நேற்றுக் கிளம்பினார். நாளை மறுநாள் வருகிறேன் என்..."

"மிஸஸ் ஷர்மா, ஐம் ஸாரி, நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்தக் கார் அப்பர் ரிட்ஜ் ரோடு அருகில் பிரியும் ஒரு மண்பாதையில் ஒதுக்குப்புறமாக நின்றிருந்தது. அந்த இடத்திலிருந்து சுமார் ஒரு ஃபர்லாங் தூரத்தில் ஓர் அடர்த்தியான தனியான புதரில் நாங்கள் ஓர் உடலைப் பார்த்தோம். அது உங்கள் கணவராக இருக்கக்கூடும்."

"உடல் என்றால்! உடல் என்றால்!"

"இறந்த உடல்."

"ஓகாட்! காட்!"

"மிஸஸ் ஷர்மா, நாங்கள் உங்களுக்கு இந்தத் துக்கமான தகவலையும் தெரிவித்து உங்களுக்குச் சிரமம் கொடுக்க நேரிடுவதற்கு மிகவும் வருந்துகிறோம். நீங்கள் விலிங்டன் ஆஸ்பத்திரிக்கு வந்து உடலை அடையாளம் காட்ட வேண்டும். அல்லது தெரிந்தவர்கள் யாரையாவது அனுப்ப..."

"நானே வருகிறேன். அது அவராக இருக்காது; இருக்கக் கூடாது?"

நாங்கள் இன்னும் சில நிமிடங்களில் உங்கள் வீட்டுக்கு ஜீப் அனுப்பு..."

மிஷின் பொம்மைபோல டெலிஃபோனை அவள் வைத்தாள்.

டைமண்ட் ராஜாவை வைத்தான் பாஸ்கர்-ஷர்மாவின் அந்தரங்கக் காரியதரிசி-விழவில்லை.

ராணியை வைத்தான். விழவில்லை.

ஜாக்கியை ம்ஹூம்....

10'ஐ வைத்ததும் ஏஸைப் போட்டுப் பிடித்துக் கொண்டான் பாஸ்கர். என்ன அபாரமாக ஆடுகிறான் இந்த பாஸ்கர்!

சகாவிடம் இருக்கும் சீட்டு அத்தனையும் கண்ணாடி போல அவனுக்குத் தெரிகிறது. பார்ட்னரிடம் இனி டைமண்ட் இருக்காது!

பாஸ்கர் நேராகத் தன் ஸ்பேட் சீட்டுக்களை ஆடினான். மூன்றாம் தடவை ராணியை வைத்ததும் ஜாக்கி பத்து இரண்டும் விழுந்தன. சரியாக எண்ணி வைத்தாற்போல் ஒன்பது பிடி-மூன்று நோ ட்ரம்ப் பிடித்துக்கொண்டு பாக்கி சீட்டுக்களைக் கவிழ்த்துப் போட்டான்.

பாஸ்கர் எப்போதுமே இப்படித்தான். எடுத்துக் கொண்ட காரியத்தை அளவாக முடிப்பான். கச்சிதமாக முடிப்பான், அதிகம் பேசமாட்டான்.

பாஸ்கர் அடுத்த ஆட்டத்துக்காகச் சீட்டுக்களை வழங்கிக் கொண்டிருக்கும் போது வீட்டுக்கு வெளியே காரின் ஹார்ன் சப்தம் கேட்டது.

அது கூப்பிட்ட சிறிய 'ஹாங்கி'ல் ஓர் அவசரம் தென்பட்டது. அந்த ஹார்ன் சற்று வித்தியாசமான ஹார்ன். முதலாளியின் பெரிய மெர்ஸிடிஸ் காரின் ஹார்ன்.

பாஸ்கர் தன் நண்பர்களிடம், "எக்ஸ்க்யூஸ் மி" என்று சொல்லிவிட்டு அறைக்கு வெளியே வந்து பால்கனியிலிருந்து கீழே எட்டிப் பார்த்தான்.

டிரைவர் நின்று கொண்டிருந்தான். இவனைப் பார்த்ததும், "உடனே வாங்க" என்றான்.

டிரைவரின் முகத்தில் கலவரம் இருந்தது. பாஸ்கர் சட்டை மாற்றிக் கொண்டான். செருப்பில் கால்களைச் செருகிக்கொண்டு படிகளில் சரிந்து கீழே வந்த போது கூடச் சட்டை பட்டன்களைப் போட்டு முடிக்கவில்லை அவன்.

"என்ன?"

"முதலாளி இறந்து போய்விட்டார்!"

"என்னது? எப்படி? எங்கே?"

"காரில் ஏறுங்கள், சொல்கிறேன். அம்மா ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்."

பாஸ்கர் காரில் பாய்ந்தான். அந்த மெர்ஸிடிஸ், டிரைவரின் விரல் திருப்பத்தில் ஒடிந்து உயிர் பெற்றுச் சீறிச் சுழன்று, எய்த அம்புபோல் புறப்பட்டது.

ஆஸ்பத்திரி.

இன்ஸ்பெக்டர் ராஜேஷ் உடல்மீதிருந்த வெள்ளைத் துணியை விலக்கினார்.

அனிதா பார்த்தாள். "ப்ளீஸ், ப்ளீஸ், மூடிவிடுங்கள் ப்ளீஸ்," என்று குனிந்து கொண்டாள். "எவ்வளவு காயம்.... எவ்வளவு காயம்!"

"மிஸஸ் ஷர்மா, இந்த உடல்..."

"என் கணவர்தான்," என்று விலகி ஒரு மூலைக்குச் சென்று புடவைத் தலைப்பில் முகம் புதைத்து அழுதாள்.

அந்த வெண்துணி மறுபடி ஷர்மாவின் உடலை மூடியது.

பாஸ்கர் வந்தான், முதலாளிதான் என்று அடையாளம் சொன்னான்.

அனிதா திரும்பிச் சென்று காரில் ஏறிக்கொண்டாள். அவள் கன்னங்கள் சிவந்திருந்தன. வீங்கி இருந்தன. ஸாரி தலையையும் முகத்தில் பெரும் பகுதியையும் மூடி இருந்தது. நெற்றிப் புருவத்தின் மத்தியில் விரலை அழுத்திக் குனிந்து கொண்டு காத்திருந்தாள் புறப்படுவதற்கு.

காருக்கு வெளியே பாஸ்கரும் இன்ஸ்பெக்டர் ராஜேஷும் நின்று கொண்டிருந்தார்கள். கார் நியூட்ரலில் சீராக உறுமிக் கொண்டிருக்க பாஸ்கர், "நேராக வீட்டுக்குப் போ," என்றான் டிரைவரிடம். "மீனாட்சியை வரச் சொல்லியிருக்கிறேன். டாக்டர் சாரையும் வரச்சொல்லியிருக்கிறேன். நீங்கள் ரெஸ்ட் எடுத்துக்கொள்ள வேண்டும். நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் வருகிறேன். அவர்கள் வீட்டில் இருப்பார்கள்," என்றான் அனிதாவிடம்.

அனிதா ஒன்றும் பேசவில்லை. குனிந்த தலை நிமிரவில்லை. கார் சென்றது. அதன் சிவப்பு விளக்குகள் ஒரு தடவை பிரகாசமாக விழித்துவிட்டுக் கோபம் தணிந்தன.

இன்ஸ்பெக்டரிடம், "ஷி இஸ் வெரி மச் அப்ஸெட்" என்றான் பாஸ்கர்.

"ஷி இஸ் யங்," என்றார் ராஜேஷ்.

"இன்ஸ்பெக்டர் ஸார், என் முதலாளி நேற்று முதல் நாள் காரில் கிளம்பியபோது அவரிடம் நிறையப் பணம் இருந்தது. எவ்வளவு பணம் என்பது திருமதி ஷர்மாவுக்குத் தெரிந்திருக்கலாம்."

"எங்கே சென்று கொண்டிருந்தார்?"

"ஹிஸ்ஸாருக்கு. அங்கே அவருடைய ஃபாக்டரி இருக்கிறது."

"தனியாகச் சென்றாரா?"

"இல்லை. அவருடன் கோவிந்தும் காரில் சென்றிருக்கிறான்."

"கோவிந்த்! யார் அது?"

"அவருடைய வேலைக்காரன்."

"கோவிந்த் எங்கே?"

"எங்கே?"

✱✱✱

47 வஸந்த் விஹார்.

பாலம் விமான நிலையத்திற்குச் செல்லும் பாதையில் புதிய பணக்காரர்களின் காலனி வஸந்த் விஹார். இளம் ஆர்க்கிட்டெக்ட்கள் தத்தம் இஷ்டப்படி அமைத்துக் கட்டிய விதம்விதமான வீடுகள். இங்கே நிற்பவர்கள் இந்தியா ஓர் ஏழை நாடு என்று சொன்னால் நம்பமாட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் ராஜேஷ் வஸந்த் விஹாரில் ஷர்மாவின் வீடான 47-ம் எண்ணை அடைந்தபோது அப்படித்தான் நினைத்தார். இரண்டு மூன்று பேர் வசிக்க இவ்வளவு பெரிய வீடா?

மாடிவீடு. மாடி என்றால் நவீன மாடி. கான்க்ரீட் சதுரங்கள். பச்சைக் கொடிகள். நேராக ஓர் அவுட் ஹவுஸ். வேலைக்காரர்களுக்குத் தனியான சிறிய வீடுகள். இரண்டு கார் ஷெட். தற்காலிகமாகக் கார் நிற்பதற்குக் கான்க்ரீட் நீட்டல். முழுவதும் கண்ணாடிக் கதவுகள். இரட்டைக் கண்ணாடி. செங்கல் சிவப்பில் திரைகள். வந்திருப்பவர் வாசலில் காத்திருக்க அழகான, நவீனமான நாற்காலிகள். நடுவே மேஜை. மேஜைமேல் பத்திரிகைகள்.

தன் வரவை வேலைக்காரனிடம் சொல்லி விட்டு அந்தப் பத்திரிகைகளில் ஒன்றைப் புரட்டினார் ராஜேஷ்.

ஒரு பக்கத்தில், அனிதா அனிதா அனிதா என்று கையெழுத்துப் போட்டுப் பழகியிருப்பது தெரிந்தது. அனிதா. அனிதா ஷர்மா, என்ன வயது? 28 இருக்கலாம் அவளுக்கு. அவளை ஆஸ்பத்திரியில் மிக வினோதமான சூழ்நிலையில் முதலில் சந்தித்தார். அவள் கணவன் இறந்த சூழ்நிலையில் திகட்டும் சோக சந்தர்ப்பத்திலும் அவள் அழகு, உடலழகு, ஆஸ்பத்திரி சிப்பந்திகளைத் தடுமாற வைத்திருக்கிறது. கண்கள், பார்வைகள் அவள் மேல் தயங்கின. டாக்டர்கள் மூக்குக் கண்ணாடியைத் துடைத்து அணிந்து கொண்டார்கள். அனிதா.....

"குட்மார்னிங் இன்ஸ்பெக்டர்!" கலைத்தது பாஸ்கர்.

நேரம்: மார்ச்சுவரி சந்திப்புக்கு மறு தினத்துக்கு மறு தினம்.

"குட்மார்னிங் மிஸ்டர் பாஸ்கர். திருமதி ஷர்மா எப்படி இருக்கிறார்?"

"பெட்டர். அந்தக் கோவிந்தைப் பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா?"

"இல்லை. நீங்கள் கொடுத்த வர்ணனையை வயர்லஸில் எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியிருக்கிறோம். எங்கள் ஏ.எஸ்.பி, இந்தக் கேஸைக் கவனிக்கிறார். மத்தியானம் இங்கு வருவார். என்னைச் சில கேள்விகள் கேட்டு வரச் சொன்னார்."

"கேளுங்கள்."

"திருமதி ஷர்மாவைக் கேட்க வேண்டும்."

"நானே இன்னும் அவரைப் பார்க்கவில்லை. மாடியிலேயே அடைந்து கிடக்கிறார்கள். சரியாகச் சாப்பிடவே இல்லை. இந்தச் சம்பவம் அவரை மிகவும் பாதித்திருக்கிறது. எதற்கும் மேலே போய்ப் பார்த்து வரச் சொல்கிறேன். ராம்!"

ராம் வந்தான். மீனாட்சியைக் கூப்பிடச் சொன்னான். மீனாட்சி வந்தாள். பாஸ்கர் தன் பையிலிருந்த சிறிய நோட் புத்தகத்தை எடுத்து, பால்பாயிண்ட் பேனாவில் ஒரு செய்தி ஒரு பக்கத்தில் கிறுக்கி, "இதை அம்மாவிடம் கொடு" என்றான்.

அவள் சென்றாள்.

"யார் இந்தப் பெண்?" என்றார் ராஜேஷ்.

"திருமதி ஷர்மாவிற்கு உதவியாக இருக்கிறாள். ஏழைப் பெண். பெரியவருக்குத் தூரத்து உறவு."

"மிஸ்டர் பாஸ்கர், இந்தக் கோவிந்த் என்பவனைப்பற்றி இன்னும் சில தகவல்கள் வேண்டும். அவன் இங்கே என்ன வேலை செய்து கொண்டிருந்தான்?"

"பெரியவருக்கு உதவியாளராக இருந்தான். அவருடனேயே இருப்பான். உடம்பு பிடித்து விடுவான். ஷூ பாலிஷ் போடுவான். சட்டை எல்லாம் எடுத்து வைப்பான்."

"எவ்வளவு நாட்களாக அவன் வேலையில் இருக்கிறான்?"

"நான் இந்த வீட்டில், சேர்ந்து எட்டு வருஷம் ஆகிறது. அதற்கு முன்பிருந்தே-ஏன் சிறுவயதிலிருந்தே இருக்கிறான் என்று சொல்லியிருக்கிறார்கள்."

"அவன் எங்கே தங்கி இருந்தான்?"

"இங்கே தான், அவுட் ஹவுஸில்."

"நான் அந்த இடத்தைச் சோதனை போடவேண்டும்."

"தாராளமாக."

"அப்புறம் மற்றொரு விஷயம்." இன்ஸ்பெக்டர் தன் குறிப்புப் புத்தகத்தை எடுத்து விரலை நாக்கில் தொட்டுச் சில பக்கங்களைப் புரட்டினார். "ஒ எஸ். பணம்... அன்று காரில் சென்றபோது ஷர்மாவிடம் நிறைய இருந்தது என்றீர்களே? அதை நிரூபிக்க முடியுமா?"

"நான் தான் பாங்கில் போய் முதல்நாள் பதினான்காயிரம் ரூபாய் எடுத்து வந்தேன். அதில் எவ்வளவு எடுத்துக் கொண்டு சென்றார் என்பது எனக்குத் தெரியாது."

"அவர் ஏன் போனார்? உங்களை அனுப்பி இருக்கலாமே?"

"ஃபாக்டரியில் ஒரு தகராறு இருந்தது. அவரே நேரில் தீர்த்து வைக்கச் சென்றார். மேலும் அன்று நான் லீவில் இருந்தேன். வீட்டில் விருந்தாளிகள் வந்திருந்தார்கள். அவர்களுடன் ஆக்ரா போயிருந்தேன். இல்லாவிட்டால் நானும் அவருடன் போயிருக்க வேண்டியதுதான்."

பாஸ்கர் எந்த அர்த்தத்தில் அந்தக் கடைசி வாக்கியத்தைப் பிரயோகித்தான் என்று யோசித்துவிட்டு இன்ஸ்பெக்டர், "மிஸ்டர் பாஸ்கர், அந்தக் கோவிந்த் என்பவன் பதினாலாயிரம் ரூபாய்க்காகத் தன் எஜமானரைக் கொல்லக் கூடியவனா? அவன் எப்படிப்பட்டவன்? உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள், ஆஃப் த ரிகார்ட்."

"கொஞ்சம் கஷ்டம் இதற்குப் பதில் சொல்வது. இவன் கொலை செய்வான், இவன் கொலை செய்ய மாட்டான் என்று மனிதர்களைப் பாகுபடுத்துவது சற்றுச் சிரமமான காரியம் என நினைக்கிறேன். ஆனால்......"

"ஆனால்?"

"இது என்னவோ நிஜம். கோவிந்த் அவருடன் காரில் சென்றிருக்கிறான். அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கோவிந்தைக் காணோம். இரண்டும் இரண்டும்..."

"நாலாவதற்கு முன் பல கேள்விகள் எழுகின்றன. ஷர்மா ஹஸ்ஸார் சென்றது 18-ந்தேதி இரவு. உடல் கண்டெடுக்கப்பட்டது. 20-ந்தேதி மாலை. டாக்டர்களின் கணக்கெடுப்புப்படி ஷர்மா இறந்த நேரம் 20-ம் தேதி அதிகாலையில். அப்படியென்றால் 19-ம் தேதி முழுவதும் அவர் என்ன செய்தார்? எங்கிருந்தார்?"

"ஹிஸ்ஸார் ஃபாக்டரிக்குப் போன் செய்து பார்த்து விட்டேன். அவர் அங்கே வரவே இல்லையாம்?"

"நானும் அதைத் தெரிந்து கொண்டேன். நடுவில் ஒரு தினம் உதைக்கிறது."

"அவர் எப்படி இறந்தார்?"

"அடிக்கப்பட்டு, உதைக்கப்பட்டு, கழுத்தில் நெரிக்கப்பட்டு, மிதிக்கப்பட்டு நிச்சயம் இரண்டு அல்லது மூன்று பேர்கள் வேலை."

மீனாட்சி வந்தாள். பாஸ்கரிடம் அந்தக் காகிதத்தைக் கொடுத்தாள். அதில் 'வரச் சொல்' என்று பாஸ்கரன் குறிப்புக்குக் கீழ் எழுதி இருந்தது, அதை இன்ஸ்பெக்டரிடம் காட்டினான் பாஸ்கர்.

அனிதா மிக எளிய வெள்ளை ஸாரி அணிந்திருந்தாள். மேக்கப் இல்லாமல் இருந்தாள். வெள்ளை ரவிக்கை அணிந்திருந்தாள். நெற்றி பாழ். கூந்தல் கலைந்திருந்தது. அவள் உட்கார்ந்திருந்த படுக்கைக்கு அருகே உணவு மூடியிருந்தது.

இன்ஸ்பெக்டர் வந்து நின்றதும் அவள் பேசவில்லை. அவள் எதிரே பாஸ்கர் ஒரு நாற்காலியைப் போட்டான். அதில் ஓரத்தில் உட்கார்ந்தார்.

"பாஸ்கர்..." என்றாள் அனிதா. மிகவும் தணிந்திருந்த தங்கச் சரடுபோல குரல். குழந்தைக் குரல்.

"எஸ்." என்றான் பாஸ்கர்.

"மோனி! அவளுக்குத் தெரிவித்தாயா?"

"நேற்றே கேபிள் அனுப்பிவிட்டேன், மிஸஸ் ஷர்மா."

"மோனி யார்?" என்றார் இன்ஸ்பெக்டர் ராஜேஷ்.

"அவருடைய பெண். ஒரே பெண். அமெரிக்காவில் இருக்கிறாள். படிக்கிறாள்." என்றாள் அனிதா.

"அவருடைய பெண்ணா? உங்களுக்கு..."

"நான் அவருக்கு இரண்டாம் மனைவி," என்றாள் அனிதா.

இன்ஸ்பெக்டருக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. சற்றுநேரம் மௌனம் நிலவியது.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஆர்.மணி.
வயது: 25
முகவரி: 167-பி3,செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ்.சாஜகான்.
வயது: 26
முகவரி: சி.ரி.பி, கதுரு வெல, பொலன்னறுவை.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, பத்திரிகை.



பெயர்: ஆர்.ஸ்ரீதரன்.
வயது: 33
முகவரி: P.O.BOX-7781, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: பேனா நட்பு பத்திரிகை.



பெயர்: சி.சந்திரிக்கா.
வயது: 17
முகவரி: பாடசாலை வீதி, மன்னம்பிட்டி.
பொழுது போக்கு: ரீ.வி, பத்திரிகை.



பெயர்: எம். மிஹ்லார்.
வயது: 17
முகவரி: துருக்குராகம, கஹட்டகஸ்திகிலிய.
பொழுதுபோக்கு: கிரிக்கெட்இ பத்திரிகை.



பெயர்: எம்.அரிக்கான்.
வயது: 27
முகவரி: HERA G.H, I.D.G.CO. Ltd, MAKKAH. K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: ஐ.முஜிப் ரகுமான்.
வயது: 19
முகவரி: றஹ்மானியா நகர், கிண்ணியா-01.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம்.அன்சார்.
வயது: 25
முகவரி: 387, காலி வீதி, வெள்ளவத்தை.
பொழுதுபோக்கு: பத்திரிகை.

பெயர்: எஸ்.ஜெயச்சந்திரன்.
வயது: 17
முகவரி: பாரதிபுரம், மூதூர்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஏ.செபஸ்டியன்.
வயது: 28
முகவரி: 24/2, உடுப்பிட்டிய, உக்குவளை.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: எம்.ஸ்ரீதரன்.
வயது: 27
முகவரி: TEGLVARKSGADE-10, 2MF, 4800, NYK-F, DENMARK.
பொழுது போக்கு: கிரிக்கெட், பழைய நாணயங்கள், முத்திரை சேகரித்தல்

பெயர்: ஐ.ஹில்பாஸ்.
வயது: 17
முகவரி: 19, மலாய் வீதி, கற்பிட்டி.
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com



# தூக்கு மேடைக் குறிப்பு

ஜூலிஸ் பூசிக்

**03**



### இதுவரை

ஹிட்லரின் ஆதிக்கத்தை
எதிர்த்துப் போராடிய
செக்கொஸ்லாவாக்கியப் போராளிகளின்
முன்னணித் தலைவர் ஜூலிஸ் பூசிக்.
மாறுவேடத்தில், போலி அடையாள அட்டையுடன்
அவர் கைது செய்யப்படுகிறார்.
தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார்.
அவரது மனைவியைக் கைதுசெய்து
கொண்டு வருகின்றார்கள்.
மனைவியும் அவரைத் தனக்குத்
தெரியாது என்றுவிட்டார்.
விசாரணை தொடர்கிறது.

இனி...

## சிறையில் பொலிஸ் காரியாலயம்

சிறைப் பொலிஸ் காரியாலயத்திற்கு என்னைக் கொண்டு செல்ல முன்னரே அவர்கள் ஒரு பெண்ணை அங்கே கொண்டுவந்து நிறுத்தியிருந்தனர்.

அவள் வேறு யாருமல்ல; நமது இயக்கத்தைச் சேர்ந்தவள்தான்.

அனிச்சா ஜிரஸ்கோவா.

அதுதான் அப் பெண்ணின் பெயர். அவளது கணவனும் எமது இயக்கத்தில் தான் இருக்கிறான்.

அவன் இப்போது உயிரோடு இல்லை. இரத்த சாட்சியங்களில் ஒருவனாகிவிட்டான். மக்களுக்காக மரித்தவர்களில் ஒருவனாகிவிட்டான்.

இராணுவச் சட்டம் பிறப்பிக்கப் பட்டவுடன் அவனைத் தூக்கில்போட்டு விட்டனர்.

ஆர்னாட்ஸ் லாரன்ஸ் என்பதுதான் அந்த மாமனிதனின் பெயர்.

அவன் தூக்கிலிடப்பட்டபோதும் அனிச்சா கலங்கவில்லை; பயந்தோடவில்லை.

இரகசிய வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டாள். எங்கும் புரட்சித் தீயை வளர்த்துக் கொண்டிருந்தாள்.

இப்போது அவளை இங்கே கண்டபோது எனக்கு நம்பமுடியவில்லை. ஒருவேளை கனவாக இருக்குமோ?

இல்லை. கனவல்ல, இதோ அனிச்சா! இவள்தான் அனிச்சா.

இங்கே கொண்டுவரப்பட்ட பின்னரும் இத்தனை கம்பீரமாக, முகத்தை உயர்த்திக் கொண்டு தைரியமாக நிற்பதற்கு வேறு யாரால் முடியும்? சந்தேகமேயில்லை. அனிச்சாதான். எப்படி இது நடந்தது? யார் இவளைக் காட்டிக் கொடுத்தார்கள்?

சந்தேகமே வேண்டாம். எதிரிகளுக்கு நம்மைப்பற்றிய மிக முக்கியமான தகவல்களை யாரோ கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தோழர்களே! ஜாக்கிரதை! யாரோ நம்மையெல்லாம் நிழலாகத் தொடர்கிறார்கள். நமது நடமாட்டங்களை துல்லியமாக அறிந்து தகவல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உடனடியாக- ஆம்- மிக மிக உடனடியாக நீங்கள் வேறு இடங்களுக்கு மாறிக் கொள்ளுங்கள்! தோழர்களே! மாட்டிக் கொள்ளாதீர்கள்! எதிரியின் வலையில் சிக்கிவிடாதீர்கள்!

தகவலை அறிவிக்கவேண்டும். எச்சரிக்க வேண்டும். ஆனால் முடியாது. இங்கிருந்து என் தோழர்களுக்கு தகவல் அனுப்ப ஒரு வழியும் கிடையாது.

நான் அனிச்சாவை நோக்குகின்றேன். ஒரே ஒரு தடவைதான் அவளை நான் சந்தித்திருக்கிறேன்.

அவள் கண்கள் வணக்கம் சொல்வதைப் போல என்னைப் பார்க்கின்றன.

என் மனைவியிடம் கேட்ட அதே கேள்வியை அவளிடமும் கேட்கிறார்கள்.

"இவனை உனக்குத் தெரியுமா?"

அவள் முகத்தை நோக்குகிறேன். அதில் தெரிவது அச்சமல்ல. பெருமிதம்!

அவர்களது கேள்விக்கு துளியும் தயக்கமே இல்லாமல் அவள் சொல்கிறாள்;

"தெரியாது!"

ஓ! அனிச்சா! அவள் கையைப் பிடித்துப் பாராட்டவேண்டும். ஆனால் அந்த வாய்ப்புக் கிடைக்கப்போவதில்லை.

இப்போது அந்த நெட்டை அதிகாரி என்னிடம் கேட்கிறான்:

"இவளை உனக்குத் தெரியுமா?"

"இல்லை! எனக்குத் தெரியாது!"

"புத்திசாலித்தனமாக நடந்து கொள்!"

"எனக்குத் தெரியாது!"

அடிக்கிறார்கள்.

"உண்மையைச் சொல்லிவிடு!"

"எனக்குத் தெரியாது!"

மீண்டும் அடிக்கிறார்கள்.

"நீங்கள் என்ன செய்தாலும் சரி, இவளை எனக்குத் தெரியவே தெரியாது!"

முகத்தில் அறைகிறான் அந்த நெட்டை அதிகாரி.

அனிச்சாவுக்கு அவர்கள் என்னைத் தாக்குவது பொறுக்கவில்லை.

தன் பொருட்டு நான் அடிபடுவதாக அவள் நினைத்துவிட்டாள்.

"பரவாயில்லை ஜூலோ. பரவாயில்லை. யாரோ என்னைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள்!"

"யார்?"

என்று கேட்கிறேன். அவள் பதில் சொல்ல அவர்கள் விடவில்லை.

"பேசாதே!" என்று அதட்டுகிறான்.

அவள் என்னை நோக்கி கையை நீட்டுகிறாள். அவர்கள் முரட்டுத்தனமாக அவளை அப்பால் தள்ளுகிறார்கள்.

"அனிச்சா!"

அதற்குமேல் அவர்கள் கேள்விகள் என் காதில் விழவில்லை.

இரண்டு எஸ்.எஸ்.படையினர் என்னைத் திரும்பவும் ஸ்றெச்சரில் தூக்கிப்போடுகிறார்கள்.

ஸ்றெச்சரை முரட்டுத்தனமாக ஆட்டிக் கொண்டே ஒருத்தன் கேட்கிறான்;

"ஒரு முழம் கயிற்றில் தொங்கவேண்டும் என்று விரும்புகிறாயா?"

### வியாழக்கிழமை

நான் இருக்கும் சிறை அறையை திரும்பவும் புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறேன்.

என்னுடன் இருக்கும் இரண்டு கைதிகளில் இளையவன் பெயர் காரெக். வயதான கைதியை அவன் "அப்பா!" என்று அழைக்கிறான்.

தம்மைப் பற்றி அவர்கள் ஏதேதோ என்னிடம் சொல்கிறார்கள். ஆனால் ஒன்றுமே புரியவில்லை.

என் உடம்பு விரைவில் குணமாகிவிடும். அப்படியொன்றும் மோசமாகிவிடவில்லை என்று 'அப்பா' நம்பிக்கை ஏற்படும்படி பேசுகிறார். காரெக் அதை ஆமோதிக்கிறான்.

அவர்கள் இருவரும் ரொம்ப நல்லவர்கள்தான். ஆனால் எனக்கு என்னவோ அவர்கள் சொல்வதை நம்பமுடியவில்லை.

### பிற்பகல்

கதவு திறக்கிறது.

ஓசைப்படாமல் நுழைகிறது நாய். திரும்பவும் இரண்டு ஜோடி கனமான பூட்ஸ்கள்.

ஒரு ஜோடி நாயின் எஜமானுடையது என்பது எனக்குத் தெரியும். அவன்தான் அந்தச் சிறைக்கு மேலதிகாரி.

இரண்டாவது ஜோடி பூட்ஸ் முதல் இரவு விசாரணை செய்த அதிகாரியுடையது.

அவன்தான் எதிர்ப்பியக்க இலாகாவுக்கு தலைவன். அவர்களுக்குப் பின்னால் சீருடையில்லாத கால் சட்டைகள் தோன்றுகின்றன.

கண்களை உயர்த்திப் பார்க்கின்றேன். இப்போது புரிகிறது.

சிவில் உடையில் வந்தவன்தான் என்னைப் பிடிக்க வந்த கோஷ்டிக்கு தலைமை தாங்கிய நெட்டை அதிகாரி.

அவன் ஒரு நாற்காலியில் அமர்ந்து கேள்விகளை ஆரம்பிக்கிறான்.

"இங்கே பார்! உன் திட்டத்தில் மண் விழுந்துவிட்டது. உன் முயற்சிகள், உங்கள் இயக்கத்தின் முயற்சிகளெல்லாம் விரயமாகிவிட்டன! உன்னையாவது நீ காப்பாற்றிக் கொள்! என் கேள்விகளுக்கு உண்மையான பதில்களைச் சொல்! இந்தா இதை பற்ற வைத்துக் கொள்!"

அவன் ஒரு சிகரெட்டை நீட்டுகிறான். அது எனக்குத் தேவையில்லை. அதை என்னால் பிடிக்கமுடியாது. மறுத்து விடுகிறேன்.

"எங்களுக்கு எல்லாம் தெரியும்! நீ எதையும் மறைத்துப் புண்ணியமில்லை. என்ன புரிகிறதா? பேசு! மறைக்காதே பேசு!"

இவர்களுக்கு எல்லாம் தெரியும் என்றால், தெரிந்ததையே என்னிடம் ஏன் கேட்க வேண்டும்? நான் ஏன் இன்னும் சொல்ல வேண்டும்? நான் சொல்ல மாட்டேன். என் இயக்கத்தின் முடிவை கெடுத்துக் கொள்ள மாட்டேன்.

ஒரு மணி நேரம் விசாரணை நடந்தது. அவன் அதட்டவில்லை. கத்தவில்லை. பொறுமையுடன் கேட்கிறான்.

பதில் கிடைக்கவில்லை என்றால் வேறு கேள்வியை, மீண்டும் ஒன்றை-புதிய தொன்றைக் முடிவில்லாதபடி கேட்கிறான்.

"உனக்குப் புரியவில்லையா? இதுதான் முடிவு! நாங்கள் உங்களை வளர விடமாட்டோம்! உங்கள் முயற்சிகள் யாவும் தோற்றுவிட்டன. நீயும் தோற்றுவிட்டாய்!"

"நான் ஒருவன் மட்டுமே தோற்றிருக்கிறேன்!"

நான் சொன்னதும் அந்த நெட்டை அதிகாரி ஏதோ ஜோக் கேட்டவனைப்போல சிரித்தான்.

"இன்னுமா நம்புகிறாய்? இப்போதுமா உங்கள் வெற்றியில் நம்பிக்கை வைத்திருக்கிறாய்?"

"சந்தேகமே இல்லாமல்!"

"இன்னுமா நம்புகிறான்?" ஜெர்மன் அதிகாரி கேட்கிறான். நெட்டை அதிகாரி மொழி பெயர்க்கிறான்.

"ரசியா ஜெர்மனை வெற்றிகொள்ளும் என்றும் நம்புகிறானா?"

"ஆம்! நாம் வெல்லுவோம்! ரசியாவும் வெல்லும்"

மிகவும் களைத்துவிட்டேன். விழிப்புடன் இருப்பதற்காக பலம் முழுவதையும் திரட்டுகிறேன்.

புண்ணிலிருந்து இரத்தம் கொட்டுவதைப் போல நினைவு கிடுகிடுவென்று தவறுகிறது.

உதவி செய்வதைப்போல அவர்கள் கையை நீட்டுகிறார்கள்.

சில நாடுகளில் தண்டிக்கப்பட்டவனைத் தூக்கில் கொல்வதற்கு முன்னர் அவனை முத்தமிடுவதுகூட சம்பிரதாயமாக இருக்கிறது.

### மாலை நேரம்

சிறை மணிக்கூண்டில் மூன்று மணியடிக்கிறது.

முதல் தடவையாக அதன் ஓசை என் காதில் கணீர் கணீர் என்று விழுகிறது.

நினைவு மீண்டுவிட்டது. ஜன்னல் வழியாகப் புதுக்காற்று வீசுகிறது. அது என் விலாப்புறமாகச் செல்கிறது. படுக்கையின் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் வைக்கோல் நுனிகளை அசைக்கிறது.

இப்போதுதான் வைக்கோல் நுனிகள் என் முதுகை உறுத்துகின்றன என்பது எனக்குத் தெரிகிறது.

மூச்சுவிடுவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. உடலின் ஒவ்வொரு அணுவும் வலிக்கிறது.

ஜன்னலைத் திறந்தவுடன் சட்டெனப் பார்ப்பதுபோல இதுதான் என் முடிவு என்று புரிந்து கொள்கிறேன்.

நான் செத்துக் கொண்டிருக்கிறேன்.

சாவே! என்னிடம் வர உனக்கு வெகு நேரம் ஆகிவிட்டது.

ஒரு காலத்தில் உன்னைச் சந்திப்பதற்கு பல ஆண்டுகள் செல்ல வேண்டும் என்று நினைத்தேன்.

சுதந்திர மனிதனாய் வாழலாம். பல பணிகளைச் செய்யலாம். குதூகலிக்கலாம் என்றுதான் எண்ணினேன்.

அப்போது என் உடம்பில் பலம் இருந்தது. இப்போது அது இல்லை. குன்றிக் குறைந்து வருகிறது.

நான் வாழ்வை நேசித்தேன். அதன் எழிலுக்காகப் போராடப் புறப்பட்டேன். மக்களே! உங்களை மனப்பூர்வமாக நேசித்தேன். நீங்களும் என்னை நேசித்தபோது என் மனம் குளிர்ந்தது.

என்னை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டபோது என் இதயம் வேதனையில் வெந்தது.

உங்களில் யாருக்காவது நான் ஏதாவது தீங்கு செய்திருந்தால் மன்னித்து விடுங்கள். என்னால் உற்சாகம் அடைந்தவர்கள், மனம் மகிழ்ந்தவர்கள் யாராவது இருந்தால் என்னை மறந்து விடும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என் இறுதி விருப்பம்; நான் விட்டுச் செல்லும் உயில்! அப்பா! அம்மா! சகோதரிகளே! உங்களுக்கு- என் ஆருயிர் மனைவியே! உனக்கு- என்னுயிர் தோழர்களே! உங்களுக்கு நான் நேசித்த ஒவ்வொருவருக்கும் இதுதான் என் உயில்.

துயரத்தின் தூசியைக் கண்ணீர் கரைத்துவிடும் என்று நினைத்தால் சிறிது நேரம் அழுங்கள். ஆனால் கவலைப் படாதீர்கள்.

நான் மகிழ்ச்சிக்காக வாழ்ந்தேன். மகிழ்ச்சிக்காகச் சாகிறேன். என் கல்லறையில் துக்க தேவதையை நிறுத்துவது கொடுமையாகும்.

→□○

மறுநாள் பொழுது புலர்ந்தது.
அது மே முதல் நாள்.
எனக்கு மூச்சுத் திணறுகிறது.

(தொடர்ந்து வரும்)

---

# அவளும் பெண்தானே!

கஜுவாஞ்சிக்குடி **யோகன் - சுவிஸ்**



கண்ணன் காத்திருந்தான். நிக்கோவுக்காகப் பார்த்திருந்தான். நிக்கோ இருபது வயதைத் தாண்டிய சுவிஸ் நாட்டு அழகி.

அவளின் வருகைக்காக ஐக்கிய நாடுகள் சபைக்குப் பின்னால் உள்ள அந்தத் தாவரவியல் பூங்காவின் இருக்கையில் அவன் அமர்ந்திருந்தான்.

அவள் 'மோபா'வில் வந்து இறங்கினாள். அணிந்திருந்த 'ஹெல்மெற்' வகைகளை கழற்றிய போதுதான் அது நிக்கோ என அடையாளங்கண்டான் கண்ணன். தங்க நிறத் தலைமயிரைப் பின்னி ஒற்றைச் சடையாக்கியிருந்தாள். கடைசியாக அவன் வாங்கிக் கொடுத்த மஞ்சள் நிற சுரிதாரில் வந்திருந்தாள். அவளுடைய மஞ்சள் தேகத்திற்கு அது மிகவும் எடுப்பாகக் காட்சியளித்தது.

கையில் 'ஹெல்மெற்'றுடன் அவனை நெருங்கிய அவள் "என்ன கண்ணன் அவசரம்?" என்றாள்.

"முதலில் இரு," என்று கண்ணன் சொன்னான். அவனை உரசிக் கொண்டு அமர்ந்தாள் அவள்.

"நிக்கோ நான் சொல்வதையிட்டு நீ தப்பாய் எடுத்துக்கொள்ளக்கூடாது. இது தான் நாம் சந்திக்கும் கடைசிச் சந்திப்பாக இருக்கும்." மிகவும் பிரயாசப்பட்டு வார்த்தைகளை எடுத்துச் சொன்னான்.

இதற்கு அவள் எதுவும் சொல்லவில்லை. ஏன் என்பது போல் புருவத்தை மட்டும் உயர்த்தினாள்.

"எனது திருமணத்திற்காக எங்கள் உறவுக்காரப் பெண் ஒருத்தியை அம்மா அனுப்பிவிட்டார். அவள் இப்போ வந்து இடையில் நிற்கிறாள். இதற்குப்பிறகும் நாம் பழகுவது நல்லதில்லைத் தானே!" அவன் தன்னில் பிழையில்லையென்பது போல் சமாதானம் பண்ணினான்.

"கண்ணன் இப்படி நீ நினைத்தவுடன் தூக்கியெறிய நானா கிடைத்தேன்?"

"ஆத்திரப்படாதே நிக்கோ. சொல்வதைப் புரிந்துகொள். நான் எனது கலாசாரம், சமூகம் இவைகளைத் தான் பார்க்கவேணும். இல்லாவிட்டால் இவைகள் என்னை ஒதுக்கி வைத்து விடும்."

அவன் நியாயப்படுத்த முனைந்தான். இடைமறித்தாள் நிக்கோ.

"இதோ பார் கண்ணன்! இவைகளுக்குப் பயந்தா நீ ஏன் என்னுடன் பழகினாய்? என்னைத் துரத்திவந்து என் மனதைக் கெடுத்தாய்? என் பெற்றோரிடமிருந்து என்னைப் பிரித்தாய்? தற்காலிக சுகத்திற்காகவும், தற்போதைய தேவைகளுக்காகவும் என்னைப் பயன்படுத்திவிட்டு இப்போது கலாசாரம், சமூகம் என்றால் எப்படி?" அவனின் 'சேட் கொல'ரைப் பிடித்து உலுக்கினாள். கண்ணனால் எதுவும் பேசமுடியவில்லை. தலையைக் கவிழ்ந்து கொண்டான்.

உண்மையில் அவன்தான் அவளைத் தேடிப் போயிருக்கிறான். தொந்தரவு செய்திருக்கிறான்.

அவன் சுவிஸிக்கு வந்து இரண்டாவது வருடம், இரண்டாவது வேலைக்காக அந்த 'ரெஸ்ற்ரோறண்'டுக்குப் போனான். அது நிக்கோவினுடைய குடும்ப 'ரெஸ்ற்ரோறண்'டாக இருந்தது. அங்கு தான் அவளின் வீடும் ஆடம்பரமாக அமைந்திருந்தது. அதற்குப் பக்கத்தில் தான் கண்ணனுக்கு ஒரு சிறிய அறை ஒதுக்கிக் கொடுத்தார்கள். முதலாளிக்கு அவள் ஒரே பெண். மிகவும் செல்லமாக வளர்ந்து கொண்டிருந்தவள்.

ஒரே இடத்தில் வசித்தாலும், புதிய இனம், புதிய நிறம், புதிய முகம் இப்படி, சகலவற்றிலும் அவன் வேறுபட்டிருந்ததால் ஆரம்பத்தில் நிக்கோ குடும்பம் அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

நாளாக நாளாக அவனின் குணம் அவர்களுக்குப் பிடித்துப் போயிற்று. நேரகாலம் பாராமல் வேலைசெய்வது, மேலதிக நேர வேலைக்குப் பணம் வாங்காமல் விடுவது, ஓய்வு நேரங்களில் அவர்களின் 'காரை'க் கழுவுவது- இப்படியாக அவர்களின் மனதில் இடம்பிடித்தான் கண்ணன். நிக்கோவும் வஞ்சகமில்லாமல் அவனது றூமிற்கு போய்வரத் தொடங்கினாள். அவனுடன் ஒன்றாக 'கேரம்' விளையாடுவாள். சாப்பிடுவாள். சேர்ந்து ஊர் சுற்றுவாள். இந்தச் சந்தர்ப்பங்களினால் இருவருக்கும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அதிகரித்தது.

திடீரென்று ஒருநாள் ஊரில் தகப்பன் இறந்து போன செய்தி அவனுக்குக் கிட்டியது. கலங்கிவிட்டான். அந்தத்துக்கம்; துக்கத்தால் ஏற்பட்ட தவிப்பு; அந்தத் தவிப்பைத் தணிக்கும் ஒரு அன்பு நெஞ்சமாக அப்போது நிக்கோ விளங்கினாள். அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டான் கண்ணன். தனக்கு இனி யாருமே இல்லையென்று புலம்பினான். "இங்கு கூட உன்னைத் தவிர எனக்கு ஒரு சொந்தமும் கிடையாது" என்று அவளிடம் வாய்விட்டு அழுதான்.

இச்சம்பவம் நிக்கோவின் மனதில் ஒரு மேலதிகமான தாக்கத்தை உண்டுபண்ணியிருக்க வேண்டும். அதுநாள் வரை வெறும் நட்பாயிருந்த நெருக்கம் காதலாக மலர்ந்தது.

கறுவல், அந்நிய தேசத்தான் என்று நிக்கோவின் வீட்டில் ஏகப்பட்ட ரகளை. இதனால் கலவரமடைந்த பெற்றோர் நிக்கோவை வேறொரு மாநிலத்தில் 'ஹொஸ்ரலில்' தங்கவைத்து படிக்க விட்டார்கள். அவனையும் வேலையிலிருந்து நீக்கினார்கள். கண்ணன் விடவில்லை. அவளைத் துரத்தினான். அங்கு போய்க் குமுறினான்.

"நிக்கோ! நீ இல்லையென்றால் என்னால் வாழவே முடியாது. நான் இப்போதே இறப்பதற்குத் தயாராகிவிட்டேன்," என்று மனந்திறந்து கதறினான்.

உணர்ச்சிகளைத் தாங்கமுடியாத பெண் உள்ளம்! தனக்காக ஒரு ஜீவன் உயிரை விடத் தயாராக இருக்கிறது என்று உருகிவிட்டாள் நிக்கோ.

பொய்பேசி அறியாத வெள்ளை மனம் தனது நிலையை வீட்டில் தெரிவித்தது. இதனால் வீட்டில் வாதாட்டம் நிகழ்ந்தது.

"எனக்குக் கண்ணன் தான் வேணும்" என்று நிக்கோ தனது வீட்டில் முடிவாகச் சொல்லி விட்டாள்.

"நீ வீட்டைவிட்டு வெளியில் போகலாம். உனது தேவைகளுக்குப் பணமோ, பொருளோ இனிக் கிடையாது" என்று அவளைக் கலைத்து விட்டார்கள் அவள் பெற்றோர்.

நிக்கோ சளைக்கவில்லை. அவளுக்கு எப்போதும் கண்ணன் துணை இருந்தால் போதும் என்ற நினைப்பு. தனக்கு வேலையுமொன்று தேடி றூமும் எடுத்தாள் அவள்.

கண்ணனுக்கு வேறொரு நகரில் வேலை கிடைத்தது. லீவு நாட்களில்- அதாவது கிழமைக்கு இரண்டு நாட்கள் நிக்கோவுடன் வந்து தங்கிவிட்டுப் போவான் அவன்.

"வருடம் பிறக்கட்டும்; நாம் திருமணம் செய்து கொள்வோம்" என்றிருந்த கண்ணன் திடீரென்று வந்து இதுதான் கடைசிச் சந்திப்பு என்றால் அவள் குழம்பாமல் என்ன செய்வாள்?

கண்ணனின் கண்களில் நீர்முட்டியது. "என்னை மன்னித்துவிடு நிக்கோ. என்னால் இச் சந்தர்ப்பத்தில் எதுவுமே செய்ய முடியாது" எனக் கெஞ்சலாகக் கேட்டான்.

"நீ ஒரு கோழை. உன்னைப் போன்றவர்கள் எங்களைக் காதலிக்கக்கூடாது. ஒருவனுக்கு ஒருத்திதான். எங்கள் கலாசாரம் என்று நீ அடிக்கடி சொல்லுவாய். அந்த ஒருத்தியாய் என்னை நீ ஏன் ஏற்கக்கூடாது? ஏன் எங்களுக்கும் ஒருவனுடன் ஆயுள் பூராவும் வாழ்வதற்கு ஆசை இருக்கக் கூடாதா? தயவு செய்து உம்மைப் போன்றவர்கள் எங்களின் மனதைக் கெடுக்காதீர்கள். எங்களை விட்டு விடுங்கள். குட்பை" என்று 'மோபா'வை நோக்கி நடக்கத் தொடங்கினாள் நிக்கோ.



படிப்பகம்

www.padippakam.com

# கொழும்பு

**"தம்பி நாங்களும் யாழ்ப்பாணம் வந்திடலாம் போல கிடக்கு" —அக்கா**

**"நாங்களும் கொழும்புக்குப்போய் அங்கொரு வீடு எடுத்து இருக்கலாமே?" —மனைவி**

இதயத்தில் எத்தனை ரணங்கள்! சோக நெருப்பில் வெந்த வேதனை. வாழ்க்கை நோவுக்குள் வழுக்கி விழுந்ததனால் எழுந்திருக்க முடியவில்லை! இதயமெல்லாம் புண்ணாக இருக்கும்போது எதையுமே அனுபவிக்க மனது விரும்புவதில்லை.

"அப்பா....! ப்...பா...அப்...பா! என்னையும் அழைச்சிட்டுப் போங்கோ....வன்.... கொழும்ப பார்க்க எனக்கும் ஆசை.... அப்...பா... கொழும்பு வடிவா இருக்குமே?"

ராஜனின் மகன் திவ்யன் அவனின் ஆசையினையும் ஆர்வத்தினையும் தூவினான். பன்னிரண்டு வருடங்களைப் பார்த்த சிறுவன் அவன். அவன் கண்டதெல்லாம் அனுபவித்ததெல்லாம் போரின் கொடுமையைத்தான்.

குண்டுச் சத்தம்.

போர்விமானச் சத்தம்.

துப்பாக்கி வெடிச்சத்தம்.....இப்படி பயங்கரசத்தங்களுக்குள் யாழ்ப்பாணத்தில் விழுந்து முளைத்து எழுந்து நிற்கும் சிறுமரம் அவன்.

"ஏனப்பா....! எங்களுக்கு அவையள் அடிக்கிறாங்கள்?" அந்த சின்னப்பூ வார்த்தை வாசம் வீசும் போதெல்லாம் ராஜனின் இதயம் தீப்பற்றி எரியும்.

"அப்....பா....ப்பா.... நாங்கள் எங்கே யாவது போட்டு பேர்ந்து வருவமே....?" திவ்யன் பொறுக்க முடியாமல் தன் இதயத்தைத் திறந்து காட்டுவான்.

அன்று இரவு ராஜன் மனைவியிடம் பேசிக்கொண்டிருந்தான். திவ்யனும் பக்கத்தில் சுவாசித்துக் கொண்டிருந்தான். "எப்படி சரி கட்டாயம் கொழும்புக்கு ஒருக்கால் வந்திட்டுப் போகட்டாம்.....அக்கா நியூஸ் அனுப்பியிருக்கு."

"வலு முக்கியமான விசயமாக்கிடக்கும் போலிருக்கு.... இந்த சூழ்நிலையில்..... இம்...."

மனைவி தயங்கினாள்.

"சரியில்ல..... நான் வெள்ளென போட்டு....வாரனே!"

"அப்பா...ப்பா....அம்...மாம்...மா.... நானும் அப்பாவோடு போட்டு வாரனே...."

இருவரும் முகத்தை முகத்தை நோக்கினார்கள்.

"உவனும் ஆசப்படுறான்....அழைச்சிட்டுப் போங்கோவன்...." மனைவி அனுமதி வழங்கினாள்.

அடுத்தநாள் சூரியன் விழிக்கும் முன்னரே அவர்கள் விழித்துக் கொண்டார்கள். இருவரையும் மனைவி வழியனுப்பி வைத்தாள்.

"பத்தரம்.... மோன.... கொப்பருக்கு கஷ்டம் கொடுக்கப்படாது.... நல்ல பிள்ளையா போட்டு வா!"

அம்மாவுக்கு முத்தங் கொடுத்தான். கையசைத்துக் காட்டினான். அவனின் உள்ளமெல்லாம் பூக்கள். சந்தோஷம் அவனை அழைத்தது போல் காணப்பட்டான். திவ்யனின் செயல்களைப் பார்த்து ராஜன் ரசித்தாலும்; அவனின் மனதுக்குள் பீதி குடிகொண்டிருப்பது தன் வாரிசுக்குத் தெரிய நியாயமில்லை.

பாதங்கள் சக்கரங்கள் போல தொழிற்பட்டன. திவ்யனும் நடந்தும் ஓடியும் தொடர்ந்தான். அவன் களைப்பில்லாமல் நடந்தான். கொழும்பை விழிகளால் பருகும் ஆசை. இடையில் எத்தனையோ சோதனைகள். எத்தனையோ வேதனைகள்.

இன்னுமொரு நாட்டுக்குச் செல்லும் உணர்வு அவனுக்கு என்றாலும் ஒரு நரகத்தில் இருந்து இன்னுமொரு நரகத்துக்கு இடம்மாறுவது போன்றதோர் தவிப்பு. வெறுப்பு, விரக்தி. துருவித் துருவிக் கேள்விகள்! சில கேள்விகள் விளங்கியும் பல கேள்விகள் அவனுக்கு விளங்காமலும்......

கனவு போல ஒரு வழியாக வவுனியாவந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து புகையிரதத்தில் ஏறியவுடன்தான் நிம்மதிப் பெருமூச்சு ராஜனுக்கு எழுந்தது.

"அ...ப்...ப்...பா...பா உதுவென்ன....? பாம்பு மாதிரி...கிடக்கு... உதுல போட்டு வாறதுக்கு பயமில்லையே...?" புகையிரதத்தை முதன்முதலாக திவ்யன் தரிசித்ததற்கு அடையாளமான கேள்வியது. ராஜனுக்கு சிரிப்பதா அழுவதா என்று புரியாத நிலை.

"உதான் ட்றெயின்....உத நேற்றுத்தான் கண்டு புடிச்சிருக்கிறாங்கள்...." அவன் இன்னும் இன்னும் கேள்வி கேட்டுவிடுவான் என்பதற்காக அப்படிச் சொன்னான் ராஜன்.

"உதுவும் குண்டு போடுமா....?"

திவ்யனின்கேள்வி ராஜனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவனின் தற்காலிக மகிழ்ச்சி அவதிக்குள்ளானது.

"அப்புடி ஒண்டும் செய்யாது.....பேசாம நித்திர கொள்ளு!"

நேரம் இரவு பத்துமணி. பௌர்ணமி ஒளி கொட்டிக் கிடந்தது. திவ்யன் உறங்கவில்லை. புகையிரதம் வெறி பிடித்தவனைப் போல ஓடிக்கொண்டிருந்தது. திவ்யன் நிலா ஒளியில் தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் காட்சிகளை ஜன்னல் வழியாகப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான். ராஜன் இமைகளால் போர்த்தினாலும் தன் இதயத்தைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தான். புகையிரதத்தின் வேகத்திற்கேற்ப இதயமும் இயங்கியது. ஈடு கொடுத்துக் கொண்டிருந்தது.

"கோ...! அய்டின்ரி....கோ..."

இராணுவ வீரர்களின் கேள்வி. அவன் அடையாள அட்டையைக் காட்டினான். இன்னும் பல கேள்விகளால் அவனைத் துளைத்தார்கள். வெறுப்பை அவனின் இதயத்தில் நுழைத்தார்கள்.



கரீமா றாஹில்

"ஏனப்பா... எங்களக் கண்டாலே.... அவங்களுக்குப் புடிக்கிறதில்ல......?" திவ்யனின் கேள்விகளால் ராஜன் இதயத்தால் கண்ணீர் வடித்தான். உணர்வுகளால் வெந்நீர் வடித்தான்.

"கொல்ல மாட்டாங்கள்......"

திவ்யனின் முகத்தில் மகிழ்ச்சியில்லை. அவனின் மகிழ்ச்சி உதிர்ந்து விழுந்துவிட்டது.

"ச்....சே...! பெரிய தப்பு செய்திட்டன்... திவ்யன அழைச்சிட்டு வராமலே இருந்திருக்கலாம்......" தன் தவறை தனக்குள் ஒப்புக்கொண்டான் ராஜன்.

"கொழும்பிலயும் உவையள் இருப்பினமோ?"

"அப்....பா.....சொல்லுங்கோவன்.....!"

"இல்லை...."

ஆமென்றால் திவ்யன் அழுது விடுவான். அல்லது வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்று அடம்பிடிப்பான். அதற்காகப் பொய் சொன்னான் ராஜன்.

திவ்யன் அமைதியை அழைத்துக் கொண்டான்.

அவனின் எண்ணங்கள் மீண்டும் சுவாசித்தன. ராஜன் நினைவுகளுக்குள் நீந்தினான்.

அவனின் அண்ணனை இலங்கை இராணுவம் அழைத்துச் சென்று மூன்று வருடங்கள் முடிந்துவிட்டன. இன்னும் அண்ணன் உயிருடனோ பிணமாகவோ திரும்பவில்லை. அவனின் மூத்த அக்கா செண்பகம் அந்த வேதனை விரக்தியில் பைத்தியமாகித் திரிந்தது. பின்னர் அவளும் காணாமல் போனது; இந்த வேதனைகள் இதயத்தை மிதித்ததனால்- உணர்வுகளை உதைத்ததனால் தம்பி சுகுமார் போராளிகளோடு இணைந்தது; இப்படி ஒவ்வொரு குடும்பங்களுக்குள்ளும் பூகம்பம். ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் சூறாவளி. ஒவ்வொருவரின் நினைவுகளுக்குள்ளும் காட்டாறு.......

ராஜனின் இரண்டாவது அக்கா இந்தப் பிரச்சினைகள் முளைக்கும் முன்னரே கொழும்பில் குடியேறியதனால் உறவுமட்டும் மிஞ்சியிருக்கிறது. மற்றும்படி அமைதி, நிம்மதி எதுவுமே இல்லை. வீட்டில் நிம்மதியாக உறவினர்கள் வந்து தங்க முடியாது. அடிக்கடி சோதனை, சந்தேகம், சுற்றிவளைப்பு போன்றவற்றால் அக்காவின் வாழ்க்கையும் களைத்துப்போனது. இதனால் அக்காவும் தடுமாறிக்கொண்டிருந்தாள்.

"தம்பி! நாங்களும் யாழ்ப்பாணத்துக்கே வந்திடலாம் போல கிடக்கு. அங்கத்தை விட இங்கே நிலமை மோசமா கிடக்கு."

அவனின் அக்கா வேதனை வார்த்தைகளால் விழுந்தாள். "நாங்களும் கொழும்புக்கே போட்டு வீடு எடுத்துக்கொண்டு இருக்கலாமே.....?" அவனின் மனைவி ஒருமுறை; வேதனையும் சோதனையும் தாங்காமல் வார்த்தைகளை காதில் வரைந்தாள்.

"அக்கா என்ன சொல்றவ எண்டு தெரியுமே.....? கொழும்ப விட யாழ்ப்பாணம் பரவாயில்லையாம்....நான் என்ன சொல்லுறன் எண்டா.... எங்களுக்கு இந்த நாட்டில் எங்குமே நிம்மதி இல்ல....."

நடந்த நிகழ்வுகளைக் கத்தரித்தான். எழுந்தான். திவ்யனைப் பார்த்தான். அவன் உறங்கிக் கொண்டிருந்தான். நள்ளிரவைத் தாண்டியிருக்க வேண்டும் என்று நினைத்து நேரத்தைப்பார்த்து ஆமோதித்துக் கொண்டான் ராஜன்.

கென்ரீனுக்குச் சென்று சூடாகத் தேனீர் அருந்திவிட்டு திவ்யனுக்கும் பனிஸ் வாங்கி வந்தான்.

புகையிரதம் களைப்பாறுவதும் மீண்டும் பெருமூச்சுவிட்டு இயங்குவதுமாக இருந்தது.

காலை எட்டுமணி புறக்கோட்டைப் புகையிரத நிலையத்தில் புகையிரதம் நிம்மதியாக நின்றது.

"அப்பா! கொழும்பு வந்திட்டே....?"

"ஓமோம்.....இறங்குவம்....."

இறங்கி மொறட்டுவ பஸ் ஏறி வெள்ளவத்தை அக்கா வீட்டுக்கு வந்து சேருவதற்கு பத்தரை மணியாகிவிட்டது. அக்காவின் வரவேற்பு வழமைபோல சந்தோசமாக இருந்தது. ஒரு நரகத்தை விட்டு வெளியேறிவந்த திருப்தி ராஜனுக்கு. "உதுதானே....மகன்....?.. திவ்யா...வா...மோன..." திவ்யனை அவர்களுக்குத் தெரிவதற்கு நியாயமில்லை. திவ்யனுக்கு அவர்களைத் தெரிவதற்கும் நியாயமில்லை. ஆனால் அவனின் பெயர் அவர்களுக்கு ஏற்கனவே அறிமுகம் அந்தளவுக்குப் போர்க்காலச்சூழல் உறவுகளைச் சிதைத்திருந்தது. வதைத்திருந்தது.

அவர்களோடு இணைவதற்கு அந்தச் சின்னப் பூ தயங்கியது.

"ஊர் புதினங்கள் எப்படி...?"

அவன் ஒரு பட்டியல் வெளியிட்டான்.

பிடிபட்டவர்கள்

காணாமல் போனோர்

அகதிகளானோர்

இறந்தவர்கள்

பாலியல் பலாத்காரத்திற்குட்பட்டோர்

உடல் உறுப்புக்களை இழந்தோர்.......

இப்படி ஒரு கொடிய நரகத்தை அவளுக்கு விளக்கிக் காட்டினான்.

அக்கா பயந்தே போனாள்.

"அப்பா.....உது என்ன....? உது... உது....என்னப்பா...?" அவன், 'தொலைக்காட்சி, டேப் செற், குளிர்ச்சாதனப்பெட்டி போன்றவற்றைக் காட்டிக் கேட்டான்.

திவ்யனின் வாழ்க்கையில் விழிகளின் முதற் தரிசனம் அவை. ஆனால் கொழும்புப் பிள்ளைகள் கம்பியூட்டரோடு விளையாடும் காலம். எத்தனை வித்தியாசங்கள்....! போர் யாழ்ப்பாணத்தை மட்டுமல்ல, சிறுவர்களை, நாளைய உலகைச் செய்ய இருக்கும் சிறுவர்களையும் சிதைத்திருந்தது.

மகனுக்கு விளங்கப்படுத்தினான். இயக்கிக் காட்டினான்.

"மகளுக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கிறோம். அடுத்த மாசம் வெடிங் எடுக்கத்தான் யோசன. ஊரில இருக்கிறவையளுக்கும் சொல்லிப்புடவேணும். இங்கேயும் நிறைய வேல கிடக்கு. தம்பி.... நீங்கள் தான்....செய்து தர வேணும். ரெண்டு நாள் கழித்து போட்டு எல்லாருமாக வாங்கோவன்....."

இரவுச் சாப்பாட்டின்போது அக்கா அழைப்பித்தகாரணத்தை விளக்கினாள்.

பிரயாணக் களைப்பு.... நிம்மதியாக ராஜன் தூங்கிக் கொண்டிருந்தான். அதிகாலை ஐந்து மணியிருக்கும். சுற்றிவளைப்பு. ராஜனையும் பிடித்துக் கொண்டார்கள். எவ்வளவோ மன்றாடியும் அவர்கள் விடவில்லை. அடையாள அட்டையைக் காட்டியும் பயனில்லை. வீட்டுக்கு உறவுக்காரர் வந்திருக்கும் விடயத்தைப் பொலிசில் அறிவித்து அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்று வாதிட்டார்கள். ராஜனை அழைத்துச் சென்று விட்டார்கள். அவனின் அக்கா அவளுக்குத் தெரிந்த வக்கீலைப் பார்க்க புறப்பட்டாள்.

திவ்யன் பாவம்! எழுந்தவுடன் அப்பாவைத் தேடி அழுவான். ■

---

# மீண்டும் ஒரு கா(சா)தல் கதை

**"அந்த ஜோடி என்னைவிட்டு சிறிது தூரத்தில் அமர்ந்து கொள்கிறார்கள். அவர்கள் முகங்களில் ஏதோ வித்தியாசமான பாவம்......"**

நல்ல கதையொன்று எழுதி நீண்ட நாளாகிவிட்டது. மனம்தான் வெறுமையாகக்கிடக்கிறதே. எப்படி எழுதுவது? வெளியே ஒரு நடை நடந்துவிட்டால் மனம் லேசாகும் போல இருந்தது.

பொலனறுவை அணைக்கட்டிற்கு போய் வந்தால் என்ன? என்ற எண்ணம் எழுந்தது.



கதைதான் பிறக்காவிட்டாலும் குளுமையான காற்றாவது கிட்டுமே! என முடிவு செய்து என்னை தயார் படுத்திக்கொண்டு வெளியே வருகிறேன். கடைகள் பூட்டப்பட்டிருந்ததால் வெறிச்சோடிக் கிடந்த வீதியில் சனநெருக்கமின்றி வந்த பஸ்ஸொன்றில் என்னை நுழைத்துக்கொண்டு சுமார் பத்து நிமிடங்களில் அணைக்கட்டை அடைந்த பஸ்ஸை விட்டு இறங்குகிறேன்.

நேரம் மூன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. நான்கு மணிக்கு மேல்தான் இங்கே கூட்டம் சேரும். இப்போது மனிதர்கள் யாரையும் காணவில்லை. நான் மெதுவாக நடந்து சென்று நன்கு கிளைவிரித்திருந்த மரமொன்றின் கீழ் அமர்ந்து கொள்கிறேன்.

நீர் அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. சூழலும் அதைப்போன்றே நிர்மலமாக காட்சியளித்தது. அணைக்கட்டின் கரையருகே மட்டும் நீர் இலேசாக சுளித்துச் சத்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்க, இதமான காற்று இலைகளுடன் சல்லாபித்து இன்னிசை மீட்டும் பொழுது உள்ளத்திற்குள் புத்துணர்வொன்று பீறிட்டுக் கொண்டிருந்தது. 'ஹூம்- சந்தேகமே இல்லை. இன்றைக்கு நல்ல கதையொன்று பிறந்துவிடும். 'தினமுரசு' அபிமானிகளின் பாராட்டை நிச்சயம் பெற்றுவிடலாம்.....' எனக்குள் நம்பிக்கை முகிழத் தொடங்க உற்சாகத்துடன் பேனாவை எடுத்துக் கொண்டு சுற்றும் முற்றும் பார்க்கிறேன்.

தூரத்தில் நடந்துவந்து கொண்டிருந்த இருவர் எனது கவனத்தை ஈர்த்துவிட நெருங்கி வரும்வரை பார்த்துக்கொண்டிருக்கின்றேன். என்னைத் தாண்டிச்சென்ற அவர்களை உற்றுப்பார்க்கின்றேன்.

சுமார் இருபத்தி ஐந்து வயது மதிக்கக் கூடிய கவர்ச்சியான இளைஞனும், இருபது அல்லது அதைவிட குறைந்த வயதில் இருக்கக் கூடிய மிக இளமையான அழகான யுவதி ஒருத்தியும் ஜோடியாக கைகோர்த்துக் கொண்டு சிங்களத்தில் உரையாடியபடி என்னைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

'ஹூம்....சந்தோஷங்கள் சுகித்துக் கொண்டு சுகம் அனுபவிக்கின்ற

காத்தான்குடி எம்.சுபைர்கான்

காதலர்கள்.....!' நினைக்கும்போது எனது மனதிலும் இனிமையான கடந்த காலம் ஒன்று விரிகின்றது. எனது திருமணமும் காதல் திருமணம்தான். ஆனால் வீதிகளில் வலம் வராத வித்தியாசமான காதல். (சொரி!.... அந்தக் கதையெல்லாம் இப்போது சொல்ல மாட்டேன்.)

அந்த ஜோடி சென்று என்னை விட்டு சிறிது தூரத்தில் அமர்ந்து கொள்கின்றார்கள். அவர்களின் முகங்களில் கண்ட ஏதோ வித்தியாசமான பாவம் என்னை மீண்டும் அவர்களைப் பார்க்க வைக்கின்றது.

எல்லா இந்த வயதுக் காதலர்களிடமும் வழமையாகக் காணப்படுகின்ற உற்சாகம், உணர்வுகளின் பரிமாற்றங்கள்.... போன்ற பல 'பிளஸ்கள்' அவர்களின் முகங்களில் ஏனோ 'மைனஸ்'.

நான் எனது சிந்தனைகளை எல்லாம் ஒருமுகப்படுத்தி எழுத்துப் பயிர்களை விதைக்கத் தயாராகிக் கொண்டிருந்தபோது பின்னால் ஏதோ சத்தம் கேட்டது. தண்ணீருக்குள் எதுவோ விழுந்ததைப் போன்ற சத்தம்! திடுக்கிட்டு திரும்பிப்பார்க்கிறேன். அந்த ஜோடியைக் காணவில்லை.

எனது உணர்வுகள் உறைய அதிர்ச்சியுடன் அவர்கள் இருந்த திசையை நோக்கி ஓடினேன். அதே நேரம் வேறொரு திசையிலிருந்து ஒருவர் "அவர்கள் தண்ணீருக்குள் பாய்ந்து விட்டார்கள்....!" என்று கதறிக் கொண்டு ஓடி வந்தார்.

என்னால் நம்பவே முடியவில்லை. அந்த இளந்தளிர்கள் ஏன் இப்படிச் செய்து விட்டார்கள்? அவர்களின் முகத்தில் தெரிந்த அந்த வித்தியாசம் இந்த முடிவிற்கான முகவுரையா...? அவ்வளவாக நீந்தத் தெரியாத நான் கையை பிசைந்துகொண்டிருக்க, ஓடி வந்த அந்த சிங்களச் சகோதரர் நீருள் பாய்ந்து அவர்களைத் தேடினார். சுமார் பத்து நிமிடங்கள் நான் பொறுமையிழந்தவனாக, எனக்கு சற்றும் அறிமுகமில்லாத, அந்த இளம் உள்ளங்களுக்காக இறைவனை இறைஞ்சியவனாக துடித்துக் கொண்டிருந்த போது அவரின் தலை வெளியே வந்தது. ஆனால் அவரின் முகத்தில் தெரிந்த சோகம் அவர்கள் இருவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை உணர்த்தியது.

அங்கே சூழ்ந்து நின்றவர்களில் சில இளைஞர்கள், அந்தக் கிணறு இருக்குமிடம் தமக்குத் தெரியும் என்று சொல்லி நீருக்குள் குதித்து சுமார் பதினைந்து நிமிடங்களில் அந்த வாலிபனின் உயிரற்ற உடலை சுமந்து கொண்டு வெளியே வந்தார்கள். எனது இதயத்திற்குள் பொங்கிய சோகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. 'எவ்வளவு சுகங்கள் சுகிக்கவேண்டிய வயது......!' மீண்டும் அந்த இளைஞர்கள் நீருக்குள் மூழ்குகின்றார்கள். அவர்கள் சுமந்து வரப்போகின்ற அந்த அழகியின் சடலத்தை பார்க்கும் சக்தி எனக்கில்லை.

இன்னும் சிறிது நேரத்தில் இந்த சோகத்தின் பின்னணியாய் அமைந்த, அந்த இளம் உள்ளங்களை சேரவிடாது தடுத்த, பெற்றோர்களோ, உற்றார்களோ சேர்ந்து வருவார்கள். சேர்ந்து புலம்புவார்கள். அந்த உடல்களை பிரித்து எடுத்துச் செல்வார்கள். ஒருவேளை தங்களின் தவறை உணர்ந்து இறப்பில் இணைந்த அந்த இளம் உள்ளங்களை இணைத்தே புதைப்பார்கள்.

என் கண்முன் நிதர்சித்த அந்த சோக நிகழ்வை என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. கண்களில் கசிந்து கொண்டிருந்த கண்ணீருடன் திரும்பி நடக்கிறேன். மீண்டும் ஒரு உண்மைக் கதையுடன்.....! ■

---

# சுதந்திரம்!

எம்.சுரேஷ்

அலுவலகத்திலிருந்து ரூமுக்கு வந்த சிவா என்றுமில்லாதவாறு சினிமாப் பாடல் வரிகளை முணுமுணுத்தான், இடைக்கிடை விசிலடித்தான், கண்ணாடி முன் நின்று தன் சிகை அலங்காரத்தைத் தானே இரசித்தான்... சுருக்கமாகச் சொன்னால் சிவா இன்று அதிகபட்ச மகிழ்ச்சியில் இருந்தான்.

'இவனுக்கு ஏது இந்த மகிழ்ச்சி?'

சிவாவின் ரூம் மேட் நாதனுக்கு புதிராக இருந்தது.

"மச்சி! பொண்ணு சம்மதம் சொல்லிட்டாளா?"

"எந்தப் பொண்ணு?"

"எந்தப் பொண்ணுன்னு எனக்கெப்பிடித் தெரியும்?"

"அப்போ எதுக்கு அப்பிடிச் சொன்ன?"

"நீ அடிக்கிற விசில் சத்தத்தில் இருந்தே இது ஒரு பொண்ணு விசயம்ன்னு நல்லாத் தெரியுதே!"

"கரெக்ட், ஆனா இது காதல் வெற்றியில்ல"

"அப்போ தோல்வியா?"

"அதுவுமில்ல, இருந்த காதலைக் 'கட்' பண்ணிட்டேன்!"

"ஏன்டா? பழைய ஃபிகர விட சூப்பர் ஃபிகர் ஒன்னு செட்டாயிருச்சா?

"சேச்சே!"

"அப்போ இவ்வளவு சந்தோசத்துக்கு என்னடா காரணம்?"

(கவுண்டமணி ஸ்டைலில் நாதன் கேட்க சிவா சிரித்தான்)

"அதெல்லாம் காதல் கத்திரிக்காய்ன்னு சீரழிஞ்சவனுக்குத்தான்டா தெரியும்.. எங்க ஆபீஸ் டைப்பிஸ்ட் பஞ்சவர்ணத்தை என்னைக்கு லவ் பண்ணினேனோ அன்னையில இருந்து நான் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமில்லடா...

என் இஷ்டத்துக்குப் பேச முடியாது, ஜோக்கடிக்க முடியாது, நெனைச்ச மாதிரி உடுக்க முடியாது. தலைமுடி வளர்க்க முடியாது..."



"ஏதாவது வியாதியா?!"

"வியாதியில்லடா. இதெல்லாம் பஞ்சவர்ணத்தின் சட்ட திட்டங்கள். சுருக்கமாச் சொன்னா ராமராஜன் மாதிரி நான் வாழணும்ன்னு என் காதலி ஆசைப்பட்டா."

"அப்புறம்?"

"அப்புறமென்ன, அதெல்லாம் சரிப்பட்டு வராதுன்னு காதலைக் 'கட்' பண்ணிட்டேன். சத்தியமாச் சொல்றேன்; உண்மையான சுதந்திரத்தை இப்பதான் மச்சி நான் முழுசா அனுபவிக்கிறேன்!"

சொல்லியபடியே 'சத்தியா கட்' வெட்டிய தன் தலையைத் தடவிக் கொண்டு சிவா சிரித்த சிரிப்பில் உண்மையான மகிழ்ச்சி தெரிந்தது!! ●



படிப்பகம்

www.padippakam.com




# மனிதப் பாம்பு

தருவது ரசிகன்

மன்னவனுக்கு மாமன் முறை!
மற்றவர் அவனிடம் அஞ்சினர்.
கற்றவர் யாவரும் வெறுத்தனர்.
நற்றவர் யாவரும் ஒதுங்கினர்!

உறவல்ல மன்னா- அவன்
உள்ளேயிருக்கும் ஒரு பாம்பு!
துறந்துவிடு மன்னா அவன் உறவை!
இரந்து மன்றாடினார் அமைச்சர்.

"நல்லவனல்ல, எனக்கும் தெரியும்
வல்லவனல்ல, அதுவும் தெரியும்.
எனவே அவனிடம் என்ன பயம்?
விட்டுத்தள்ளும், பிழைத்துப் போகட்டும்!"
மன்னன் பதிலில் அலட்சியம் தெறித்தது.

மங்கையரை கூட்டிவைத்து
மாமன் போட்டி நடத்தினான்.
"சுந்தரிகளே! உங்களில் என்னை
சொக்கவைப்பது யாரடி?"

நரை விழுந்தது முடியில் மட்டும்
திரை விழவில்லை ஆசையில் மட்டும்.
வரை முறையில்லாமல் மாமன் ஆடினான்.
விரைவாகச் செய்தி மன்னனைச் சேர்ந்தது.

"யாரும் மாமா, தாரும் விளக்கம்.
யாரும் துணியாத காரியம் செய்கிறீர்.
பேரும், புகழும் மூழ்கிப்போகுமே?
தாரும்..விளக்கம் தகுந்த முறையில்!"

"நாட்டுக்கு நீ மன்னனாயிருக்கலாம்.
வீட்டுக்குள் நீ எனக்கு மருமகன்!
கேட்டுக்கு வித்திடும் காரியம் செய்து
நாட்டுக்குள் உந்தன் பெயர் கெடுப்பேனோ?"

மாமன் நடிக்க, மன்னன் தயங்கினான்;
"செய்திகள் பல செவியில் விழுகிறதே
சோதித்தறிவது என் முறைதானே?
மாமனுக்கு ஒருநீதி என்று மற்றோர் நினைப்பர்
மன்னனுக்கு அது அழகாய் இருக்காதே!"

"நீ என் இரத்தம், நான் உன் இரத்தம்.
உனக்கொரு கேடு என்னால் வருமோ?
'போய்விடு' என்று சொல்-இதோ
நான் புறப்பட்டு விடுகிறேன்!"

"வேண்டாம் மாமா! பொறுத்துக் கொள்க!
தீயவர் சொல் கேட்டு விட்டேன்
தூயவர் உங்களை சோதித்துவிட்டேன்!

"மழலை உதைத்தால் மார்பு பிளக்குமா?
விரலை நகம் பிரிந்து போகுமா?"
குரல் கம்ம மாமன் சொல்லிப் போனான்.

"மன்னா! உங்களைக் கண்டித்தாரோ?"
மாங்குயில் ஒருத்தி வினா தொடுத்தாள்.

"யாரடி மன்னன்? முட்டிவாயை!
பாரடி ஒருநாள் நான்தான் மன்னன்!"
மாமன் மார்பை நிமிர்த்திச் சொன்னான்.

"தகுதியும் உண்டு, தரமும் உண்டு.
பெருமதி உண்டு, பெறுமதியும் உண்டு.
நாளைய மன்னா எனக்கொரு ஆசை!
எடுத்துச் சொல்லவா? ஒளித்து வைக்கவா?"

"எதையும் நீதான் ஒளிப்பதேயில்லையே
இதை மட்டும் ஏனடி ஒளித்து வைக்கிறாய்?
அவிழ்த்துப் போடடி, அதென்ன இரகசியம்?"

"நீர் நாட்டை ஆளவேண்டும்-நான்
எப்போதும் உம்மை ஆளவேண்டும்!"

"நாணிக்கோணாதே-உனக்கிது புதிது!
ராணியாகும் உன் ஆசையில் இல்லைப்பழுது!"

மங்கையின் அணைப்பில் மாமன் கிறங்கினான்.
காமனின் அம்புகள் மாமனை வதைத்தன.

"கொய்யாக் கனிகள் இரண்டு,
கொண்டு வந்தேன் இதை உனக்கு!
உண்ணா இதழ் சிவப்பு-அதை
உனக்கெனத் தந்தேன் நீ அருந்து!
மையில் விழி எழுதி-உன்னில்
மையல் கொண்டேன் பெறு விருந்து!
கையால் எனை அணைத்து-இது
மெய்யா என வியந்து-நீ
பொய்யாத சுகம் பெறுவாய்!"

"கார் குழலில் மலர் தொடுத்து
தேர் போல் அசைத்து வந்தவளே!-குழலில்
மலர் தேடி உன் பின்னால்
ஒரு கோடி வண்டு வரும்! உன்
மார்பிலிரு தாமரைகள்
என் கண்களுக்கு தூதுவிடும்.
உன் மலர்மேனி பின்னாலே
இந்த வண்டும் வரும்!"
வயதான மாமன் வாலிபனானான்.

"மன்னராய் மாற-நான்
மருந்தொன்று சொல்லவா?"

"தந்த விருந்து இனித்தது-என்
வாலிபம் திரும்பி வந்தது.
தரப்போகும் மருந்தும் இனித்தால்
பெறப்போகும் பதவியில் பாதி உனக்கு!"

"வளரும் வாரிசின்
வாழ்வை முடிக்க வேண்டும்!"
மங்கை விஷம் விதைத்தாள்.

"என்ன சொல்கிறாய்?
மன்னனின் குழந்தையை
கொய்யவோ சொல்கிறாய்?
மாபாதகம் அல்லவோ?"
மாமன் சற்றே அஞ்சினான்.

"பாவத்தை நினைத்தால் பதவி சேராது
வாரிசு வளர்ந்தால் உமது சிரசில்
மன்னன் என்ற மகுடம் ஏறாது!"
அணைத்தாள், இதழால் நனைத்தாள்
மறைத்தாள், மதியை மறைத்தாள்.

"விசாரணை வந்தால்
விலங்கு ஏறுமே கரத்தில்!

"எதிரிகளின் சூழ்ச்சியென்று
மன்னனின் மனதில்
மாறாத கோபத்தை விதையும்.
படையெடுப்பான் மன்னன்
பலியாவான் படு களத்தில்!"

"மஞ்சத்தில் நீயொரு சுந்தரி
மதியுகத்தால் நீயொரு மந்திரி!"
மாமன் மார்போடு தழுவினான்.

"ஏனடி நகைக்கிறாய்?
அணைப்பிலே குறையோ?-உன்
நினைப்பிலேதான் பழுதோ?"

"அணைப் பலம் உம் மேனி
அணைப்பில் வதைகிறது என்மேனி.
நகைத்தது மன்னனை நினைத்து
வெளுத்ததெல்லாம் பால் என்று
விஷத்தையும் குடிப்பார் மன்னர்
நினைத்தேன் அதை, நகைத்தேன் அதனால்!"

இருளோடு இருளாய் மாமன்
இரைதேடும் குறுவாள் கரத்தில்!
இமைமூடி குழந்தை தொட்டிலில்!
இடைதுவள ராணி தூக்கத்தில்!

மாமன் கரம் ஓங்கினான்
'போட்டியாய் முளைத்தாயே
சிறு முயலே செத்துவிடு!
நரிச் சிரிப்போடு உயர்ந்தகரம்
மறுகரமொன்றால் தடுக்கப்பட்டது.
பிடித்தபிடி இரும்புப்பிடி!

"மன்..மன்னா! நீ..நீங்களா?"

"ஆமாம் மாமா! அன்புள்ள மாமா
நான்தான் நானேதான்!
போடா பதரே! உடனிருந்து
கொல்லும் நரியே!"

விசாரணை மன்றத்தில்-
மாமன் பெற்றான் ஆயுள் தண்டனை!

"எப்படி மன்னா-மாமன்
சதியை முறித்துப் போட்டீர்கள்?"
வினா தொடுத்தவர் வியக்க
விடை சொன்னான் மன்னன்.

"உள்ளத்தால் உடன்பாடில்லாதவருடன்
வாழ்வதும் ஒன்றுதான்-ஒரு குடிசையில்
பாம்போடு வாழ்வதும் ஒன்றுதான்.
சொன்னவர் திருவள்ளுவர்.
நான் மறக்கவுமில்லை. பாம்பைப்
பகவென நினைக்கவுமில்லை"

மன்னன் சொல்ல மற்றோர் வியந்தனர்.
"விலங்கினில் பகவும் உண்டு
மனிதரில் பாம்பும் உண்டு
இனம் தெரிந்தால் மீட்சி உண்டு"
மன்னன் சொல்லி வணங்கினான்.

மன்னன் மறக்காத திருக்குறள் இதுதான்;

"உடம்பாடு இல்லாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று"

குறள்-890-அதிகாரம்-89

## இந்திய அணியில் புதுமுகம்



இந்திய-தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக இந்திய அணியில் இடம்பெற்றிருக்கும் புதிய முகம் வி.வி.எஸ். லக்ஷ்மன்.

ஹைதராபாத்தின் இடதுகைத்துடுப்பாட்ட வீரரான இவர், தான் இந்திய அணிக்குத் தேர்வு செய்யப்பட்டது குறித்து மகிழ்ச்சியோடு கூறிய கருத்து இது:

"இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என்று சிறுவயது முதலே நான் நினைத்தது உண்டு. அந்த எண்ணத்தினால் தான் உள்ளூர்ப் போட்டிகளில் உறுதியுடன் விளையாடினேன். இந்திய அணியின் முன்னாள் கப்டன் அசாருதீன்தான் எனது மானசீக குரு. அசாருதீனின் பேட்டிங் ஸ்டைல் தான் எனக்கு வழிகாட்டி. குறிப்பாக அவரது நளினமான ஓன் சைட் ஷொட்கள் என்னை மிகவும் கவர்ந்தன. ஹைதராபாத் அணிக்காக அசாருதீன் ஆடும்போது, அவர் எனக்கு ஆட்ட நுணுக்கங்களைக் கற்றுத் தந்தார்," என்று கூறியுள்ளார் லக்ஷ்மன்.

இந்தியாவில் நடந்த முதல்தர போட்டிகளில் லக்ஷ்மன் சராசரியாக 57 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதில் 4 சதங்களும், 12 அரைச் சதங்களும் அடங்கும்.

## இரண்டாம் இடத்தில் மோனிகா

உலக தொழில்முறை டென்னிஸ் ஆட்டக்காரர் சங்கம் புதுப்பிக்கப்பட்ட வரிசைப்பட்டியலை அண்மையில் வெளியிட்டுள்ளது. முதல் இடத்தில் இருந்த மோனிகா செலஸ் 2வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். இரண்டாவது இடத்தை ஸ்பெயின் வீராங்கனை அரன்சா சாஞ்செஸுடன் மோனிகா பகிர்ந்து கொள்கிறார்.

சமீபத்தில் கலிபோர்னியாவில் நடந்த போட்டியில் மோனிகா செலசை 6-2, 6-0 என்ற புள்ளிகளில் வென்ற சுவிஸ் வீராங்கனை ஹிஞ்சஸ் 6வது இடத்திற்கு உயர்ந்துள்ளார்.

வரிசைப்பட்டியல் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 1. ஸ்டெபி கிராஃப் | -ஜெர்மனி |
| 2. மோனிகா செலஸ் | -அமெரிக்கா |
| 2. அரன்சா சாஞ்செஸ் | -ஸ்பெயின் |
| 4. கொஞ்சிதா மாட்டினஸ் | -ஸ்பெயின் |
| 5. ஜனா நொவோட்னா | - செக் குடியரசு |
| 6. ஹுபர் | -ஜெர்மனி |
| 7. ஹிஞ்சஸ் | -சுவிற்ஸர்லாந்து |
| 8. டவன் போர்ட் | -அமெரிக்கா |
| 9. இவா மஜோலி | -குரோஷியா |
| 10. கிமிகோ டேட் | -ஜப்பான். |

## ஷார்ஜாவில் மீண்டும் மோதல்

அண்மையில் பாகிஸ்தான், இலங்கை, நியூஸிலாந்து ஆகிய அணிகள் கலந்து கொண்டு ஷார்ஜாவில் சிங்கர் கிண்ணப் போட்டிக்காக விளையாடின. பாகிஸ்தான் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் ஷார்ஜாவில், ஷார்ஜா கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தத் தகவலை போட்டி ஏற்பாட்டுக் குழு அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏப்ரல் 3ம் திகதி தொடங்கி 11ம் திகதி வரை போட்டிகள் நடைபெறும். இப்போட்டியில் பாகிஸ்தான், இலங்கை, ஸிம்பாப்வே ஆகிய நாட்டு அணிகள் பங்கேற்கின்றன.

இந்திய அணிக்கும் இப்போட்டியில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் இந்திய அணி, மேற்கிந்தியதீவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருப்பதால் இப்போட்டியில் கலந்து கொள்ளாது என்றும் போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

## சிந்தியா பதில்கள்

**★ கடன் வழங்கும் நாடுகள் எந்த நம்பிக்கையில் கடன் தருகின்றன?**
எம். திவாகரன், வவுனியா.

அடக்க, ஒடுக்கமாக தம் முன்னால் நடந்து கொள்ளட்டும் என்ற நல்லெண்ணத்தில் (?!) தருகின்றன.

**★ ஜே.ஆர். ஜயவர்த்தனா இறுதிவரை அரசியலில் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்?**
எம். முகமட், புத்தளம்.

தற்போது கிடைத்த இறுதி மரியாதை கூட ஒருவேளை கிடைக்காமல் போயிருக்கலாம்.

**★ இன்றே-இந்த நிமிடமே சமாதானம் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் என்ன செய்வீர்கள்?**
ஆ. மகேஸ்வரன், கொழும்பு-06.

என்னை நானே கிள்ளிப் பார்த்துக் கொள்வேன்.

**★ டியர் சிந்தியா! சிந்திக்கக்கூடிய ஓர் அம்சம் என்று நமது நாட்டில் என்ன இருக்கிறது?**
க. கணேஷ், ஏறாவூர்-04.

நிறையவே இருக்கிறது. சிந்தித்தால் தலையே வெடித்துவிடும், ஜாக்கிரதை!

**★ சாஜாவில் நடந்த இறுதிப்போட்டியில் நடுவர்களின் தவறான தீர்ப்பினால்தான் பாகிஸ்தான் வென்றது என்கிறார்களே?**
எச்.எம். மர்சூக், மருதானை.

ஒட்டுமொத்தமாக அவ்வாறு கூறுவது ஆட்டத்தைச் சரியாக அவதானிக்காதவர்களின் அவசரக் கருத்து. ஒரே ஒரு தீர்ப்பு மட்டுமே சந்தேகமாக இருந்தது. அதற்கு முன்னரே எட்டு விக்கெட்டுக்கள் வீழ்ந்து விட்டன. வெற்றிக்கு காரணம் பாகிஸ்தான் அணியின் தன்னம்பிக்கை.

**★ வயதைச் சொல்ல பெண்கள் வெட்கப்படுவது மேல் நாடுகளிலும் இருக்கிறதா?**
ஜோன் அலோசியஸ், கண்டி.

அமெரிக்காவில் ஒரு வழக்கு. ஒரு பெண் சாட்சிக் கூண்டில் ஏறிநின்றாள்.

நீதிபதி பெண்ணிடம் கேட்டார்:

"உன் வயது என்ன?"

"18 வயதும் சில மாதங்களும்" என்று பதில் வந்தது. நீதிபதிக்கு பலத்த ஆச்சரியம்.

"சில மாதங்கள் என்றால்?" என்று கேட்டார் நீதிபதி. பெண்சொன்ன பதில்:

"200 மாதங்கள்!"

**★ சிந்தியா! காதலில் வெற்றி பெற ஒரு யோசனை சொல்லுங்கள்?**
எம்.எஸ்., மாத்தளை.

ஹலோ எம்.எஸ்! இதற்கெல்லாம் யோசனை கேட்டால் உருப்பட்டமாதிரித்தான்! என்றாலும் ஒரு குட்டிக்கதை.

ஒரு காதலன் தன் காதலியின் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினான். காதலி வீட்டுக்குள் இருந்தபடி:

"யார் அது?" என்று கேட்டாள்.

"நான் தான் வந்திருக்கிறேன், கதவைத் திற!" என்றான் காதலன்.

"யார் நீ? உன்னை எனக்குத் தெரியாதே. போய்விடு!" என்றாள் காதலி. பாவம், காதலன் மனம் உடைந்துபோனான்.

பின்னரும் அதுபோல பலமுறை சென்று கதவைத் தட்டிப்பார்த்தான். அதே பதில்தான் வந்தது.

ஒருநாள் அவன் கதவைத் தட்டியபோது வழக்கம்போல "யார் நீ?" என்று கேட்டாள் காதலி.

அவள் நினைவாகவே இருந்த காதலன்:

"வந்திருப்பது நீ தான். கதவைத் திற!" என்றான். பட்டென்று திறந்தது கதவு. காதலி ஓடிவந்து; கட்டியணைத்துக்கொண்டு 'போனஸா'கவும் ஒன்று கொடுத்தாள்.

இதிலிருந்து அறியப்படும் ஒப்பற்ற தத்துவம் யாதெனில், காதலிக்கும்போது நான் என்பது நீயாக மாறிவிடுகிறது. டட்ட டாய்ங்!

**★ கலைஞர் கருணாநிதி என்ன செய்து கொண்டிருக்கிறார்? நம் பிரச்சனையில் தலையிட மாட்டாரா?**
ஏ. ஸ்ரீதரன், பதுளை.

மேயராக மாறிய தன் மகன், தன் வாரிசாகத் தலையெடுத்து வருவதை பார்த்து இரசித்துக் கொண்டிருக்கிறார். தலையெடுப்புக்கு தடையான விடயங்களை தான் தலையிட்டு அகற்றுவதற்கே அவருக்கு நேரம் போதவில்லை.

**★ டைட்டன் கிண்ணப் போட்டியில் இந்தியா அசத்திவிட்டதே! என்ன சொல்கிறீர்?**
செல்வி எஸ். விஜயா, கண்டி.

சச்சின் டெண்டுல்கரின் ராசிப்படி ஆரம்பம்தான் தோல்வியில் இருக்குமாம், போகப் போக அசத்தோ அசத்துதானாம். அடுத்தடுத்த போட்டிகளின் பின்னர்தான் ராசி பலிக்கிறதோ என்று தெரியும். டெண்டுல்கர் அருமையான கப்டன் என்பது மட்டும் நூறுசதவீத உத்தரவாதம்.

**★ பிரபுவின் 'பாஞ்சாலங்குறிச்சி' படம் எப்படி?**
பிரபு ரசிகன் ஜெயராஜ், தெகிவளை.

மன்னிக்கவும்: சின்னத் தம்பியை அநியாயமாகத் தழுவி சொதப்பிவிட்டார்கள், சொதப்பி! பிரபுவை இப்படியா உபயோகிப்பது, என்று கவலையாக இருந்தது.

**★ மரணம் என்ற ஒன்று இல்லாவிட்டால் இவ்வுலக மனிதர்கள் எப்படியிருப்பார்கள்?**
எம்.எச். ஜிகானா.

அட போங்க, இப்போது இருக்கக்கூடிய கொஞ்ச நஞ்ச பயமும் இல்லாமல் ரொம்ப அநியாயமாக புகுந்துவிளையாடத் தொடங்கி விடுவார்கள். பூமி தாங்காதம்மா!

**★ மனிதன் எப்போது மகான் ஆகிறான்?**
என்.எம். அஜ்ரீன், ஹொரவ்பொத்தானை.

மரணத்தின் பின்னர்.

**★ கீழ்லோகம், மேல்லோகம் என்று கூறுகிறார்களே. அப்படி இருக்கிறதா?**
பு. மங்களசேரன், மட்/வவுணதீவு.

ஏன் இல்லாமல்? விமானக் குண்டுவீச்சு நடைபெறும் பகுதிகளில் மக்கள் கீழ்லோகத்தில்தானே ஒளிந்துக் கொள்கிறார்கள்: மேல்லோகத்தில் ஒழிந்துபோகிறார்கள்.

**★ நடிகர் கமல் பெண்வேடம் போடுவது இதுதான் முதல் தடவையா?**
என். ரவீந்திரன், அப்புத்தளை.

இல்லை. 'பேர் சொல்லும் பிள்ளை' படத்திலும் பெண் வேடம் போட்டிருக்கிறார்.

**★ டியர் சிந்தியா! விவகாரமான ஒரு கதை சொல்ல முடியுமா?**
ஜெ. சாந்தி, குருநாகல்.

இரண்டு நண்பர்கள் சந்தித்துக் கொண்டார்கள்.

**முதல் ஆள்:** நான் நூறு ரூபாய் கடன் கேட்டேனே கொண்டு வந்தாயா?

**இரண்டாவது ஆள்:** கொண்டு வந்திருக்கிறேன்.

**முதல் ஆள்:** அப்படியா? நல்லதாய் போச்சு. 50 ரூபாய் மட்டும் கொடு போதும்.

**இரண்டாவது ஆள்:** ஏன் 50 ரூபாய் மட்டும் போதும் என்கிறாய்?

**முதல் ஆள்:** எல்லாம் காரணமாகத்தான்! இன்னும் எனக்கு நீ 50 ரூபாய் தர வேணும். உனக்கு நான் 50 ரூபாய் தர வேணும். கணக்கு சரியாய்ப் போச்சு. யாரும் யாருக்கும் தரவேண்டாம்.

**★ பெண்கள் அமைப்புக்களின் எதிர்ப்பால் அழகிப் போட்டி பாதிக்கப்படுமா?**
வே. வாகீசன், சிலாபம்.

வருத்தப்படாதீர்கள் வாகீசன். தென்னாபிரிக்க அழகிக்கு நெல்சன் மண்டேலா முத்தம் கொடுத்த புகைப்படம் இந்திய மதிப்பில் 20 ஆயிரம் ரூபாய்க்கு பெங்களூரில் ஏலம் போயிருக்கிறது. மற்றொரு கொசுறு செய்தி: அழகிகளின் விருந்தில் ரஜினியும் கலந்துகொண்டு சிறப்பித்திருக்கிறார். அழகிகளோடு விருந்துண்ண பிரபலங்கள் மத்தியில் போட்டியோ போட்டி. அதற்காக வசூலிக்கப்பட்ட கட்டணம் மட்டும் இந்திய மதிப்பில் 1.4 இலட்சம். அழகை அதிக செலவில் ஆராதிக்கிறார்கள்.





படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 58

இராமபிரானுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான அனுமன் ஆகாயத்தைத் தொடும் அளவு வளர்ந்து விட்டார். இக் கண்கொள்ளாக் காட்சி உடனிருந்த வானர சேனைக்கு பெரும் குதூகலத்தை ஏற்படுத் தியது. இளவரசன் அங்கதன் பெரு மகிழ்ச்சி அடைந்தான். அனுமனால் சீதா பிராட்டியார் இருக்குமிடம் கண்டுபிடிக்கப்பட்டால் அவருடன் சேர்ந்து அப்பணியிலீடுபட்ட தனக்கும் தன்குழுவினருக்கும் பெருமை ஏற்படும்: இராமபிரானின் பேரருள் கிட்டும் என்று அங்கதன் ஆனந்தக் கூத்தாடினான்.

அனுமன் தொடர்ந்து இராம மந்திரத்தை உச்சரித்த வண்ணம் இருந்தார். கடற்கரை யெங்கும் வானரப் படைகள் நின்றிருந்தன. சின்னஞ் சிறு பூச்சிகள் போல் அனுமனின் கண்களுக்கு அவர்கள் காட்சிதந்தனர். அவர்களில் ஜாம்பவனையும் ஜடாயுவின் அண்ணனான சம்பாதியையும் ஆஞ்சநேயர் நோக்கி இருகை கூப்பி வணங்கினார்.

"பெரியோர்களே! குழுமியிருக்கும் எனது சகோதரர்களே! இராமபிரான் நமக்கிட்ட பணியினை செவ்வனே நிறைவேற்றும் பொறுப்பினை மிக்க நம்பிக்கையுடன் என்னிடம் ஒப்படைத்தீர்கள். அண்ணன் ஜாம்பவன் கூறியது போல் என்னிடம் ஆற்றல்கள் புதைந்து கிடந்தாலும் அவ்வாற்றல்களை வெளிப்படுத்த உறுதுணையாக நிற்பது அந்த ராம நாமமே! அதனை இன்று பூரணமாக உணர்ந்து கொண்டேன். உங்கள் அனைவருடைய நல்லெண்ணமும் என் பணியில் உற்ற துணையாக நிற்கும் என்று நம்புகிறேன். நான் இலங்காபுரி ஏக எனக்கு விடை தாருங்கள்!" என்று ஆஞ்சநேயர் வேண்டிக் கொண்டார்.

கிட்கிந்தா காண்டத்தின் இறுதியில் கம்பர் பெருமான் தரும் பாடல் ஆஞ்சநேயரின் விசுவரூபத்தை விளக்கிக்காட்டுகிறது.

மின்னெடுங் கொண்டல் தாளின்
வீக்கிய கழலின் ஆர்ப்ப
தன்னெடுந் தோற்றம் வானோர்
கட்புலத்து எல்லை தாவ
வன்னெடுஞ் சிகர கோடி
மயேந்திரம் அண்டம் தாங்கும்
பொன்னெடுந் தூணின் பாத
சிலையெனப் பொலிந்து நின்றான்.

(கிட்கிந்தா காண்டம்-1030)-4737

**பொருள்:-** *அனுமனுடைய கால்கள் மேகங்களைத் தொட்டு நிற்கின்றன. அம் மேகங்களிலுள்ள மின்னல் அனுமனின் கால்களில் உள்ள வீரக்கழல்களில் தொடும் போது ஒலி எழுகிறது. அவனுடைய மேனி விண் தொட்டு வளர்ந்து விட்டமையினால் விண்ணவர்களான தேவர்கள் அனுமனுடைய தேகத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. மிக உயர்ந்த சிகரங்களைக் கொண்ட மகேந் திரமலை மீது அனுமன் ஏறி நிற்கிறான். அந்த மலையானது பூவுலகையே தாங்குகின்ற பொன்னாலான உயர்ந்து நீண்ட தூணின் அடிப்பாகத்திலுள்ள கல்லைப்போல் காட்சியளிக்கிறது.*

○●

கடற்கரை மண்ணில் அனுமன் நின்றிருந்தால் விண் முட்ட வளர்ந்திருந்த அவனைத் தாங்கும் சக்தி அந்நிலத்துக்கிருக்காது. ஆகவே மகேந்திர மலை மீது நின்றவாறு தன் விசுவரூபத்தை அனுமன் எடுத்தார்.

### தண்டனை தேவையில்லை

தென்திசை நோக்கிச் சென்ற அனுமனும் குழுவினரும் திரும்பிவரவில்லை. வடக்கு நோக்கி சதபலி என்ற வானர வீரன் பெரும் வானரப்படையுடன் சென்றிருந்தான். வினதன் என்ற வீரனின் தலைமையில் கிழக்கு நோக்கிப் பெரும்படை சென்றது. மேற்கே சென்ற வானரப்படைக்கு சுசேசணன் தலைமை தாங்கிச் சென்றான். இவர்களெல்லாம் காடு, மேடு, வனாந்தரங்கள், நாடு நகர்ப்புறங்களிலெல்லாம் தேடுதல் நடத்திவிட்டு களைப்புடன் கிட்கிந்தை திரும்பினர். சீதாபிராட்டியாரை எங்கு தேடியும் காணவேயில்லை என்று சுக்கிரீவனிடம் முறையிட்டனர். சுக்கிரீவன் கடும் சினங்கொண்டு வானரவீரர்களைத் திட்டித் தீர்த்தான். மூன்று திசைகளுக்கும் சென்ற குழுத் தலைவர்களை அழைத்துக் கொண்டு உருசியமுக மலைக்குகையில் வாழ்ந்த இராமரிடம் சென்றான். தங்கள் தேடுதல் முயற்சியில் வெற்றி பெறாத அவர்களைத் தண்டித்தாக வேண்டும் என்று இராமரிடம் சுக்கிரீவன் சொன்னான். இராமர் புன்னகை புரிந்தவராக, அவர்களை மன்னித்துவிடும்படி கூறினார். அத்துடன் சீதை எங்கிருக்கிறாள் என்பதை அறிய முடியாதவர்களை எவ்வாறு கோவிப்பது-எவ்வாறு தண்டனை வழங்குவதென சுக்கிரீவனிடம் வினவினார். சீதை இல்லாத இடங்களில் தேடிய அவர்கள் குற்றவாளிகளல்ல என்றும் கூறினார்.

அனுமனும் குழுவினரும் குறிப்பிட்ட காலத்துக்குள் வராமையினால் அவர்கள் சீதை இருக்குமிடத்தை நிச்சயம் கண்டறிந்து தான் வருவார்கள் என்று இராமரே சுக்கிரீவனிடம் எடுத்துரைத்து தைரியமும் கூறினார்.

## ஆஞ்சநேயரின் அருமை பெருமைகள்




இருப்பினும் அப்போது இளவேனிற்காலம் புதுப்பொலிவுடன் விளங்கியமையினால் சீதையின் நினைவு இராமரைப் பெரும் பாடு படுத்தியது என்பதை மறுக்க முடியாது. தனது உள்ளக்கிடக்கையை சுக்கிரீவனிடம் வெளிப்படுத்த விரும்பாதவராக, அவனுடன் சிறிது நேரம் உரையாடிவிட்டு அமைதியுடன் இருந்தார். இலக்குவன் அண்ணனுக்கு வேண்டிய பணிகளைச் செய்து முடித்தான்.

### சோகமே உருவான சீதாப்பிராட்டியார்

இலங்கை மாநகரின் மத்தியிலே அமைந்த அழகிய குன்றின் மீது அசோக வனம் இருந்தது. பச்சைப் பசேல் என்று கம்பளம் விரித்தாற்போல் பசுமை படர்ந்திருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் பல வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்செடி கொடிகள்; தீஞ்சுவைக் கனிவர்க்கங்கள். மலர்களின் நறு மணத்துடன் நன்கு கனிந்த கனிகளின் வாசனையும் சேர்ந்து எங்கும் சுகந்தம் பரவியிருந்தது. பகலவன் பயணம் தொடங்கி பல நாழிகைகளாகி விட்டபோதிலும், அடர்த்தியான பெருமரங்கள் சூழ்ந்த அந்தப்பெரு வனத்துள் ஒளி குறைவாகவே புகுந்திருந்தது. இதமான குளிர் காற்று மென்மையாக வீசியது. வசந்தத்தின் ஆட்சி பூரணப் பொலிவுடன் கொலுவீற்றிருந்த போதும் அந்த மரத்தடியில் சோகமே உருவாக சீதாப் பிராட்டியார் தென்பட்டார். கோர உருக் கொண்ட அரக்கியர் பலர் காவலுக்காக அமர்ந்திருந்தனர். இராம பிரானின் எண்ணத்தைத் தவிர வேறு எதிலும் தன் சிந்தனையைச் சிதற விடாது பிராட்டியார் ஏகாந்தமாக இருந்தார்.

✻✻

விசுவரூபமெடுத்து வான மண்டலத்தில் தன் தலையைப் புகுத்திப் பார்த்த ஆஞ்சநேயருக்கு அங்கே பெரிய அழகிய நகரம் ஒன்று கண்ணில்பட்டது. ஏற்கனவே கழுகரசனும் ஜடாயுவின் அண்ணனுமான சம்பாதி மூலம் இலங்காபுரியின் எழில் கோலம்தனைப் பற்றி அனுமன் அறிந்திருந்தார். அந்த இலங்காபுரிதான் தன் கண்ணில் தென்படுகிறதோ என்று ஆரம்பத்தில் ஐயமுற்றார். சற்று நேரத்தில் உண்மையை உணர்ந்து கொண்டார்.

மகேந்திர மலையில் நின்றவண்ணம், தான் மேற்கொள்ளும் பணி வெற்றிபெற அருள் புரியவேண்டும் என்று ஆஞ்சநேயர், கிழக்கு முகமாகத் திரும்பி நின்று தனது தந்தையாகிய வாயு பகவானைத் துதித்தார். மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோரையும் வணங்கினார். தனது ஒளிக்கிரணங்களைப் பரப்பிய வண்ணம் வான வீதியில் பவனி வந்து கொண்டிருந்த கதிரவனுக்கும் வணக்கம் செலுத்தி னார்.

இந்திரனையும், நவகோள்களில் ஏனையவற்றையும் உரிய முறைப்படி மனதால் பூஜித்தார். தான் மேற்கொண்ட பணி இனிதே நிறைவேற சகல தேவதைகளின் ஆசிகளையும் இறைஞ்சினார்.

பிரார்த்தனையை முடித்துக் கொண்டு அனுமன் தன் ஐம்புலன்களையும் ஒரு முகப்படுத்தி இலங்காபுரியை நோக்கிச் செலுத்தினார். அவருடைய கால்கள் முன்பைவிட அதிக உறுதிபெற்றதும் அவருடைய உடல் காற்றைப்போல் மென்மையாகியது. கால்களுக்கு உந்து

**இராஜகுமாரன்**

சக்தியைக் கொடுத்து மேலெழத் தொடங்கிய போது மகேந்திர மலையைப் பூகம்பம் தாக்கியதைப் போன்ற அதிர்வு எற்பட்டது. அம்மலையின் மேற்பரப்பில் வெடிப்புகள் ஏற்பட்டன. சில சிகரங்கள் உதிர்ந்தன. மலைக்குகைக்குள் வாழ்ந்த வன விலங்குகள் பயத்தால் பாய்ந்து வெளியேறி ஓடத் தலைப்பட்டன. மலை மீதிருந்த பெரு விருட்சங்கள் வேரொடு சாய்ந்தன. மரங்களில் கூடு கட்டி வாழ்ந்த குருவிகளெல்லாம் கூவிக் கொண்டு பறந்தன. மலையடிவாரத்தில் புற்றுகளிலும் பொந்துகளிலும் வாழ்ந்த பாம்புகளும் வேறு ஊர்வனவும் வெளியேறி ஓடிக்கொண்டிருந்தன.

ஆஞ்சநேயர் விண் நோக்கிப் பாய்ந்த வேகத்தில், மலையிலிருந்து சாய்ந்த மரங்களும், அக்கானகத்தில் பன்னெடுங்காலம் வேரோடி வளர்ந்த மரங்களும் நிலையிழந்து சாய்ந்து, அனுமனின் வேகத்துடன் போட்டி போடுவதுபோல் விண்ணுக்கு இழுத்துச் செல்லப்பட்டன. ஆனாலும் அனுமனைத் தொடர்ந்து போக முடியாமல் அத்தனையும் அலை கடலின்மீது விழுந்தன. அம்மரங்கள் வீழ்ந்தமையினால் கடல் நீர் அதிர்ந்து மேலெழுந்து வீழ்ந்தது.

ஆஞ்சநேயர் அரும் பெரும் குணங்களைக் கொண்டவர். மேருமலைக்கும் மேலாக வளரக்கூடிய ஆற்றல் பெற்றவராயினும் அதே உருவத்தை சின்னஞ் சிறு வண்டினைப்போல் குறுகிய உருவெடுக்கவும் வல்லமை பெற்றவர். மூவுலகங்களிலுமுள்ள பொருட்கள் அனைத்தும் எதிர்த்து வந்த போதிலும் அவை அனைத்தையும் தனியே நின்று பொடி பயுச் செய்யும் உறுதியுடையவர். சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவர்: ஏனையோருடன் அன்புடனும் பண்புடனும் பழகுவதில் சிறப்புடையவர்: அறிவு பூர்வமாக உரையாடுவார்: பெண்களை ஏறெடுத் தும் பாராதவர்; பிரம்மாவைவிட அதிக ஆயுளை உடையவர்; தான் விரும்பினாலன்றி மரணமடைய முடியாத வரத்தைப் பெற்றவர்.

இத்தகைய ஆற்றல்களை ஒருங்கே கொண்ட ஆஞ்சநேயர் இராமபிரானிடத்தில் பெரும் பக்தி கொண்டு இராமகாதையில் ஒப்பரிய பாத்திரமாக விளங்குகிறார். இராம பிரானை இறைவனாக எண்ணி வழிபடுவோரெல்லாம் அனுமனையும் பக்தியுடன் பூஜிக்கின்றனர்.

இந்தக் கட்டத்தில் கிட்கிந்தா காண்டத்தை நிறைவு செய்து கொண்டு அடுத்து சுந்தர காண்டத்தின் சிறப்பை நுகர்வோமாக.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 56**

சரியானவிடை:- ஆஞ்சநேயர்.

1. ஏ. தமிழ் விழாசனி. ரட்ணிலகல எஸ்டேட், தலவாக்கலை.
2. மனோ கோபாலன். 16, நவீனசந்தை கட்டிடம், அப்புத்தளை.
3. பே. பிரபாகரன். சரஸ்வதி வித்தியாலயம், மகிழூர், களுவாஞ்சிகுடி.
4. கே. பிரசாந்தினி. 14/26, அளுத்கந்த, பூனாகல வீதி, பண்டாரவளை.
5. ஏ.எச். அமீர்., 49, உடதலவின்ன, மத்திகே-கட்டுகஸ்தோட்டை.

**போட்டி இல. 58** கேள்வி:- அனுமன் ஏறி நின்ற மலை எது?

நவம்பர்.30 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி-இல.58, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

# காதில பூ கந்தசாமி

**ஆச்சி மனோரமாவை ரஜினி மன்னித்து விட்டார். ஜெயலலிதாவையும் மன்னிப்பாரா? காதிலை பூ கந்தசாமியார் ரஜினியையும், ஜெயலலிதாவையும் சந்திக்க வைக்கிறார்.**

## ரஜினி - ஜெயலலிதா நேருக்கு நேர்

ரஜினி:- வாங்க! நீங்க ரொம்ப ரொம்பப் பெரியவங்க நீங்க என் வீடு தேடி வரலாமா?

ஜெயா:- நீங்கள் ஒரு தடவை என்வீட்டுக்கு வந்திருந்தா நூறுதடவை வந்ததா பத்திரிகைக்காரங்க செய்தி போட்டிருவாங்களே! அதுதான் நானே வந்துட்டேன்.

ரஜினி:- வரணும் என்றிருந்தா வந்துதான் ஆகணும். வரக்கூடாது என்றிருந்தா வரவே முடியாது. யார் யாரு வரணும் என்றிருக்கோ அவங்கவங்க வந்துதான் ஆகணும். யார் யாரு வரக்கூடாது என்றிருக்கோ அவங்க வரவே முடியாது. நான் சொல்லுறது வீட்டுக்கும் பொருந்தும், நாட்டுக்கும் பொருந்தும். ஹாஹாஹா.

ஜெயா:- நீங்க பொடி வைச்சுப் பேசுறீங்க.

ரஜினி:- அறிஞர் அண்ணா ரொம்ப ரொம்ப பெரிய தலைவரு. அவரு பொடி போட்டாரு. ஐ மீன் மூக்குப் பொடிபோட்டாரு. ஆனா வெடி போடல்ல. யாரும் வெடி போடவும் விடல்லே. உங்க ஆட்சியிலே நீங்க வெடி போட்டவங்களை கண்டுக்காம இருந்தீங்க. அது எனக்குப் பிடிக்கேல்லை. 'நிறுத்துங்கம்மா' என்று சொன்னேன். நீங்க என்னை வெறுத்துட்டீங்க.

ஜெயா:- நீங்க என்ன சொல்லுறீங்க ரஜினி?

ரஜினி:- பொடி போடலாம். வெடிபோடக்கூடாது என்று சொல்லுறேன். கேட்டிருந்தீங்கன்னா இப்படி படி படியாக ஏறியிருக்க மாட்டீங்க. எத்தனை படிபாருங்க. ஜெயில் படி, கோர்ட்டுப்படி, என் வீட்டு வாசல் படி. ஹாஹாஹா

ஜெயா:- (பாடுகிறார்)
நீ சிரித்தால் சிரிப்பழகு
நீ பேசும் தமிழ் அழகு
நீயொருவன் தான் அழகு

ரஜினி:- முகஸ்துதி எனக்குப் பிடிக்காது. என்னை விட்டுடுங்க. நான் குடிச்சது தாய்ப்பாலு. என்னை வளர்த்தது தமிழ்ப் பாலு.

ஜெயா:- யாருங்க அது பாலு.

ரஜினி:- பாலு இல்ல, பால்! மில்க்.. மில்க்!

ஜெயா:- ஓ.ஐஸீ! ரஜினி என்னை மன்னிச்சுடுங்க. என்னைச் சுற்றியிருந்தவங்க எனக்குத் தெரியாம தப்புப் பண்ணிட்டாங்க. நாட்டிலே என்ன நடக்குதென்னு எனக்கு தெரியாமல் பண்ணிட்டாங்க.

ரஜினி:- வேண்டாங்க! தப்புக்கு பரிகாரம் தேடுங்க. தப்பிக்க காரணம் தேடாதீங்க! அது ரொம்ப ரொம்பத் தப்பு! அந்தம்மா உங்க கூடவே இருந்தாங்க. இப்போ அவங்க சிறையிலே இருக்காங்க. நீங்க இருக்க வேண்டிய இடத்திலு அவங்க இருக்காங்க அவங்க இருக்க வேண்டிய இடத்தில நீங்க இருக்கீங்க.

ஜெயா:- நான் சிறைக்குப் போகணும் என்கிறீங்களா?

ரஜினி:- எங்கே எப்போ போகணுமா அங்கே அப்போ போகணும் என்ணு சொல்லுறேன்.

ஜெயா:- என்னை மன்னிக்கவே மாட்டீங்களா?

ரஜினி:- நான் யாரு மன்னிக்கறதுக்கு! நமக்கு மேலே ஒருத்தன் இருக்கான். மன்னிப்பை அங்கே கேளுங்க. இங்கே கேட்காதீங்க!

ஜெயா:- ஆச்சியை மட்டும் மன்னிச்சுட்டீங்களே?

ரஜினி:- அவங்க வெறும் அம்பு. நீங்க அம்பை எய்துவிட்ட வில்லு. நீங்க ஏவிவிட்ட அம்பு என் காலடியிலே விழுந்துபோச்சு. எடுத்து என் அலுமாரியிலே வச்சுட்டேன். நீங்க வில்லு. வில்லை எடுத்து வைச்சுக்கிட்டா நான்தான் அதுல அம்பு தொடுக்கணும். வேண்டாம். நான் அம்பு விடமாட்டேன். அன்புதான் விடுவேன்.

ஜெயா:- அப்போ நீங்க மன்னிக்கவே மாட்டீங்களா? சொல்லுங்க?

ரஜினி:- சொல்லுறேன், ஆனா இப்போ சொல்ல மாட்டேன். நேரம் வரும்போது சொல்லுவேன்!

ஜெயா:- எப்போ அந்த நேரம் வரும்?

ரஜினி:- எப்ப வரணுமோ அப்போ வரும்! ஆனா சரியான நேரத்தில வரும்.

ஜெயா:- (பாடுகிறார்)
என்னவனே அட என்னவனே
எந்தன் பதவியைத் தொலைத்துவிட்டேன்
எப்படித்தான் அது தொலைந்ததென்று
அந்த விதத்தையும் மறந்துவிட்டேன்.
உந்தன் கண் அசைவில் அது தொலைந்ததென்று
உந்தன் வீட்டையும் தேடி வந்தேன்.
தேர்தல் என்றால் பெரும் அவஸ்தையென்று
அது வந்ததும் கண்டு கொண்டேன்.
எந்தன் கழுத்துவரை இன்று வழக்கு வந்து
இரு கண்விழி பிதுங்கி நின்றேன்..
(விம்மி விம்மி அழுகிறார்)

ரஜினி:- (பாடுகிறார்)
கொஞ்சநாள் பொறு செல்வி
ஒரு ஜெயில் அறை உனக்குத் தருவார்
கையிரண்டில் விலங்கிடுவார்
அந்த வழக்கினில் தோற்கடிப்பார்.
டில்லியோ, சென்னையோ
எந்தச் ஜெயிலோ நானறியேன்

ஜெயா:- (ஜெயிலில் இருப்பதை நினைத்துப் பார்க்கிறார்)
ஆ.. ஜெயில் அறை ஜெயில் அறை தன்னில்
கொசுக்கடி கொசுக்கடி ஒன்று
கடிக்குது கடிக்குது பாரம்மா
அது கையினில் காலினில் வந்து
கோபமாய் கோபமாய் குத்தி
எழுப்புது எழுப்புது ஏனம்மா
இதயம் இரும்புபோல் ஆகுமா
பறந்தால் சிறை அறை போதுமா
நான் ஜெயிலில் உறங்கவா
இல்லை வெளியில் உறங்கவா?
(நினைவுக் காட்சி 'கட்'டாகிறது.)

ரஜினி:- இங்கே பாருங்கம்மா! நடந்ததை நினைச்சு வருத்தப்படுங்க. நடக்கப்போறதை நினைச்சு வருத்தப்படாதீங்க! நடக்க வேண்டும் என்று இருப்பது நடக்காமப் போகாது. நடக்கக்கூடாதது என்று இருப்பது நடக்காது. நினைக்கிறதெல்லாம் நடக்கிறதும் இல்லை. நடக்கிறதெல்லாம் நாங்க நினைத்ததும் இல்லே.



ஜெயா:- ஆறுதல் சொல்லுறீங்க. எனக்கு ஆதரவா இருப்பீங்களா?

ரஜினி:- ஹா ஹா ஹா நான் சொல்லுறதையும் செய்வேன், சொல்லாததையும் செய்வேன்.

ஜெயா:- எனக்கு ஆதரவா ஒரு வார்த்தை சொலுங்க ரஜினி. நீங்க ஒரு வார்த்தை சொன்னா அதை நூறுவார்த்தையாக்கி அறிக்கை கொடுத்துடலாம்.

ரஜினி:- புதுவருசம் பிறக்கட்டும். நான் என்ன நினைக்கிறேன் என்று சொல்லுறேன்.

ஜெயா:- புது வருசம் வந்தா எனக்கு ஆதரவா அறிக்கை விடுவீங்க என்று நம்பலாமா?

ரஜினி:- நேற்று நான் உங்களை எதிர்த்து பேசினேன். இன்னைக்கு உங்க எதிரே இருந்துபேசிக்கிட்டிருக்கேன். நாளைக்கு...? நான் எப்படிப் பேசுவேன் என்று எனக்கே தெரியாது. அவன்- அதுதான் ஆண்டவன்! அந்த ஆண்டவனைப் பார்த்து என்ன பேசச் சொல்லுறானோ அதன்படிதான் பேசுவேன்.

ஜெயா:- ரொம்ப ரொம்ப குழப்புறீங்க.

ரஜினி:- யாருமே யாரையும் குழப்ப முடியாது. குழம்புகிறவங்க குழம்பிகிட்டுத்தான் இருப்பாங்க. குழம்பாதவங்க தெளிவா இருந்துகிட்டுதான் இருப்பாங்க. கடலை ஒரு கையால் குழப்ப முடியுமா? உலகை ஒரு கையால அசைக்க முடியுமா? ஏன் உங்களைத்தான் ஒரு ஆளாலே தூக்கியிருக்க முடியுமா? நீங்க ஒரு மலை. ஜனங்க சேர்ந்து நின்னு உங்களை அழகா தூக்கி உசரத்திலிருந்து இறக்கிட்டாங்க. நினைக்கிறவங்க நினைச்சா நடக்க வேண்டியது நடக்காமப் போகாது. நினைக்கிறவங்க நினைக்காட்டி நடக்க வேண்டியது நடக்காது. நடக்க வேண்டியது நடக்காட்டி நாடு நல்லா இருக்காது. நாடு நல்லா இல்லாட்டி நாங்க நல்லா இருக்க முடியாது. நாங்க நல்லா இல்லாமப்போனா நம்ம பிள்ளைங்க நல்லா இருக்க முடியாது. நம்ம பிள்ளைங்க..

ஜெயா:- புரிஞ்சுபோச்சுங்க. தெளிவா புரிஞ்சு போச்சு. நான் வாறேங்க!

ரஜினி:- ரொம்ப ரொம்ப தாங்ஸ். நல்லாயிருங்க. கல்லாயிருக்காதீங்க! ஜனங்க காலுக்கு புல்லா இருங்க, முள்ளா இருக்காதீங்க! கஷ்டப்படுறவங்களுக்கு கைகொடுக்கிற பொல்லா இருங்க, பொல்லாதவளா மாறாதீங்க! உறவுகளை சேருங்க, உருவுறவங்களை சேராதீங்க! நல்ல ஆலோசகர்களை தேடுங்க, பொல்லாத ஆசையுள்ளவங்களை சேராதீங்க! பாலும் வெள்ளை, நீங்களும் வெள்ளை! விஷத்தை கலந்திடாதீங்க. அதனாலே உங்களுக்கும் தொல்லை. ஊருக்கும் தொல்லை! பொலிவா இருங்க! மலிவா போகாதீங்க! போய்ட்டு வாங்க! ஹாஹாஹா!

(பாடுகிறார்)
"மண்ணின்மீது மனிதனுக்காசை
மனிதன் மீது மண்ணுக்காசை
மண்தான் கடைசியில் ஜெயிக்கிறது
இதை மனம்தான் உணர மறுக்கிறது."

(ஜெயா தலை குனிந்தபடி, கைக்குட்டையால் மூக்கைச் சிந்தியபடி செல்கிறார்)




படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (QD/24/NEWS/96)
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# உலக உலா





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


← வர்ணக்கலரில் கண்ணைப் பறிக்கும் இந்த பாய்மரக் கலம் அழகானது மட்டுமல்ல; அசத்தலான காரியமும் செய்திருக்கிறது.

குமுறும் கடலையும், கொந்தளிக்கும் அலைகளையும் சந்தித்து புரளாமல், கவிழாமல் உலகைச் சுற்றி வலம் வந்திருக்கிறது. இங்கிலாந்தின் சவுத்தாம்ற்றன் கரையிலிருந்து புறப்பட்ட இப் பாய்மரக் கலம் உலகம் சுற்றும் குழுவினரைச் சுமந்தபடி 59 ஆயிரத்தி 239 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்துவிட்டு, புறப்பட்ட இடத்திற்கு திரும்பியது. சராசரியாக சகல கண்டங்களையும் சுற்றி வந்திருக்கிறது.

பாய்மரக் கலம் ஒன்றில் நீண்ட தூரப் பயணம் நடத்தப் பட்டது இதுவே முதல் முறையும், உலக சாதனையுமாகும். எரிபொருளோ, என்ஜினோ இல்லாமல் காற்றின் விசையால் மட்டுமே செல்வதுதான் பாய்மரக் கலப் பயணம். செலவில்லாத நீண்ட பயணம்தான்! இது எத்தனை ஆபத்தானது என்பது கடலில் பயணம் செய்து பார்த்தவர்களுக்குத் தெரியும்.

முன்னொரு காலத்தில் நம்நாட்டிலும் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இருந்து கட்டுமரங்களில் புகையிலைச் சிப்பங்களை அடுக்கிக் கட்டிக்கொண்டு வியாபாரிகள் சென்றுவந்தனர். வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்காவுக்கு கப்பல்விட்ட வரலாறும் இருக்கிறது. படகுகளில் அகதிகளை ஏற்றிச் செல்வதுதான் நமது தற்போதைய வரலாறு. முன்னைய வரலாறுகளைச் சொல்லியென்றாலும் நாம் சொலரைத் தூக்கிவிட்டுக் கொள்ளவேண்டியதுதான்!

↓ ஒரு உள்ளங்கைக்குள் அடக்கி வைத்துக் கொள்ளலாம். ஒரு கொட்டைப் பாக்கின் எடை அளவுகூட இருக்காது. அதனைவிட பலமடங்கு குறைவானது. படத்தில் இருக்கிறது பாருங்கள் கடுகளவில் ஒரு பறவை. அதைப்பற்றித்தான் கூறுகிறோம்.

உலகிலேயே மிகச் சிறிய பறவை இதுதான். இப்பறவை இனத்தை 'மெலிசுகா பொலநோ' என்று அழைக்கிறார்கள். கியூபாதான் இப்பறவையின் தாயகம்.


இதன் எடை ஆக, 1.6 கிராம் மட்டுமே. இப்பறவையின் நீளம் 5.7 சென்றி மீற்றர் (2 1/4 அங்குலம்). அந்த நீளத்திலும் அரைவாசி இறக்கையும், வாலும்தான். இப் பறவை தேனிபோல இரைச்சலிடும். அபூர்வமான இக் கடுகளவுப் பறவைதான் உலகில் சிறிய பறவையென்று கின்னஸில் பெருமை பெற்றிருக்கிறது.

மற்றொரு உப தகவல்: உலகில் மிகப் பெரிய பறவையென்ற மரியாதை பெறுவது வட ஆபிரிக்காவில் வாழும் தீக்கோழி. இதனால் பறக்கமுடியாது. இதன் உயரம் மட்டும் 2.74 மீற்றர். அதாவது 9 அடி.

## இவ்வளவுதான்




## ஜொலிக்கும் சாதனை



→ பொன் ஆபரணங்களைப் பார்க்கிறோம். ஜொலிக்கும் அந்தப் பொன் ஆபரணங்களைச் செய்ய பிசின்போல பயன்படும் பொருள் அம்பெர் என்று அழைக்கப்படுகிறது. அம்பெரில் பல ரகங்கள் இருக்கின்றன. படத்தில் இருப்பது பர்மிய அம்பெர். இது கடலிலும், பூமியிலும் விளைகிறது. நகை செய்வதற்காக மட்டுமல்ல, வாசனைத் திரவியமாகவும், போதைப் பொருளாகவும் இது பயன்படுகிறது. அதுமட்டுமல்ல பாலியல் சமாச்சாரங்களில் உற்சாகம் பெறுவதற்கும் இது உதவுகிறதாம். அதனால் காதல் மன்னர்கள் மத்தியில் கிராக்கி.

ஆனாலும் இது சுலபத்தில் யாருக்கும் கிடைக்காது. தங்கம், வைரம் போன்றவற்றைவிட இதன் விலை மிக அதிகம்.

படத்தில் காணப்படும் அம்பர் தான் உலகில் இது வரை விளைந்ததில் மகா பெரியது. இதன் எடை 15.25 கிலோ (33 றாத்தல் 10 அவுன்ஸ்) இதன் பெறுமதி [illegible] இலண்டன் இயற்கை வரலாறு அருங் காட்சியகத்தில் இது பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. விஷேசம் நிறைய இருப்பதால் விலை மதிப்பில்லை.



## ஒரே ஒரு ரன்

கிரிக்கெட் போட்டிகளுக்கு நாளுக்கு நாள் ரசிக பட்டாளம் பெருகிக் கொண்டிருக்கிறது. கிரிக்கெட் வீரர்களுக்கு பயங்கரமான மவுசு. தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் கேரி கேர்ஸ்டன் தூள் கிளப்பிவருகிறார்.

ஒரு வருடத்துக்குள் ஆகக்கூடிய ரன்களைக் குவித்த வீரர் என்ற பெருமையை சமீபத்தில்தான் சம்பாதித்திருக்கிறார். கேரி கேர்ஸ்டனுக்கு முன்பாக அப் பெருமை லாராவுக்கு இருந்தது. ஒரு வருடத்துக்குள் 1349 ரன் குவித்திருந்தார் லாரா. அதனை முறியடித்துவிட்டார் கேரி கேர்ஸ்டன்.

கென்யாவில் நடைபெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 1 செஞ்சரி, 2 அரைச் செஞ்சரி போட்டார். இந்தியாவில் நடைபெற்ற 'டைட்டன்' கிண்ணப்போட்டியிலும் ஒரு செஞ்சரியும், இரண்டு அரைச் செஞ்சரியும் போட்டு தூள் கிளப்பினார்.

கேரி கேர்ஸ்டனுக்கு ஒரே ஒரு வருத்தம் இருக்கிறது. கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் ஒரே ஒரு ரன்னில் உலக சாதனை ஒன்று கைநழுவிப் போய்விட்டது. சர்வதேச ஒருநாள் போட்டியில் அதிக ரன் குவித்தவர் மேற்கிந்திய வீரர் விவியன் றிச்சர்ட்ஸ். ஆட்டமிழக்காமல் அவர் அடித்தது 189 ரன்கள்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கெதிராக 159 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 188 ரன்களை குவித்தார் கேரி கேர்ஸ்டன். இன்னும் ஒரே ஒரு ரன் அடித்திருந்தால் உலக சாதனையை தொட்டிருக்கலாம். இரண்டு ரன்கள் அடித்திருந்தால் புதிய உலக சாதனையை படைத்திருக்கலாம். மறக்க முடியாத வருத்தம் அதுதான்.

நிதானமாக பந்துகளை சந்தித்து, பதட்டமில்லாமல் பதம்பார்ப்பதுதான் இவரது ஸ்டைல்.

## நடையா இது நடையா



இவர் என்ன சிரசாசனம் செய்கிறாரோ என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. உலக சாதனை படைத்து அசத்திக் கொண்டிருக்கிறார்.

என்ன சாதனை தெரியுமா? எல்லோரும் காலால் ஓடித்தான் சாதனை படைப்பார்கள்.

இவர் தனது கைகளால் ஓடி சாதனை படைத்திருக்கிறார்.

தலைகீழாக கைகளால் ஓடி 50 மீட்டர் (164 அடி) தூரத்தை எட்டினார். அதற்காக இவர் எடுத்துக்கொண்ட நேரம் 16.93 செக்கன்கள். 19 பெப்ரவரி 1994ம் ஆண்டில் இந்த உலக சாதனை நிகழ்த்தப்பட்டு, கின்னஸில் பதிவானது. இவரது பெயர் மார்க் கென்னி. அமெரிக்காவைச் சேர்ந்தவர். எப்படி பயிற்சி பெற்றார் என்பதும் சுவாரசியமான விஷயம்தான்.

அமெரிக்க செனட்டர் ஒருவரின் உதவியாளரான இவர், வேலை முடிந்து வீடு திரும்பும்போது தலைகீழாகத்தான் நடந்து செல்வாராம். பலர் கைகொட்டி கேலி செய்தனர். உலக சாதனை செய்தது மூலம் அவர்களது வாய்களை அடைக்கச் செய்துவிட்டார் இந்த வித்தியாசமான சாதனையாளர். என்னங்க, அசத்தல்தானே!



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்லவ றோட்டில் உள்ள சமஸ் அச்சகத்தில் நவம்பர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்